# உதயன்

விலை ரூபா 20
பக்கங்கள் 28

34°c - 26°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 128 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 20, சனிக்கிழமை 02.04.2016


இடிந்து விழுந்தது பெரும் பாலம்; கொல்கத்தாவில் 21 பேர் சாவு

பக். 14-15

## பால் விலை 10 ரூபாவால் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

பாலின் விற்பனை விலை நேற்று வெள்ளிக்கிழமை முதல் 70 ரூபாவில் இருந்து 80 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

பால் உற்பத்தியாளரின் உற்பத்திச் செலவை ஈடு செய்யும் முகமாக, பாலின் கொள்விலை தற்போது 62 ரூபாவில் இருந்து 67 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்பு பாலின் கொள் விலை

பக். 26

# திடீரென கொழும்பு வந்தார் அமெ. போர்க்குற்ற நிபுணர்

## வெளிவிவகார அமைச்சருடன் முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஏப்ரல் 2


அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்குப் போர்க்குற்றங்கள் மற்றும் இனப் படுகொலைகள் தொடர்பில் ஆலோசனை வழங்கும் பூகோள குற்றவியல் நீதிக்கான அலுவலகத்தின் சிறப்பு இணைப்பாளர் ரொட் புஜ்வால்ட் இலங்கைக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கொழும்புக்கு வருகை தந்துள்ள ரொட் புஜ்வால்ட், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுக்களில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் மற்றும் இலங்கை வெளிவிவகாரச் செயலர் சித்திராங்கனி வகீஸ்வரா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அமெரிக்க - இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவே இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாக அமெரிக்கத்

பக். 23



# அனல் மின்நிலையம் சம்பூரில் வேண்டாம்

## பொதுமக்கள் திரண்டு நேற்றுப் போராட்டம்

திருகோணமலை, ஏப். 2

சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தைக் கைவிடுமாறு வலியுறுத்தி, மூதூர் பசுமைக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் பேரணியிலும் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள்

பக். 23



# குடாநாட்டு ஆலயங்களில் மிருக பலிக்கு இனித் தடை

## யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்.குடாநாட்டிலுள்ள இந்து ஆலயங்கள் சிலவற்றில் மிருகங்களை வெட்டி வேள்வி நடத்தப்பட்டு வந்த நிலையில், அவற்றுக்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று முதல் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் ஆலயங்கள் சிலவற்றில் மிருக பலி கொடுத்து நடத்தப்படும் வேள்வியை உடனடியாகத் தடுத்து நிறுத்தும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, அகில இலங்கை சைவமகா சபையின் தலைவர் சிவக்கொழுந்து சோதிமுத்து, சட்டத்தரணி மணிவண்ணன் ஊடாக யாழ்.மேல் நீதிமன்றத்தில் தடையீட்டு எழுத்தாணை மனு தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு மீதான கட்டளையிலேயே யாழ். மேல் நீதிமன்று மேற்படி தடை உத்தரவை வழங்கியுள்ளது.

(விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

முச்சந்தி முரளி



இரகசியமா அலுவல் நடக்குது போல....

# நிரந்தரத் தீர்வு தராவிட்டால் முல்லை மீனவர் போராட்டம்

## மீன்பிடி அமைச்சரின் வருகை குறித்து கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர்

முல்லைத்தீவு. ஏப். 2

முல்லைத்தீவுக்கு இன்று வருகை தரும் மீன்பிடி அமைச்சர், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை முன்வைக்கத் தவறும் பட்சத்தில், நிச்சயமாக அரசுக்கு எதிரான தொடர் சாத்வீகப் போராட்டங்களை நடத்துவோம்.

இவ்வாறு அறிவித்துள்ளார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பிரச்சினை குறித்து மாவட்ட அரச அதிபர், மீனவ சம்மேளனத்தினருக்கும் ஜனாதிபதியின் செயலாளருக்கும் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து, மாவட்ட மீனவர்

பக். 26



# தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## ஏறாவூரில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.2

இலங்கையில் மூவின மக்களும் ஒன்றாக வாழக்கூடிய வகையில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூரில் நேற்று ஆடைத் தொழிற்சாலையைத் திறந்துவைக்கும் நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி தனது உரையில்,

பக். 26

# ஜனாதிபதியின் வருகைக்காக தயாராகும் வவுனியா வீதிகள்

## திடீர்ச் சோதனைகளும் அதிகரிப்பு



வவுனியா, ஏப். 2

ஜனாதிபதியின் வடக்குக்கான வருகையை முன்னிட்டு, வவுனியா மாவட்டத்தில் சந்தேகத்துக்கிடமான இடங்கள் மற்றும் சந்தேகமான வாகனங்களைப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சோதனை செய்து வருகின்றனர்.

அத்துடன் ஜனாதி

பக். 26

## வற் வரி அதிகரிப்பு இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 2

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 15 வீதமாக அதிகரிக்கப் படவிருந்த பெறுமதி சேர்வரி (வற்) மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கல்யாணி தஹநாயக்க இது தொடர்பில் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி மறு அறிவித்தல் வரும் வரை முன்னர் இருந்தது போன்று 11 வீதமாக பெறுமதி சேர்வரி இருக்கும்

பக். 26

# மீட்கப்பட்ட வெடிபொருள்கள் புலிகள் முன்னர் பாவித்தவை

## விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்கிறார் பதில் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, ஏப். 2

சாவகச்சேரிப் பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்கள் என்பன விடுதலைப் புலிகளினால் போர்க் காலத்தில் பயன்படுத்தப்பட்டவை என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்க

பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடாநாட்டு ஆலயங்களில் மிருகபலிக்குத் தடைவிதிப்பு

## யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்.குடாநாட்டிலுள்ள கோயில்கள் சிலவற்றில் மிருகங்களை வெட்டி வேள்வி நடத்தப்பட்டு வந்த நிலையில், அதற்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுத் தொடக்கம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

இறைச்சிக் கடைச் சட்டத்தின் கீழேயே இந்த வேள்விகளுக்கான ஆடு, கோழி என்பவற்றை வெட்டுவதற்கான அனுமதி வழங்கப்படுவதனால், ஆலயங்களுக்கு அத்தகைய அனுமதி வழங்குவது சரியானதா என்றும், மிருகபலி கொடுத்து வேள்வி நடத்தும் ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள் கோவில் நடத்துகின்றார்களா அல்லது இறைச்சிக்கடை நடத்துகின்றார்களா என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.குடாநாட்டின் ஆலயங்கள் சிலவற்றில் மிருகபலி கொடுத்து நடத்தப்படும் வேள்வியை உடனடியாகத் தடுத்து நிறுத்தும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, அகில இலங்கை சைவமகா சபையின் தலைவர் சிவக்கொழுந்து சோதிமுத்து சட்டத்தரணி மணிவண்ணன் ஊடாக யாழ்.மேல் நீதிமன்றத் தில் தடையீட்டு எழுத்தாணை மனுத் தாக்கல் செய்திருந்தார்.

வலி. வடக்கு, வலி. தெற்கு, வலி. தென் மேற்கு, வலி. மேற்கு மற்றும் கோப்பாய் பிரதேச சபைகளின் செயலாளர்கள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், தெல்லிப்பழை, சங்கானை, உடுவில், சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய பிரதேசங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோரை இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்து ஆலயங்களில் வேள்வி நடத்துவதை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், நிறுத்துவதற்கு இடைக்காலத் தடையீட்டு எழுத்தாணை பிறப்பித்து, மிருகபலி கொடுக்கும் வேள்விக்கு நிரந்தரத் தடையாணை ஏன் பிறப்பிக்கக் கூடாது என எதிர் மனுதாரர்களுக்கு அறிவித்தல் வழங்குமாறும் இந்த மனுவில் மனுதாரர் கோரியுள்ளார்.

இந்த மனு மீதான விசாரணைக்கு நீதிபதி இளஞ்செழியன் அனுமதி வழங்கியதையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை இந்த மனு மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அகில இலங்கை சைவ மகா சபையின் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சட்டத்தரணி மணிவண்ணன், மிருகபலி கொடுக்கும் வேள்வியைத் தடை செய்வதற்கான காரணங்களை மனுதாரர் சார்பில் தனது வாதத்தில் முன்வைத்தார்.

அவர் தனது வாதத்தில் தெரிவித்ததாவது:-

வலிகாமம் பிரதேசத்தில் உள்ள பிரதேச சபைகளுக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள இந்து ஆலயங்களில் எதிர்வரும் நாள்களில் வேள்வி என்ற பெயரில் ஆடு மற்றும் கோழி ஆகியனவற்றை வதை செய்து கொல்லப்படுகின்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மிருக வதையானது, இலங்கையின் பல சட்டப்பிரிவுகளை மீறுகின்ற செயலாகும். மிருக வதையானது, எமது பிராந்தியத்தில் உள்ள பெரும்பாலான மக்களின் மத உணர்வுகளுக்கும் சமய பாரம்பரியத்துக்கும் முரணானது.

மிருக பலிகொடுக்கும் வேள்வி நிகழ்வுகளைப் பார்ப்பதன் மூலமும், அதைப் பற்றி கேள்விப்படுவதன் மூலமும் பலரும் உளவியல் ரீதியாக மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். வலிகாமம் பிரதேசத்தில் உள்ள பிரதேச சபைகளின் அனுமதியுடனேயே மிருக பலி கொடுக்கும் வேள்விகள் நடத்தப்படுகின்றன. மிருகபலி கொடுக்கும் வேள்வியானது, இந்தப் பிரதேசங்களில் பெரியளவில் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துகின்றன.

எனினும் இந்தப் பிரதேசத்தின் சுகாதார நிலைமைகளுக்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரிகளும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரும், மிருகபலி கொடுக்கப்படும் வேள்விகளைத் தடுக்க எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் மிருக வதைக்கு எதிராகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதேநேரம் மிருகங்களைப் பாதுகாப்பதற்காகவும் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் கேலிக்கூத்தாக்கும் வகையில் இங்கு நடைபெறும் மிருகபலி கொடுக்கும் வேள்விகள் அமைந்திருக்கின்றன.

இந்த வேள்வி நடவடிக்கைகள் பொதுமக்களிடையே வன்ம உணர்வையும் மிலேச்சத் தன்மையையும் வளர்த்துவிடும் தன்மையைக் கொண்டிருக்கின்றது. ஆகவே, வேள்வியைக் கட்டுப்படுத்த வேண்டிய பொதுக் கடமை எதிர் மனுதாரர்களுக்கு உள்ளது. எனவே இந்த வேள்விகளில் பலி கொடுப்பதற்காக மிருகங்களைக் கொல்வதற்கான அனுமதியை எதிர் மனுதாரர்களான அதிகாரிகள் வழங்கக் கூடாது.

இந்த வழக்கு விசாரணைகள் நடைபெற்று நீதிமன்றத்தினால் இந்த விடயம் குறித்து தீர்மானிக்கப்படும் வரை, குறித்த எதிர் மனுதாரர்கள் மிருகங்களைப் பலி கொடுப்பதற்கான அனுமதி வழங்கக் கூடாது என்று தடை விதிக்கும் தடையாணையை இந்த நீதிமன்றம் கட்டளையிடவேண்டும். அது உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என சட்டத்தரணி மணிவண்ணன் தனது வாதத்தில் கேட்டுக்கொண்டார்.

மனுதாரர் தரப்பிலான சட்டத்தரணியின் கோரிக்கையைப் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன் அதற்கான இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்து தீர்ப்பளித்தார்.

அதில் நீதிபதி பல வினாக்களை எழுப்பியுள்ளார்.

கோவில்கள் இறைச்சிக் கடைச்சட்டத்தின் கீழ் இயங்குகின்றனவா? பிரதேச சபை இறைச்சிக்கடை சட்டத்தின் கீழ் கோவில்களில் வேள்வி நடத்த அனுமதியளிப்பது சட்டப்படி சரியானதா? கோவில் தர்மகர்த்தாக்கள் கோவில் நடத்துகின்றார்களா அல்லது இறைச்சிக் கடை நடத்துகின்றார்களா? பாடசாலையில், சந்தியில் , மக்கள் கூடும் மைதானத்தில் ஆடு, மாடு மற்றும் கோழி வெட்டுவதற்கு பிரதேச சபையினரும் சுகாதாரப் பணிமனை உயரதிகாரிகளும் அனுமதி அளிக்க முடியுமா? அவ்வாறு அனுமதி வழங்குவது குற்றச் செயல் அல்லவா?

கோவில்களில் மக்கள் கூடும் விழாவில் வேள்வி என்ற பெயரில் ஆடு, கோழி என்பவற்றைப் பலியெடுத்து, வெட்டி இறைச்சிக் கடைபோல் நடத்தி, அவற்றை அங்கிருப்பவர்களுக்கு விற்பனை செய்வது குற்றமில்லையா? இந்தக் குற்றத்தைப் புரியும் கோவில் தர்மகர்த்தாக்களை இறைச்சிக்கடைச் சட்டத்தின் கீழ் மற்றும் மிருகங்களைக் கொடுமைப்படுத்தும் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்கு நடத்த முடியுமா? என்று கேள்வி எழுப்பிய நீதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் நாட்டில் தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டாக, கலாசார விளையாட்டாக ஜல்லிக்கட்டு கருதப்பட்டாலும், அது சட்டப்படி விலங்கைக் கொடுமைப்படுத்துவதற்கு எதிரான சட்டத்தை மீறுகின்ற செயல் என ஜல்லிக்கட்டு வழக்கில் இந்திய உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது. எனவே சட்டத்துக்கு முரணாக எந்தச் செயலையும் நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து, ஜல்லிக்கட்டு மிருகங்களைக் கொடுமை செய்யும் விளையாட்டு என தீர்ப்பளித்து, ஜல்லிகட்டுக்கு எதிராகத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தத் தடையுத்தரவை இந்த வழக்கில் மன்று சுட்டிக்காட்டுகின்றது.

எனவே, இந்த நீதிமன்றம் இந்து ஆலயங்களில் மிருகங்களை அறுத்து வேள்வி நடத்தும் அனைத்து நிகழ்வுகளுக்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கின்றது. மிருகபலி கொடுக்கும் வேள்வி நடத்துவதற்கு அனுமதி கோரி விண்ணப்பம் செய்தால், அதற்கான அனுமதி வழங்கக் கூடாது என அனைத்துப் பிரதேச சபைகளுக்கும், சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும், சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சு செயலாளருக்கும் மன்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கின்றது.

இந்த உத்தரவுக்கு முரணாக எந்த இந்து ஆலயமாவது, மிருகபலி கொடுத்து வேள்வி நடத்தினால் அவ்வாறான ஆலயங்களின் அனைத்து தர்மகர்த்தா சபை உறுப்பினர்களுக்கும் எதிராக, நீதிமன்ற அவமதிப்பு குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்துள்ளார். (த-வ-4)

## கிணற்றிலிருந்து முதலை மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

பண்டத்தரிப்பில் வயல் கிணற்றிலிருந்து முதலை இளவாலைப் பொலிஸாரின் உதவியுடன் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால் மீட்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பில் 5 அடி நீளமான முதலை ஒன்றை இளவாலை பொலிஸாரின் உதவியுடன் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் பாதுகாப்பாகப் பிடித்தனர்.



கடந்த 5 நாள்களுக்கு முன்னர் அங்குள்ள வயல் கிணற்றில் முதலை ஒன்றை அப் பகுதி மக்கள் கண்டு அதனை அகற்றித் தருமாறு இளவாலைப் பொலிஸாரிடம் கோரியிருந்தனர்.

இளவாலைப் பொலிஸார் கிளிநொச்சியில் அமைந்துள்ள வன ஜீவராசிகள் திணைக்கள மாவட்ட அலுவலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியிருந்தனர். அதன்படி அவர்கள் பண்டத்தரிப்புக்குச் சென்று அதனை மீட்டனர். (த-4-107)

## வீதியைக் கடந்த மாட்டுடன் மோதி குடும்பஸ்தர் சாவு; மகன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.2

வீதியைக் கடந்து சென்ற மாடு திடீரெனத் திரும்பி வீதிக்கு வந்ததால் அதனுடன் ஓட்டோ மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் தந்தை ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மகன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தச் சம்பவம் மண்டைதீவு வீதியில் கடந்த புதன்கிழமை இரவு 11.30 அளவில் இடம்பெற்றுள்ளது. இதில் புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த [illegible] 60) என்பவரே உயிரிழந்தார். அவரது மகன் ஜெயச்சந்திரன் (வயது - 31)என்பவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இருவரும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று மீண்டும் மண்டைதீவு நோக்கி பயணித்துக் கொண்டிருந்துள்ளனர். இதன்போது மாடு ஒன்று வீதியைக் கடந்து சென்றது. ஆனால் அவ்வாறு வீதியைக் கடந்த இடத்தில் மதில் காணப்பட்டதால் மாடு தொடர்ந்து செல்ல முடியாத நிலையில் அதே வழியில் திரும்பி வீதியைக் கடந்துள்ளது. மாடு வீதியைக் கடந்துவிட்டது என்று நினைத்துத் தொடர்ந்தும் ஓட்டோவைச் செலுத்தியபோது மாடு திரும்பி மீண்டும் வீதியைக் கடந்ததால் ஓட்டோ குறித்த மாட்டுடன் மோதுண்டுள்ளது. இதனால் விபத்து ஏற்பட்டு ஓட்டோவைச் செலுத்திச் சென்ற தந்தையார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை மற்றும் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் ஆகியோர் விசாரணை மேற்கொண்டனர். (த-ஜ-4-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பிரதேச செயலாளராக பொறுப்பேற்றார் தயானந்தா

யாழ்ப்பாண பிரதேச செயலாளராக, வடக்குமாகாணமுன்னாள்காணிஆணையாளர் பொ.தயானந்தா நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாண பிரதேச செயலாளராக இதுவரை கடமையாற்றிய திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் மாவட்டச் செயலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சினால் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த இடமாற்றம் அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. மூன்று மாதங்களின் பின்னரே இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது.

யாழ். பிரதேச செயலகத்துக்கு முற்பகல் 11 மணியளவில் புதிய பிரதேச செயலாளர் பொ.தயானந்தா சென்றிருந்தபோது, அங்கு முன்னைய பிரதேச செயலாளர் திருமதி.சுகுணரதி தெய்வேந்திரம்அவரிடம்பொறுப்புக்களை ஒப்படைத்தார். இதனையடுத்து பொ.தயானந்தா கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதேவேளை, யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் தொடர்பில் கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-ஜ-5-10)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 01.04.2016 | வெற்றி வாரம் 1962 | சிவப்பு
வெற்றி இலக்கங்கள்
15 16 50 58
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,000,000/-
2016-04-03 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
SMS: DLB LOT LW 1919

நியத்த ஜய
450
01.04.2016
நீலம்
விஷேட வெற்றி இலக்கம்
1486
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ 10,000,000/-
வெற்றி இலக்கங்கள்
07 11 32 47 K
Web: www.dlb.lk
Tel: 011 4 824 824
05.04.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## யாழ் மாவட்ட அச்சகத்தார் இணையம் அங்குரார்ப்பண அழைப்பிதழ்

இடம்: கிறீன் கிறாஸ் ஹோட்டல், கிறீன் பலஸ் மண்டபம்
(ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.)
காலம்: 03.04.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணி

நிகழ்ச்சி நிரல்
- விருந்தினர் வரவேற்பு
- மங்கல விளக்கேற்றல்
- அக வணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- கௌரவ விருந்தினர் உரை
- நிர்வாகக் குழு தெரிவு
- புதிய இணைய தலைவர் உரை
- நன்றியுரை

பிரதம விருந்தினர்
கௌரவ C.V.K. சிவஞானம்
(பேரவைத் தலைவர் - வடக்கு மாகாண சபை)
கௌரவ விருந்தினர்
திரு. K. பூரணசந்திரன்
(முன்னாள் தலைவர் - Chamber of Commerce and Industries of Yalppanam)

அச்சக உரிமையாளர்கள் அனைவரும் இவ்வழைப்பினை தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, தங்களின் எதிர்கால நன்மை கருதி தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அனுசரணை:
நியூ கலிபோனியா பவுண்டேஷன்
075 98 71 302

## வெளிநாட்டில் உயர்கல்வி வேலைவாய்ப்புடன்

UK Collaboration
* University of East London
* Bedfordshire University
* Anglia Ruskin University
* Edinburgh Napier University
* University of Hertfordshire
* University of Portsmouth
* Brunel University
* Plymouth University

Australia Collaboration
* James Cook University
* Curtin University
* Macquarie University
* Deakin University
* La Trobe University
* Edith Cowan University
* University of South Australia

Swiss Collaboration
* HTMi - Hotel Tourism Management Institute
* European University

New Zealand Collaboration
* UCIC - University of Canterbury
* NTEC * Quantum College

USA , CANADA Collaboration

Study Hotel Management in Singapore & Malaysia with part time job

Malaysia Collaboration
* APU (APIIT)
* Taylor's University
* INTI University
* SEGI University
* KDU University

Singapore Collaboration
* James Cook University
* Curtin University * MDIS

Poland,Lithuania,Latvia,Cyprus
(Europe Countries ,Low Coursefee)

Study MBBS
Malaysia | India | Georgia |Latvia Russia| Bangladesh | China
Approved by SLMC
UK, ECFMG-USA , IMED
WHO & UNESCO

வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் .......

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
021 4926222 , 077 3013060

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



Spoken English
Veta Fluency Diploma

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Tue, Thu 8.30 p.m. Sat, Sun 2.00 p.m. Mon. Wed 4.30 p.m. | Tue, Thu 4.30 p.m. Sat, Sun 2.00 p.m. | Tue, Thu 10.30a.m. | Mon, Wed, Fri 2.00 p.m. | Sat, Sun 10.30a.m. |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

DMI COMPUTER EDUCATION
சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
IELTS
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு 100%
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்

DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

P. ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக,கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:
384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)
தொலைபேசி: 021 221 7944
கொழும்பு முகவரி:
19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208

(சி. 22235)
(12.18)

## தென்னிந்திய திருத்தல யாத்திரை

நாள்கள் - 16 யாத்திரிகர் - 10
ஆரம்பம் - 20.05.2016

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடாக திருத்தல யாத்திரை தரிசிக்கும் ஆலயங்கள்.

உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, மணக்குளவிநாயர், காணிப்பாக்கம் விநாயகர், திருப்பதி, சிதம்பரம், திருவெண்ணாமலை, காளகஸ்த்திரி, ஏகாம்பரேஸ்வரர், திருவானைக்காவல், திருவாரூர், திருவிடைமருதூர், திருவையாறு, தஞ்சாவூர், இராமேஸ்வரம், உத்திரகோசமங்கை, திருப்புலாணி, நவபாஷாணம், குருவாயூர், ஐயர்மலை, சிவன்மலை, பொற்கோயில், பத்மநாதசுவாமி, கொடுங்கலூர் பகவதி அம்மன், சுசீந்திரம், கபாலிஸ்வரம், பஞ்சவடி, அனந்தமங்கலம், ஆஞ்சினேயர், மதுரைமீனாட்சி, கன்னியாகுமரி, மைசூர் சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், ஸ்ரீரெங்கம், ஸ்ரீரெங்கபட்டிணம், சமயபுரம், மேல்மருவத்தூர் பிரம்மா கோயில், 9 நவக்கிரக ஆலயங்கள் தனித்தனியாக, திருநள்ளாறு சனீஸ்வரன் உட்பட ஆறுபடை வீடுகள் (திருச்செந்தூர், பழனி, பழமுதிர்சோலை, திருத்தணிகை, திருப்பரம்குன்றம், சுவாமிமலை) குன்றக்குடி, பைரவன்பட்டி பைரவர், காமாட்சி, வனத்திருப்பதி, திருக்கடையூர் அபிராமி உட்பட 60 இற்கு குறையாத ஆலயங்கள் தரிசிக்கலாம்.

முக்கியமாக கும்பகோணம் மகாமகம் குளத்தில் கும்பமேளா நடந்த இடத்தில் 90 நாள்களுள் நீராடினால் தோஷங்களும் பாவங்களும் நீங்கும் என்பது ஐதீகம் புனித குளத்தில் நீராட விஷேட ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

கட்டணங்கள் உட்பட மேலதிக விவரங்களை கேட்டு அறிந்து பதிவுசெய்யவும்

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் (ராஜன் - மகன்)
59.3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11
T.P: 0777 680 102, 0777 362 154
F.B.sridevisriranganathan.thuraiappa

## 2016 சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு...

இந்தியன் செலக்ஷனின்
இந்தியன் பஜார் வழங்கும்
மாபெரும் விசேட விலைக்கழிவுகள்



உங்களுக்குத் தேவையான திருமண பட்டுப் புடைவைகள் விதம் விதமான அழகிய சாறி வகைகள் மற்றும் அனைத்து வகையான ஆடைகளையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



சல்வார் துணிகள்
சில்க் 2 டொப் சல்வார் துணி ~~1500/-~~ 1000/-
சில்க் 3 டொப் சல்வார் துணி ~~2000/-~~ 1500/-
குண்டன் 2 டொப் சல்வார் துணி ~~1500/-~~ 1200/-
கொட்டன் 3 டொப் சல்வார் துணி (Special) ~~3000/-~~ 2500/-

இடம்: யாழ்.வீரசிங்க மண்டபம்.
காலம்: 30.03.2016 முதல் 15.04.2016 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அணிவகுப்புக்கு வரும் சந்தேக நபர்களுக்கு மூடிய உடை

அடையாள அணிவகுப்புக்காக நீதிமன்றங்களுக்குக் கூட்டிச் செல்லப்படும் சந்தேக நபர்களுக்கு உடலை முழுமையாக மூடும் உடையொன்றை அறிமுகப்படுத்துவதற்குச் சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு அழைத்துச்செல்லப்படும்சந்தேக நபர்களின் உடலை மூடுவதற்கு, விதிமுறையொன்றைக் கொண்டுள்ள உடையொன்று சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் இல்லாதிருப்பதன் காரணமாக, இந்தப் புதிய உடையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கடும் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டுள்ள சந்தேக நபர்களை, வேறு பாதாள உலக உறுப்பினர்களால் அடையாளம் காண இயலாதவாறு அழைத்துச் செல்வதே இந்தப் புதிய செயற்றிட்டத்தின் மேலுமொரு நோக்கமாக இருப்பதாகவும் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமான நிஸான் தனசிங்கவிடம் வினவியபோது–

அடையாள அணிவகுப்புக்கள் தொடர்பாக முன்னிலைப்படுத்தப்படுவதற்கு அழைத்துச் செல்லப்படும் சந்தேக நபர்கள், நீதிவான்கள் முன்னிலையில் நிறுத்தப்படும் வரையிலும் அவர்களை மூடி மறைத்துக்கூட்டிச்செல்வது சிறைச்சாலைகள் திணைக்களத்தினது பொறுப்பாகும். அந்தச் செயற்றிட்டத்துக்கு அவசியமான உடைகளை மஹர சிறைச்சாலையில் உள்ள கைதிகளைக் கொண்டு தயாரித்துக் கொள்ள அவசியமான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதா கவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ஐ-22)

## அறிவித்தல்
## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

சங்கரப்பிள்ளை கணேசலிங்கம்
கௌரவ பொதுச் செயலாளர்
புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயப் பரிபாலனசபை,
புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்,
புற்றளை, புலோலி தெற்கு, புலோலி.

**வழக்கு இல:- 18984 / L / 2016**

புலோலி தெற்கு, புற்றளைச் சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை சார்பாக
வழக்காளி

எதிர்

சின்னத்துரை சந்திரகுமார்,
ஸ்ரீ வல்லிபுரா போட்டோ
கந்த முருகேசனார் வீதி,
உபயகதிர்காமம்
புலோலி தெற்கு,
புலோலி.
எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளியால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் 18984 / L / 2016 என்ற இலக்க வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ள எதிராளிக்கு எதிராக அவ் வழக்கின் பிராதில் கோரியுள்ள நிவாரணங்களைக் கோரி கோப்பிடப்பட்டுள்ளது.

அவ்வழக்கில் குடியியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 16 இன் கீழான பகிரங்க அறிவித்தலினைப் பத்திரிகையில் பிரசுரம் செய்யுமாறு மன்று பிறப்பித்த கட்டளைக்கு இணங்க இவ்வழக்கில் அக்கறையுள்ள புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் இவ்வழக்கில் தோன்றி தமது உரிமையை நிலைநாட்டுவதற்கு ஏதுவாக இவ் அறிவித்தல் விடுவிக்கப்படுகின்றது.

இவ்வழக்கின் அடுத்த தவணையாக **06.04.2016** நியமிக்கப்பட்டுள்ளது.

**02ஆம் திகதி ஏப்ரல் மாதம், 2016**

| வரைபு,<br>திருமதி மரியா சிவலிங்கம்<br>வழக்காளியின் சட்டத்தரணி. | நீதிமன்றின் கட்டளைப்படி<br>பதிவாளர்<br>பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம். |
|---|---|

(ஏசி 16)(11,17,18)

## வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை
## மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
## ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 11**
**ஆதன இலக்கம் :- 144 (புதிய இலக்கம்)**
**நவாலி வீதி,**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/136 நவாலி**

வட்டாரம் 11, நவாலி வீதி, ஆதன இலக்கம் 144 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை " இடாம்பிலும் மறுபிரிவுகளும்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குளி 13.2 கொண்ட) இவ்வாதனமானது கொக்குவில் மேற்கு செல்லையா துரைசிங்கமும் பெண் பாக்கியமுமாகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் அரசடி நவாலி வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கணேசமூர்த்தி பெண் புஸ்பராணி என்பவருக்குக் குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் அவர்களால் எழுதப்பட்ட 783 ஆம் இலக்க 1984.08.01 ஆம் திகதிய அறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.ரி.பாலசுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 170/2016ஆம் இலக்க 2016.03.01 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது இடாம்பிலும் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு 02 குளி 13.2 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரியஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கணபதிப்பிள்ளை கணேசமூர்த்தி பெண் புஸ்பராணி என்பர் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

# நுரைச்சோலைக்கு நிலக்கரி எடுத்துச் செல்ல ரயில் பாதை

கொழும்பு,ஏப்.2

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியை எடுத்துச் செல்வதற்காக மாகோவில் இருந்து புத்தளம் வரை ரயில் பாதையொன்றை அமைப்பதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தயாராகி வருகிறது.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்துக்குத் தங்கு தடைகள் இன்றித் தொடர்ச்சியாக நிலக்கரி விநியோகத்தை மேற்கொள்ள வேண்டியிருப்பதன் அவசியத்தை முன்னிட்டே இந்த ரயில் பாதை மாகோவில் இருந்து புத்தளம் வரையில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கொழும்பின் சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தொடர்ச்சியான நிலக்கரி விநியோகம் கிட்டாதிருப்பதே நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் முகம் கொடுத்துள்ள பிரச்சினையாகும். ஆறு மாதங்கள் வரையில் மாத்திரமே நுரைச்சோலைக்குக் கடல் மார்க்கமாக நிலக்கரியை எடுத்துச் செல்ல வாய்ப்பமைகிறது. அதன் பின்னர் தரைமார்க்கமாகவே நிலக்கரி எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த வகையில் நாம் தற்போது பெருந்தெருக்கள் வழியாகவே நிலக்கரியைக் கொண்டு செல்கிறோம். அது தொடர்பாக முதலில் திருகோணமலையில் இருந்து பெருந்தெரு மார்க்கமாக நிலக்கரியை எடுத்துச்சென்று அதன் பின்னர் ரயிலில் நிலக்கரியை எடுத்துச்செல்வதற்கே,புதிதாகமாகோவில் இருந்து புத்தளம் வரையிலான 60 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ரயில் பாதையொன்றை அமைப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (த-ஐ-22)

## வட பகுதி பழமர பூங்கன்று விற்பனையாளர்களுக்கும் அலங்காரத் தாவர விரும்பிகளுக்குமான நற்செய்தி



ஹேலீஸ் நிறுவனத்தின் தரம் மிகுந்த இளையவளர்ப்பு முறையிலான கவண்டிஷ் வாழைக்குட்டிகள். ஆஸ்திரேலியாவில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்ட எமது வடபகுதி காலநிலைக்கு ஏற்ற Anigozanthus Kangaroo பூங்கன்றுகள்., பழ மரக்கன்றுகள் மற்றும் பல வர்ண பூங்கன்றுகள் தற்போது " ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் சென்ரர் " இல் விற்பனையாகின்றன.

**உங்கள் இல்லங்கள், அலுவலகங்கள், ஹோட்டல்கள் மற்றும் பாடசாலைகளை அழகுபடுத்த இன்றே ஹேலீஸ் சென்ரருக்கு விரையுங்கள் !**

அத்துடன் பழமர. பூங்கன்று விற்பனை முகவர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்கள் தங்களது பெயர்களை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பிட்ட எண்ணிக்கையானோரே பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட இருப்பதால் முன் பதிவுகளுக்கு விரையுங்கள்.......

(c 22417) (14,17,18)

Hayleys AGRICULTURE
**" ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் சென்ரர்"**
இல.87, பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 205 3997 / 077 728 8357

### வேலையாள்கள் தேவை
யாழ்.நகரில் உள்ள புடைவைக் கடைக்குப் பெண் வேலையாள்கள் தேவை.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 618 0450

### வீடும் காணியும் விற்பனைக்கு
மன்னார், மூர்வீதியில் (ஸ்ரேடியம் சந்தியில் இருந்து 25 மீற்றர் தூரம்) 6.5 பேர்ச் கொண்ட காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
077 958 3343

### தேவை
வட்டுக்கோட்டையில் இயங்கும் தனியார் மருந்தகத்துக்கு (Pharmacy ) பெண் உதவியாளர் (அனுபவம் உள்ள)தேவை.
076 995 1740

### விற்பனைக்கு
சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டையில் 5 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
076 995 1740

### காணி விற்பனைக்கு உண்டு
சாவகச்சேரி,கச்சாய் வீதியில் முக்கால் மைல் தூரத்தில் விநாயகர் சிலைக்கு முன் வீதியில் 30 யார் தொலைவில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
077 149 8506, 077 641 3739, 077 384 9328

### காணி விற்பனைக்கு உண்டு
ஆவரங்கால் சிவன் வீதியில், வைரவர் கோயிலுக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய 3½ பரப்புக் காணியுடன் வீடு வளவும், விற்பனைக்கு உண்டு.
077 921 7069, 0044 7772 994590 (லண்டன்)

### காணி விற்பனைக்கு
கொக்குவில் மேற்கு, K.K.S வீதி, முதலி கோயிலுக்கு அருகில் நிலப்பரப்பு 1¾ விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
076 702 3565

### வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணம் கொழும்பு Bus ஆசன பதிவகத்திற்கு வேலையாள்கள் தேவை. ஆண்கள் மட்டும். யாழ் நகருக்குள் இருப்பவர்கள் மட்டும்.
தொடர்பு : 021 492 3724

### வீடும் காணியும் உடன் விற்பனைக்கு
பாரதிவீதி, பத்தமேனி, அச்சுவேலியில் பிரதான வீதிக்கு அருகில் பழமரங்கள் நிறைந்த கிணறு, தொட்டி, நாலுபக்க மதில் கொண்ட வீடும் காணியும் (4பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.
077 736 0387,077 835 8660
பூ.தீபன்

### காணி விற்பனைக்கு
யாழ்.நல்லூரில் இராமலிங்கம் வீதி - அம்மன் வீதிக்கிடையில் "சந்திரசேகரர் வளவு" 1¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
071 133 3685

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
இல.67, மத்தியூஸ் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
077 072 4666
00479 951 5207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். விளையாட்டு மருத்துவ அலகின் மருத்துவருக்கு விரைவில் இடமாற்றம்

## வீரர்கள் பாடு இனிமேல் திண்டாட்டம்

விளையாட்டு மருத்துவ அலகுக்கென வடக்கு மாகாணத்தில் துறை சார்ந்த ஒரேயொரு மருத்துவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டும் இருக்கும் நிலையில், அந்த மருத்துவர் இடமாற்றத்தில் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 3 வருடங்களாக விளையாட்டு மருத்துவ அலகு இயங்கி வருகின்றது. விளையாட்டுக்களில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களும் மருத்துவச் சான்றிதழ் கட்டாயம் பெற்றிருக்கவேண்டும் என்று சுகாதார அமைச்சு கண்டிப்பான பணிப்புரை விடுத்து அறிவித்துள்ளது.

கடந்த சில வருடங்களில் மட்டும் மருத்துவப் பரிசோதனை அறிக்கை பெற்றிராத மாணவர்கள் போட்டியில் ஈடுபட்டு உயிரிழந்த நிலைமை காரணமாகவே, விளையாட்டில் ஈடுபடுபவர்கள் கட்டாயம் மருத்துவ அறிக்கை பெறவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை விளையாட்டு மருத்துவ அலகு மூலமாக நூற்றுக் கணக்கானவர்கள் மருத்துவ பரிசோதனையைப் பெற்றுள்ளனர். எனினும் மருத்துவர் இடமாற்றம் பெற்றுச் செல்வது வைத்தியசாலையிலுள்ள அந்தப் பிரிவையே இழுத்து மூடுவதாக அமைந்துவிடப் போகிறதா என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது.

விளையாட்டு மருத்துவ அலகை இயக்குவதற்கு விளையாட்டு மருத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களே நியமிக்கப் படவேண்டும். அநுராதபுரம் வைத்தியாலையிலுள்ள இதே தகைமையுடைய மருத்துவர் இடமாற்றம் பெற்றதால் குறித்த அலகு மூடப்பட்டது. குருநாகல் வைத்தியசாலையிலுள்ள குறித்த பிரிவு பல மாதங்களாகப் பூட்டப்பட்டுள்ளது. உரிய தகைமையுடைய மருத்துவர் இல்லாமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல பிரிவுகள் உருவாகி வரும் நிலையில் விளையாட்டு மருத்துவ அலகை மட்டும் மூடவேண்டிய நிலை உருவாகுமா என்றும் கேள்வியெழுப்பப்படுகிறது. இது வைத்தியசாலைக்குள் இருக்கும் முரண்பாடு என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியுடன் தொடர்பு கொண்டபோது, கடிதம் தனக்கு இன்று (சனிக்கிழமை) கிடைக்கும் போதுதான் தெரிந்துகொள்ள முடியும் – என்றார். (த-வ-4)

# பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்த இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.2

அருகில் உள்ள உறவினர் வீட்டுக்கு தொலைக்காட்சி பார்க்க சென்ற இளைஞன், நிலமட்டத்தோடு உள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் உரும்பிராய் மேற்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் ஜீவரட்ணம் பிரசன்னா (வயது-34) என்ற இளஞனே உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டுக்கு அருகில் இருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ள தனது உறவினர் வீட்டுக்குத் தொலைக்காட்சி பார்க்க சென்று வருவதாக கூறி சென்றுள்ளார்.சென் றவர் நீண்ட நேரமாக வீட்டுக்கு வராததை அடுத்து உறவினர்கள் தேடியுள்ளனர். இந்த நிலையில் மேற்படி இளை ஞன் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் சடலத்தினை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்ட விசாரணைகளின் பின், சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(த-வ-107)




# நீதிமன்றுக்குள் இலஞ்சம் கோரிய பொலிஸ் சார்ஜன்ட் மாட்டினார்

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்.நீதிமன்றத்தின் உள்ளே வைத்து இளைஞன் ஒருவரிடம் இலஞ்சம் கேட்ட குற்றச்சாட்டில் நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தர் (சார்ஜன்ட்) கைது செய்யப்பட்டுள்ளார்.

பலமுறை இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்ததாகக் கூறப்பட்ட நிலையில் நேற்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நீதிவான் மன்றில் நீதிவானின் ஆசனத்துக்கு இடதுபுறமாக நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருப்பர். போக்குவரத்து வழக்கு ஒன்றுக்கு நீதிமன்றம் சென்றிருந்த இளைஞனிடம் குறித்த பொலிஸார் 500 ரூபாவை லஞ்சமாகக் கேட்டுள்ளார். இதன்போதே அவர் கைது செய்யப் பட்டார்.

ஓட்டோ சாரதியான குறித்த இளைஞன், நீதிமன்றில் அபராதத் தொகையைச் செலுத்தியுள்ளார். பின்னர் அதன் பற்றுச் சீட்டைக் காட்டி சாரதி அனுமதிப் பத்திரத்தைத் தருமாறு கேட்டுள்ளார். அதனைத் தருவதாக இருந்தால் 500 ரூபா தருமாறு குறித்த பொலிஸ் உத்தியோகத் தர் கேட்டுள்ளார்.


இதனால் குறித்த விடயம் தொடர்பில் இளைஞன் நீதிமன்ற உத்தியோகத்தர்களிடம் தெரிவித்ததையடுத்துப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் முன்னரும் இத்தகைய சம்பவங் களில் ஈடுபட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றுக்கு வெளியே பொலிஸார் லஞ்சம் கோருகின்றனர் என்று பலமான குற்றச்சாட்டு இன்னும் இருந்து கொண்டிருக்கும் நிலையில், நீதிமன் றின் உள்ளே வைத்தே லஞ்சம் கேட்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுப் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(த-வ-4-103)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணீர் அஞ்சலி

கலைமகள் வீதி, தையிட்டி
காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும்
லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி மகேஸ்வரி சின்னத்துரை
அவர்கள் 29.03.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சறோ, ரவி, செல்வம் (மணி குடும்பம்)
ஆனைக்கோட்டை. (ஏ.சி 23) (13.17.18)

விண்ணக வாழ்வில்
10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 07 . 1924
மறைவு 02 . 04 . 2006



தம்புசொலமன் அந்தோனிப்பிள்ளை

இவ்வுலகிலிருந்து உமது பாதத்தண்டை
நீர் அழைத்துக்கொண்ட உமது அடியான்

தம்பு சொலமன் அந்தோனிப்பிள்ளை இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அறிந்தும் அறியாமலும் செய்துகொண்ட பாவங்களை யெல்லாம் மன் னித்து உமது பேரின்ப வான் வீட்டில் நித்திய சாந்திபெற இன்று (2016.04.02) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து அன்னாருக்காக ஜெபிக்கும்படி தாங்களை அன்புடன் அழைக்கின் றோம்.

துயருடன் :
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

58, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9361 (ஏ.சி.22) (13.18)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் வேலுப்பிள்ளை
ஜெயசீலன்

தோற்றம் : 03.07.1970
மறைவு : 04.03.2016

கடந்த 04.03.2016 இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வேலுப்பிள்ளை ஜெயசீலன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (03.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தாங்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"பழையகமம்"
முரசுமோட்டை, பரந்தன். (70344) (13.18)
குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வையத்துள் 24 - 10 - 1940
தெய்வத்துள் 15 - 03 - 2015



அமரர்
பாலசந்திரன் கோகிலாம்பாள்

என்றும் உங்கள் நினைவில்
அமைதியாய் அழுகின்றோம்
நின் ஆத்ம சாந்திக்காய்

" கோகில பாஸ்தான்"
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (70258) (12.17.20)
குடும்பத்தினர்.


# வித்தியா வழக்கில் கைதான இருவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

புங்குடுதீவு மாணவி வித்தியா வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் இறுதியாக வெவ்வேறு தினங்களில் கைது செய்யப்பட்ட 2 பேருக்கும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் ஏற்கனவே 10 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களைவிட மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கண்கண்ட சாட்சியாகப் பொலிஸாரால் கூறப்படுகின்றபோதும், நீதிமன்றில் அதற்குரிய எந்தவித ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

உதயசூரியன் சுரேஷ்குமார், தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோரே இறுதியாகக் கைது செய்யப்பட்டவர்களாவர். அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றுப் பதில் நீதிவான் இ.சபேசன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போதே குறித்த இரண்டு சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. இதுதவிர ஏற்கனவே கைது செய்யப்பட்ட 10 பேருக்கும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-4)

# நஞ்சருந்திய குற்றவாளி சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், ஏப். 2

சிறுமி ஒருவரைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட குற்றத்துக்கு யாழ். மேல் நீதிமன்றினால் தண்டனைத் தீர்ப்பு வழங்கவிருந்த நிலையில், நஞ்சருந்திய முதியவரான எதிரி, சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார் என யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் குறித்த குற்றத்துக்காக, அவருக்கு 15 வருடங்கள் கடுழிய சிறைத் தண்டனை யாழ்.மேல் நீதிமன்றினால் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.

கரணவாய், கரவெட்டியைச் சேர்ந்த கந்தையா சித்திவிநாயகம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பதின்ம வயதுச் சிறுமி மாலை கட்டுவதற்குப் பூ எடுப்பதற்காகச் சென்றபோது, வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதற்காகச் சித்திவிநாயகம் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுவழக்குத்தொடரப்பட்டது.

குறித்த வழக்கின் தீர்ப்புக் கடந்த 14 ஆம் திகதி வழங்கப்படவிருந்த நிலையில் எதிரியான சித்திவிநாயகம், அன்றைய தினம் நஞ்சருந்தி மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் கடந்த 18 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் குறித்த வழக்கின் தீர்ப்பு யாழ். மேல் நீதிமன்றினால்கடந்தபுதன்கிழமைவழங்கப்பட்டபோது, சித்திவிநாயகத்துக்கு 2குற்றச்சாட்டுகளுக்கும் 15 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார். (த-வ-4)

# சர்வாவுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம். ஏப். 2

இராமநாதன் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட வழக்கில் சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குமாரு சர்வானந்தனுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது, அவர் கடந்த 18 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டு மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கப்பட்டபோது சர்வா நீதிமன்றுக்கு கொண்டு வரப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிவான் அவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, சர்வா நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவரைக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் அலைபேசியில் படம் பிடித்துள்ளார் எனச் சர்வாவின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

நீதிமன்ற வளாகத்தினுள் நின்ற குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்றுக்கு வரவழைக்கப்பட்டு அவரது அலைபேசி பெறப்பட்டு நீதிவானால் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் சர்வாவுடன் தொடர்புடைய படம் எதுவும் காணவில்லை எனத் தெரிவித்த நீதிவான், தற்போதைய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் குறித்த படம் அழிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பரிசோதிக்க நீதிமன்றம் அனுமதி வழங்குவதாகத்தெரிவித்தார்.

இதன்போது சர்வாவின் சட்டத்தரணி அதற்கு அவசியம் இல்லையெனவும் தனது கட்சிக்காரரைப் பற்றி முகநூல்களில் மிகவும் தரக்குறைவாகத் தகவல்கள் வெளியாவதால் பொலிஸ் படம் எடுத்திருக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

(த-4-9)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பொன்னுத்துரை கனகரத்தினம்

தோற்றம் 23.11.1944
மறைவு 02.04.2015

ஆண்டு ஒன்று கடந்தாலும்
என்றும் எம் இதயத்தில் வாழும்
அப்பாவுக்கு எமது அஞ்சலிகள்

பிரிவால் துயருறும்...
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சகோதரி (வே.இரத்தினம் -கனடா)

நீர்வேலி தெற்கு, நீர்வேலி (ஏசி 20)(11.17.18)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09.11.1920
ஆண்டவன் அடியில் 09.05.1988
திதி: ஷஷ்டி (29.04.2016)

அன்னை மடியில் 30.07.1930
ஆண்டவன் அடியில் 05.04.2013
திதி: தசமி (02.04.2016)



திரு. நாகலிங்கம் பாலகிருஷ்ணர்
திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணர்

பெற்றோர் உங்களின் பிள்ளைகளாய் பிறந்ததற்கு - நாம்
பெருந்தவம் செய்திருந்தோம் - இவ்
உலகில் நல்லோராய் - கற்றோராய் நாம் வாழ்வதற்கு
உங்களைத் தந்து எங்களைக் காத்தீர்கள்! - எமக்கு
நீங்கள் காட்டிய சத்தியப் பாதை தனில்
எங்கள் நித்தியப் பயணம் தொடரும்.......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[illegible] (ஏ.சி 15) (13.18)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 இலட்சம் போத்தல் கள் இவ்வருடத்தில் உற்பத்தி

## பனை தென்னை வள சங்கங்கள் திட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.2
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் இந்த வருடம் இருபது இலட்சம் போத்தல்கள் வரையில் கள் அடைக்கப்படும். இதற்கான நடவடிக்கையில் சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

> கடந்த ஆண்டில் அடைக்கப்பட்ட போத்தல் கள்ளுக்கு வருட இறுதியில் கிராக்கி ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பருவப் பெயர்ச்சியின்போது கள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், கள்ளைப் பாதுகாப்பாக போத்தலில் அடைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டிலும் சுமார் இருபது இலட்சம் வரையிலான போத்தல்களில் கள் அடைக்கப்பட்டன. இந்த ஆண்டிலும் அதே தொகையில் இந்தப் போத்தல் கள் அடைக்கப்படவுள்ளன.

ஏற்கனவே அடைக்கப்பட்ட போத்தல் கள் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும், ஏற்றுமதி செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டில் அடைக்கப்பட்ட போத்தல் கள்ளுக்கு வருட இறுதியில் கிராக்கி ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-ற-ஜ-17)

## ஞாபகார்த்த மண்டப திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.2
அல்வாய் மெதடிஸ்த திருச்சபையின் நூற்றாண்டு விழாவும் நன்றி செலுத்தும் வழிபாடும், புதிதாக அமைக்கப்பட்ட ஆழ்வாப்பிள்ளை ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழாவும் அல்வாய் திருச்சபையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அருட்திரு எஸ். எஸ் ரெரன்ஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
(த-ஜ-422)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ். வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் திங்கட் கிழமை மாலை 4 மணிக்கும் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக பாடசாலை அதிபர் பு. பஞ்சாட்சரம் தெரிவித்துள்ளார்.
பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ஜ-ரி)

## செயற்கைக் கை வழங்கும் செயற்றிட்டம் விரைவில்

யாழ்ப்பாணம்,ஏப்.2
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தால் போர் மற்றும் இயற்கை இடர்களால் முழங்கையின் கீழ் கைகளை இழந்தவர்களுக்கு செயற்பாட்டுத் திறனுடைய செயற்கைக் கை வழங்கும் திட்டத்தின் பயனாளிகளின் விவரங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
ஆஸ்திரேலியா றோட்டறிக் கழகத்தில் அங்கம் வகிக்கும் வைத்திய நிபுணர்களால் கைகள் பொருத்தும் நிகழ்வுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெறவுள்ளன.
பதிவுகளை மேற்கொள்ள விரும்பும் பயனாளிகள் 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் அல்லது 021-2216222 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-ஜ-ரி2)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை குழந்தைகள் விடுதிக்கு ஒரு தொகுதி பொருள்கள் நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டன. ஐக்கிய இராச்சியத்திலிருந்து சொந்த இடத்துக்கு வருகை தந்துள்ள சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி தங்கராஜா குடும்பத்தினர் இந்தப் பொருள்களை பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர். (த-ஜ-9)

## கமலாசனி வித்தியாலயத்துக்கு புதிதாக சுற்றுமதில் அமைப்பு

### பழைய மாணவனின் நிதிப் பங்களிப்பில்

சாவகச்சேரி,ஏப்.2
தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த விடத்தற்பளை, கமலாசனி வித்தியாலய வளாகத்தைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டு வருகிறது.
வித்தியாலயத்தின் பழைய மாணவனும், சட்டத்தரணியுமான கதிரேசு சிவசுப்பிரமணியம் தனது சொந்தச் செலவில் இந்த மதிலை அமைத்து வருகிறார்.
மதில் அமைக்கும் பணிகள் விரைவில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுவதால் விரைவில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படுமென வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தெரிவித்தார்.
இதுவரை காலமும் வித்தியாலய வளாகத்தைச் சுற்றி முட்கம்பி வேலி இருந்ததால் கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(த-ஜ-9)

## விளாவெளி இந்து மயானத்தை புனரமைக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.2
கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அபிவிருத்தி செய்யப்படாமையாலும், சடலங்களைத் தகனம் செய்ய முடியாதவாறு எரிகொட்டகையும் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட பண்டத்தரிப்பு விளாவெளி இந்து மயானத்தை துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வலி.தென் மேற்கு பிரதேசசபைச் செயலர் தெரிவித்துள்ளார்.
ஆரம்ப காலம் தொட்டு வலி. மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த மேற்படி இந்து மயானம் உரிமைப் பிரச்சினை காரணமாக 15 வருடங்களுக்கு முன் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.
சுமார் 40 பரப்பு விஸ்தீரணம் கொண்ட இந்த மயானத்தைப் பண்டத்தரிப்புப் பட்டினத்திலுள்ள நிற்சாமம், சாந்தை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, வடலியடைப்பு, சில்லாலை, பிரான்பற்று ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.
வலி.மேற்கு பிரதேச சபையிடம் இருந்து வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு மாற்றப்பட்ட பின்னர் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளும் இடம்பெறாமையால் மயானம் தற்போது பற்றைக் காடாகக் காட்சியளிக்கின்றது.
தகனம் செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த கொட்டகையின் கூரை சேதமடைந்த நிலையில் இருப்பதால் மழை காலங்களில் சடலங்களைத் தகனம் செய்வதில் சிரமங்கள் காணப்பட்டன.
அதனால் மயானத்தை மழை காலம் ஆரம்பமாகும் முன்னர் அபிவிருத்தி செய்துதருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.
இந்தவிடயம் தொடர்பாக வலி. தென்மேற்கு பிரதேசசபை செயலரிடம் கேட்டபோது- இரண்டு தினங்களுக்கு முன்னதாக மயானம் புனரமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் கூடிய கடிதம் எமக்குக் கிடைத்துள்ளது.
இதனைத் தொடர்ந்து மயான அபிவிருத்திக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டு துப்புரவு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.-என்றார்.
இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த பண்டத்தரிப்பு விளாவேளி இந்துமயானத்தின் அபிவிருத்திக் குழுவின் செயலாளர் சி.மகேந்திரன், கடந்த 2008ஆம் ஆண்டில் குறித்த மயானம், நிறுவனம் ஒன்றின் உதவியுடன் திருத்தப்பட்டது.
தற்போது பற்றைகள் அதிகமாக வளர்ந்துள்ளதால் இந்த மயானத்தை புனரமைக்கும் பணிகள் மயான அபிவிருத்திக் குழுவின் நிதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இரண்டு பிரதேச சபைகளின் எல்லையில் இருப்பதால் எவர் அதனை நிர்வகிப்பது என்ற பிணக்குடன் காணப்படும் இந்த மயானத்தில், அபிவிருத்திக் குழுவே இரண்டு பிரதேசசபை பிரதிநிதிகளையும் உள்ளடக்கிச் செயற்படுகின்றது.
இன்றும் சிலர் மயானத்தை வலிமேற்கு பிரதேசசபையுடன் இணைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். மயானத்துக்கான பாதுகாவலர் எவரும் இல்லை. எனவே அதிக பொருட் செலவில் அமைக்கப்பட்ட மயானத்திற்கான இரும்புக் கதவு சில விசமிகளால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. எனினும் தற்போது மயானத்தை துப்புரவு செய்து அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.-என்றார்.
(த-ற-ஜ-ரி5.115)

## கூட்டுறவுச்சங்க அங்கத்தவருக்கு இரண்டு இலட்சம் ரூபா இழப்பீடு

யாழ்ப்பாணம்,ஏப்.2
வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சகாய நல நிதியத் திட்டத்தின் கீழ் விபத்தில் சாவடைந்த அங்கத்தவர் ஒருவருக்கு இழப்பீட்டு நிதியாக இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.
வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவரும், சமாசத்தின் சகாய நல நிதியத்தின் உறுப்பினருமான த.தவச்செல்வன் கடந்த வருட இறுதியில் தொழில் நிமித்தம் சென்ற போது, தவறுதலாக நீரில் மூழ்கிச் சாவடைந்தார்.
அவரது குடும்பத்துக்கு இழப்பீட்டு நிதியாக சகாய நல நிதி மூலம் இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த இழப்பீட்டு நிதி இறந்தவரின் மனைவியிடம் அண்மையில் வழங்கப்பட்டது.
சமாசத்தின் தலைவர் சகாய நலநிதியக் குழுவின் உறுப்பினரான என்.கணேசனால் இந்த நிதி கையளிக்கப்பட்டது. இந்த இழப்பீட்டு நிதி கையளிப்பின் போது சகாயநல நிதிக்குழுவைச் சேர்ந்த செ.செல்வராசா, வ.இராசலிங்கம், க.சுதாகரன், வ.சிவகுமார், ந.துளசிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(த-ற-ஜ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பிரஜைகள் குழுவில் தொடர்ந்தும் நிலவும் குழப்பம்

## புதிய நிர்வாகத் தெரிவில் சிக்கல்

வவுனியா, ஏப்.2

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவில் தொடர்ந்தும் குழப்பம் நிலவி வருகின்றது. புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அப்படியானதொரு நிர்வாகத் தெரிவு இடம்பெறவில்லை என்று, வவுனியா பிரஜைகள் குழுவின் முன்னாள் தலைவர் தேவராஜன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவில் அண்மைக் காலமாக குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. தமிழ் மக்கள் பேரவையில் வவுனியா பிரஜைகள் குழு இணைந்து கொண்டமை தொடர்பிலேயே இந்தக் குழப்பங்கள் ஏற்பட ஆரம்பித்திருந்தன. பிரஜைகள் குழுவின் தலைவராகச் செயற்பட்ட தேவராஜன் அவரது தனிப்பட்ட விருப்பில் - பிரஜைகள் குழுவுக்கு அறிவிக்காமல் தமிழ்மக்கள் பேரவையில் இணைந்து கொண்டதாக உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியிருந்த நிலையில், தான் அவ்வாறு செயற்படவில்லை என்று தேவராஜன் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னர் பிரஜைகள் குழுவின் முன்னாள் தலைவர் தேவராஜனின் அழைப்பில், நிர்வாகக் குழுக் கூட்டம் இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதும், இறுதி நேரத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை. இதனால் கூட்டம் நடைபெறவில்லை. தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் பங்கு பற்றியதால் பிரஜைகள் குழுக் கூட்டத்தில் தன்னால் பங்குபற்ற முடியவில்லை என்று தேவராஜன் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை வவுனியா பிரஜைகள் குழுவின் கூட்டத்துக்கு தேவராஜன் அழைப்பு விடுத்திருந்தார். கூட்டத்தில் அவர் கலந்து கொண்டிருந்த நிலையில், புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதன் போது, தான் கூட்டத்திலிருந்து வெளியேறுவதாகத் தெரிவித்து பிரஜைகள் குழுவின் முன்னாள் தலைவர் தேவராஜன் வெளியேறிச் சென்றிருந்தார்.

அவர் வெளியேறிச் சென்ற பின்னர் கூட்டம் இடம்பெற்று புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பில் கருத்துத் தெரிவித்த தேவராஜன், 10 பேர் சேர்ந்து பிரஜைகள் குழுவாக இயங்க முடியாது. பிரஜைகள் குழுவின் கூட்டம் மாத இறுதி வாரத்தில் இடம்பெறும். அந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுபவர்களே பிரஜைகள் குழுவாகச் செயற்படுவார்கள் என்று குறிப்பிட்டார்.

கடந்த கூட்டத்தில், வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவராக கோ.ராஜ்குமாரும், உப தலைவராக நா.நடராசாவும், செயலாளராக தி.நவராஜாவும், உப செயலாளராக கு.இராஜேந்திரகுமாரும், பொருளாளராக திருமதி பே.பாலேஸ்வரியும், ஊடகப் பேச்சாளராக அ.ஈழம் சேகுவேராவும், குழுவின் இணைப்பாளராக எஸ்.றொஹான் ராஜ்குமாரும், நகரப்பகுதி இணைப்பாளராக த.கோணேஸ்வரனும், கல்மடு மற்றும் பூம்புகார் பகுதிகளின் இணைப்பாளராக க.பழனிநாதனும், நெடுங்கேணிப் பிரதேச இணைப்பாளராக திருமதி கா.ஜெயவதனியும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக புதிய நிர்வாகக் குழு விடுத்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-ஜ-5-21-402)

## தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் செயற்பாடு மன்னாரில் ஆரம்பம்

மன்னார், ஏப்.2

தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப்படும் நிலையில்,மன்னார் மாவட்டத்தில் நுளம்பு உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளுக்கு எச்சரிக்கை அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், நடைமுறைப்படுத்தத் தவறின் உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வி.ஆர்.சி. லெம்பட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

டெங்கு ஒழிப்பு வாரத்தை ஒட்டி மன்னார் அரச அதிபரின் வழிகாட்டலின் கீழ் மன்னார் பிரதிப் பிராந்திய சுகாதார ஒருங்கிணைப்பாளர் எச்.றோய், பிரதி வைத்திய சுகாதார அதிகாரி சமரசிறி மற்றும் கடற்படையினர், பொலிஸார், இராணுவம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகள் டெங்கு தடுப்பு வேலைத் திட்டத்தில் பங்குபற்றுகின்றனர்

இவர்கள் வீடுகளுக்கு வரும் போது மக்களின் ஒத்துழைப்பு அவசியமாக உள்ளது. இதற்கமைவாக கடந்த செவ்வாய்க்கிழமை முதல் டெங்கு தடுப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வேலைத்திட்டம் தொடர்ச்சியாக நான்கு நாள்கள் நடைபெறவுள்ளன. இதன்படி கடந்த செவ்வாய்க்கிழமை பனங்கட்டு கொட்டு, எமில் நகர், சின்னக்கடை, பெற்றா, ஜரியகடை பகுதியிலும், அதே போன்று கடந்த புதன்கிழமை மூர்வீதி, உப்புக்குளம், சாவற்கட்டு ஆகிய கிராமங்களிலும், நேற்று முன்தினம் வியாழக்கிழமை எருக்கலம்பிட்டியிலும் டெங்கு ஒழிப்பு ஏற்பாடுகள் நடைபெற்றன. அதேபோன்று நேற்று பேசாலையிலும், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற டெங்கு தடுப்பு நடவடிக்கையின் போது 93 நபர்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி குறித்த அடையாளம் காணப்பட்ட இடங்களைச் சுத்தப்படுத்துவதற்கு மூன்று நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளன.

மூன்று நாள்களுக்குள் குறித்த இடங்களைச் சுத்தப்படுத்தத் தவறும் பட்சத்தில் குறித்த நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

(த-ற-ஜ-21)

### குருதித்தான நிகழ்வு

வவுனியா றோட்டறக் கழகத்தின் ஏற்பாட்டில் குருதித்தான நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து நண்பகல் ஒரு மணி வரை வவுனியா வேப்பங்குளம் கிராமசேவகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(த-ஜ-ரி)

### கல்வியியலாளன் ஆய்விதழ் வெளியீடு

கல்வியியலாளன் ஆய்விதழின் நான்காம் பாகம் வெளியீடு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தேசிய கல்வியியற் கல்லூரித் தலைவர் எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(ஜ-ரி4)

## மின்சார நுகர்வோர் உரிமை விழிப்புணர்வு வவுனியாவில்

வவுனியா,ஏப்.2

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் மின்சார நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய விவரம் அடங்கிய விதிக் கோவைகளின் விநியோகமும், விழிப்புணர்வுநிகழ்வும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இடம்பெற உள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் வி.விமலாதித்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெற உள்ள நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நிர்வாகக் கிராம அலுவலர்கள் கலந்து கொள்வர்.

மின்சார நுகர்வோரின் உரிமைகள் மற்றும் கட



மைகள் பற்றிய விபரம் அடங்கிய விதிக் கோவை ஆவணத்தை அனைத்துக்கிராம அலுவலர்களின் காரியாலயத்திலும் மக்கள் பார்வைக்கு வைப்பதற்காகவும், நிர்வாகக் கிராம அலுவலர்கள் ஊடாக சமூகத்தில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிர்வாகக் கிராம அலுவலர்கள் ஊடாக விநியோகிக்கப்படும் இந்த விதிக் கோவை ஆவணம் ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகத்திலும், பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

நிகழ்வில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நுகர்வோர் விவகாரங்கள் பிரிவுப் பணிப்பாளரான வை. எல்.பாறூக், பிரதிப் பணிப்பாளரான யசந்த ரதுவிதான மற்றும் பரிசோதனைப் பிரிவின் உதவிப் பணிப்பாளரான சி.கிரிஷானந்த் ஆகியோர் கலந்துகொள்வர்.

(த-ஜ-21)

## சமூக சேவைகள் திணைக்களத்துக்கு கிளிநொச்சியில் சொந்தக் கட்டடம்

### நேற்று முதல் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஏப்.2

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இயங்கி வந்த மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட அலுவலகம் நேற்றுத் தொடக்கம் அதன் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் 7 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மாவட்ட அலுவலகம் அண்மையில் மாகாண சமூக சேவைகள் அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந்தக்கட்டடத்தில் நேற்றுத் தொடக்கம் மாவட்ட சமூக சேவைகள் திணைக்களச் செயற்பாடுகள் இடம்பெறுமெனவும் சமூக சேவைகள் பகுதியுடன் தொடர்பு கொள்ளும் பொதுமக்கள் புதிய அலுவலகத்துக்கு வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டு ள்ளது.

(த-ஜ-9)

## உலக முட்டாள்கள் தினத்தில் புகைப்பிடிப்போர் பிறந்த நாள்

வவுனியா,ஏப்.2

உலக முட்டாள்கள் தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக புகைப்பிடிப்பவர்களுக்கு இன்று பிறந்த நாள் எனத் தெரிவித்து வவுனியா சுகாதாரத் திணைக்களத்தினரால் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று நேற்று இடம் பெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வானது நேற்றுக் காலை வவுனியா நகரப் பகுதியில் நடைபெற்றிருந்தது.

இதன்போது உழவு இயந்திரம் ஒன்றில் சிகரெட் புகைப்பவர்களுக்கு இன்று பிறந்த நாள் எனக் குறிப்பிட்ட பதாகைகள் தொங்க விடப்பட்டு கேக் போன்று வடிவமைக்கப்பட்ட பெட்டி ஒன்று வைக்கப்பட்டு வவு னியா நகரைச் சுற்றி ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. அத்தோடு இன்னும் சிகரெட் பிடிக்கும் உங்கள் சிலருக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் என்று அச்சிடப்பட்ட சுவரொட்டிகளும் நகரப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன.

இது தொடர்பாக உண்மையிலேயே சிகரெட் புகைப்பவர்கள் முட்டாள்கள் எனச் சமூகம் அடையாளப்படுத்தத் தொடங்கிவிட்டது. ஏமாறுபவர்கள் கொஞ்சம் விழிப்படைய வேண்டும். இந்த வருடம் இந்த வாழ்த்து உங்களுக்குப் பொருத்தமாக இருந்தால் இனிவரும் வருடத்தில் பொருந்தாமல் பார்த்தால் நீங்களும் இந்த வாழ்த்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.





(த-ஜ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை மீனவர்களால் முல்லைத்தீவில் மீன்பிடி பாதிப்பு

## அமைச்சர் உரிய தீர்வு வழங்கவேண்டும் என்று சாந்தி எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு,ஏப்.2

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் 40 படகுகளை வைத்துத் தொழில் புரிவதனால் பாதிக்கப்படும் உள்ளூர் மீனவர்களுக்கு உரிய நீதி கிடைக்க இன்று வருகை தரும் அமைச்சர் ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய வருகை தரும் அமைச்சர் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

> தீர்வு கிட்டாத சந்தர்ப்பத்தில் மீனவர்களின் சகல போராட்டங்களிலும் நான் உறுதுணையாக இருந்து செயற்படுவேன். எனவே பாதிக்கப்படும் உள்ளூர் மீனவர்களுக்கு உரிய நீதி கிடைக்க இன்று வருகை தரும் அமைச்சர் ஆவன செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இறுதிப் போரின்போது இழந்த உழைப்புக்கள் மிக அதிகம். அந்த இழப்பில் இருந்து மீளுவதற்கு அவர்கள் சுயமாக முயன்று வரும் வேளையில் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பெற்ற மீனவர்கள் நூற்றுக்கணக்கானோரின் கதவினால் அனுமதிகளைப் பெற்றுக் கொண்டு எங்கள் மாவட்டத்தில் தொழில் புரிகின்றனர்.

இதனால் இந்தப் பிரதேச மீனவர்கள் அதிக பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர். அதிலும் குறிப்பாக நாயாறுப் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர் ஒருவர் மட்டும் 40 படகுகளை வைத்துத் தொழில் புரிகின்றார்.

இவ்வாறு தனி ஒருவருக்கு எவ்வாறு இவ்வளவு தொகையான அனுமதி வழங்கப்பட்டது என்பது தொடர்பிலும் பலத்த சந்தேகமே நிலவுகின்றது. இவ்வாறு 40 படகுகளை வைத்துத் தொழில் புரிபவர் குறித்த பிரதேசத்தில் உள்ள ஓர் இறங்குதுறையையும் ஆக்கிரமித்து வைத்துள்ளார். இந்தப் பிரதேசத்தில் ஆண்டாண்டு காலமாகத் தொழில் புரிந்த மீனவர்கள் இன்று இவரிடம் அனுமதி பெற்றுத் தொழில் புரிய வேண்டிய அவல நிலைமையே காணப்படுகின்றது. இதனால் இவற்றை இன்றைய தினம் எமது மாவட்டத்துக்கு வருகை தரும் கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்று குறித்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குமாறு கோருவோம்.

அவ்வாறு தீர்வு கிட்டாத சந்தர்ப்பத்தில் மீனவர்களின் சகல போராட்டங்களிலும் நான் உறுதுணையாக இருந்து செயற்படுவேன். எனவே பாதிக்கப்படும் உள்ளூர் மீனவர்களுக்கு உரிய நீதி கிடைக்க இன்று வருகை தரும் அமைச்சர் ஆவன செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார். (த-ஐ-10)

# மூவாயிரம் இடங்களில் டெங்குச் சோதனைகள்

## சாவகச்சேரி சுகாதார அதிகாரி பிரிவில்

சாவகச்சேரி,ஏப்.2

சுகாதார அமைச்சின் அறிவிப்பின் பிரகாரம் கடந்த நான்கு நாள்களாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நான்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் நடத்தப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் சுமார் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்கள் குழுக்களால் தரிசிப்புச் செய்யப்பட்டன.

பரிசோதனைகளின்போது 267 இடங்களுக்கு அறிவித்தல்கள் வழங்கியுள்ளனர். டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் காணப்பட்ட இடங்களை 15 தினங்களுக்குள் துப்பரவு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கியும், டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் தொடர்பாக இரவிரவாக ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கியும் காலையில் குடியிருப்புகளுக்குச் செல்ல முடியாதவாறு பூட்டி விட்டுச் சென்ற குடியிருப்பாளர்களுக்கு மஞ்சள் அறிவித்தல்களை அந்தப் பகுதியில் ஒட்டியும் சென்றுள்ளனர்.

டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாட்டுக் குழுக்களில் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சாவகச்சேரி கொடிகாமம் பொலிஸார், படையினர், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அலுவலர், குடும்பநல சேவையாளர், சுகாதாரத் தொண்டர்கள் உள்ளூராட்சி சபைகளின் ஊழியர்கள் என ஒரு குழுவில் 7 பேர் அடங்கிய 20 குழுக்கள் ஒவ்வொரு பிரிவிலும் சோதனைகளை மேற்கொண்டன . தற்போது கடுமையான வெயில் காலமென்பதால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்கள் எதுவும் இனங் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 29 ஆம் திகதி கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 915 குடியிருப்புக்களும், 30 ஆம் திகதி வரணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 901 குடியிருப்புக்களும், 31 ஆம் திகதி சாவகச்சேரி நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 918 குடியிருப்புக்களும், நேற்று மந்துவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 900 குடியிருப்புக்களும் குழுக்களால் தரிசிப்புச் செய்யப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (த-ஐ-9)

## பெட்டியில் ஆடுகள்: 10 ஆயிரம் அபராதம்

நான்கு ஆடுகளைப் பெட்டியில் வைத்து மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிளோட்டிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மிருகங்களைச் சித்திரவதைப்படுத்தும் நோக்கில் பெட்டியில் வைத்துக் கொண்டு சென்றதாகச் சாவகச்சேரிப் பொலிஸாரால் மிருகவதைச் சட்டத்தின் கீழ் , நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகள் நடைபெற்றபோது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, மது போதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய வாகனச் சாரதி ஒருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-ஐ-9)

# பல இடங்களில் இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஏப்.2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மின்தடை ஏற்படும்.

யாழ். பிரதேசத்தில் அம்பலவாணர் வீதி, உடுவில், ஆர்க் லேன், ஸ்ரீலங்கா பாடசாலை வீதி, இராமலிங்கம் வீதி, சோமணான் தோட்டம், அரசர் கேணி, கச்சாய் வெளி, தர்மக்கேணி, முகமாலை, இத்தாவில், எழுதுமட்டுவாள், உசன், விடத்தற்பளை, கெற்பேலி, மிருசுவில் தெற்கு, தவசிகுளம், நாவலடி, பலாலிப் பிரதேசம் முழுவதும், வீமன்காமம் குடியிருப்புத் திட்டம், டொலர் கூட்டுத் தாபனம், கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற்கூட்டுத் தாபனம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது) தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, கீரிமலை துணைக்கடற்படை முகாம், ஆகிய இடங்களிலும் மின்தடை ஏற்படும்.

கிளிநொச்சி பிரதேசத்தில் டொன் பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியன் குளம், உயிலங்குளம், பாரதிநகர், மங்கைகுடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், இரணைமடு, திருவையாறு, கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், பாரதிபுரம், மலையாளபுரம், விநாயகபுரம், விவேகானந்தநகர், அறிவியல்நகர், முழங்காவில், ஜெயபுரம், அக்கராயன், யூனி யன்குளம், கோணாவில், ஸ்கந்தபுரம், 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஜஸ் தொழிற்சாலை, மாஸ் இன்ரிமேற், மாஸ் அக்ரிவ், பொறியியல் பீடம், விவசாய பீடம், பார்ம்ஸ் கவுஸ், நோர்த் காகிள்ஸ் அகிரிபூட்ஸ், கிளிநொச்சி இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரட், 66 ஆம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை, ஆகிய இடங்களிலும் மின்தடை ஏற்படும்.

வவுனியா பிரதேசத்தில் வவுனியா நகரம் 1 ஆம் குறுக்குத்தெரு, சாம்பல்தோட்டம் கிராமம், மாமடு சந்தியிலிருந்து பதவியாவரை, சி.இ.சி. கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார் குளம், வெள்ளிமலை, சி.இ.சி.பி. ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சியில் நடந்ததை கூறியதால் உயிர் அச்சுறுத்தல்

## அக்கரைப்பற்றில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.2
மகிந்த அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்தபோது, இந்தப் பிரதேசவாசி ஒருவர், இங்கு நடந்தகொடுமைகள் பற்றியும், அவற்றைமேற்கொண்டோர் பற்றியும் தகவல் கொடுத்தார். அதன் பின்னர் அவர் இந்த நாட்டிலே உயிர் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



'காணாமல் ஆக்குவதைக் காணாமல் ஆக்குவோம்' என்னும் தொனிப் பொருளில் அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

அம்பாறைமாவட்டத்தைப் பொறுத்தவரை இப்படியாக மக்கள் திரண்டு நீதி கேட்கும் முதல் நிகழ்வு இதுவாகத்தான் இருக்கும். காரணம் இவ்வாறான நிகழ்வுகளை நடத்த முடியாத நிலைமைதான் முன்னைய ஆட்சிக் காலத்தின்போது இங்கு இருந்தது.

மகிந்த அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்தபோது இந்தப் பிரதேச வாசி ஒருவர் இங்கு நடந்த கொடுமைகள் பற்றியும் அவற்றை மேற்கொண்டோர்பற்றியும் தகவல் கொடுத்தார். அதன்பின்னர் அவர் இந்த நாட்டிலே உயிர் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டது.

அவர் இராணுவப்புலனாய்வாளர்களாலும், இரகசியப் பொலிஸாராலும் பின் தொடரப்பட்டார். அதன் பின்னர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அப்போது அவரது நலன் கருதி அவரை வேறு நாடொன்றுக்கு அனுப்பவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை உருவானது. அவர் இப்போது வேறு நாடொன்றில் வாழ்ந்து வருகின்றார்.

இன்று இந்தப்பிரதேசங்களிலே ஒன்றிணைந்த மக்கள் தங்களுக்கு நிகழ்ந்த கொடுமைகள், கொடூரங்கள் பற்றி மிகவும் வெளிப்படையாகக் கூறுமளவுக்கு இன்று இந்த நாட்டிலே ஆட்சி மாறியிருக்கின்றது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நாளில் இருந்து அரசுக்குக் காணாமற்போனோர் தொடர்பாக பல அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டு வருகின்றோம். அது மாத்திரமல்ல அன்று மக்களுக்குக் கொடுமை இழைத்த முன்னாள் அமைச்சர்கள் இருவரில் ஒருவர், தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மக்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றார். அவர்கள் மீது நடவடிக்கையை எடுக்குமாறும் நாங்கள் அரசை வலியுறுத்தி வருகின்றோம்.

இன்று காணாமல் ஆக்கப்பட்டோர் என்று பார்க்கின்றபோது, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து, அந்த உறவுகளுக்குச் சொல்லவேண்டும் என்ற பெரும் கடப்பாடு அரசுக்கு இருக்கின்றது. இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடமும், மூன்று மாதங்களும் ஆகிவிட்டன. ஆனால் படிப்படியாகச் சில மாற்றங்கள் நடந்து வருகின்றன.



ஆனால் அது முழுமையாக மாற்றம் பெறவில்லை.

நாங்கள் அன்று ஆட்சியை மாற்ற வேண்டும் என்று உழைத்தவர்கள். ஆனால் இன்று அரசுடன் இணைந்து கொள்ளவில்லை. இணைந்து கொள்ளுமாறு பல கட்டங்களில் தொடர்ச்சியான அழைப்பு இருந்தது. ஆனால் வெளியில் நின்று மக்களுக்காகக் குரல் கொடுத்து வருகின்றோம். நாங்கள் அரசில் இணைந்து கொள்ளாமைக்கு முக்கியமான காரணங்கள் உள்ளன. இந்தப் பிரச்சினைகள் தீரும் வரைக்கும் நாங்கள் எந்த அரசிலும் பங்காளிகளாக இருக்கப் போவதில்லை.

நாங்கள் தற்போது இந்த அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு ஆதரவு கொடுக்கின்றோம். இந்த அரசை எதிர்க்கவில்லை. காரணம் எங்களுக்கான இறுதித் தீர்வைக் கேட்டு அதற்கும் கால அவகாசம் கொடுத்திருக்கின்றோம் - என்றார். (த-ஐ-40)

---

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி ஆறுமுகம் (சாரதி)



தோற்றம்
1934 . 03 . 24

மறைவு
2016 . 03 . 30

போயிட்டி கீரிமலையைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் 30.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கந்தாத்தை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பாலப்பு - சிவகாமி தம்பதிகளின் மருமகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் கலாவதி, சற்குணராஜா(கொலண்ட்), சிவஞானகௌரி (பல.நோ. கூ.ச - தெல்லிப்பழை), சிறிபத்மநாதன்(பிரான்ஸ்), பிறேமாவதி ஆகியோரின் தகப்பனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சுந்தரம், சபாபதி, நடராசா மற்றும் சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரரும் தங்கம், திலகவதி, சின்னத்தம்பி, புனிதவதி, கிருஸ்ணசாமி, செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் தர்மசேகரன், ராகினி(கொலண்ட), சிறிஸ்கந்தராஜா, அமுதராணி(ரதி - பிரான்ஸ்), கருணாநிதி ஆகியோரின் மாமனாரும் மோகனா, விந்துஜன், தனுசாந்(கொலண்ட்), ரூபதரன்(பிரான்ஸ்), சர்மிளா(பிரான்ஸ்), ஹரிஸ் (பிரான்ஸ்), யாதவன், ஜசிதா, கிறிஸ்ரியாள், கிரிசாள்த், அனுஸ்ரா, அனுஸ்ரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2016.04.03 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இளவாலையிலுள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(18)
(14.17.18)

தொடர்பு : 021 320 5202

---

# குமார் குணரட்ணத்துக்கு ஒருவருட சிறைத் தண்டனை

கொழும்பு, ஏப்.2
முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் துறைப் பொறுப்பாளர் குமார் குணரட்ணத்துக்கு ஒரு வருட சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து கேகாலை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.



ஆஸ்திரேலிய குடியுரிமை பெற்ற குமார் குணரட்ணம் நாட்டின் குடிவரவு குடியகல்வுச் சட்டங்களை மீறி இந்த நாட்டில் தங்கியிருந்தார் என்ற குற்றச் சாட்டில் கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் திகதி கேகாலையில் வைத்துக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய தலைவராக இருந்த இவர், கட்சியுடன் ஏற்பட்ட தர்க்க ரீதியான கருத்து மோதல் காரணமாக ஆஸ்திரேலியாவுக்குச்சென்று குடியுரிமை பெற்று வாழ்ந்து வந்தார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்த இவர், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு மீண்டும் ஆஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

பின்னர் இலங்கையில் கடந்த வருடம் ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையடுத்து இலங்கைக்கு வந்திருந்தார். முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதனை அறிந்து கொண்ட இலங்கை குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் பொலிஸாரிடம் முறையிட்டனர். எனினும், இவரை நாட்டில் இருந்து வெளியேற்றக்கூடாது என்று முன்னிலை சோசலிசக் கட்சியால் அடிப்படை உரிமை மனு ஒன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. எனினும், அந்த மனுவை ஆராய்ந்த நீதிமன்றம், 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி அவரை நாட்டில் இருந்து வெளியேற்ற முடியும் எனக் குறிப்பிட்டது.

இதனையடுத்து தலைமறைவாக இருந்த குமார் குணரட்ணம் கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் திகதி கேகாலையில் வைத்துக் கைது செய்யப்பட்டதோடு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி இவர் நாட்டை விட்டு வெளியேறியிருக்க வேண்டும். ஆனால், இவர் குடிவரவு குடியகல்வுச் சட்டங்களை மீறித் த்லைமறைவாக 8 மாதங்களுக்கு மேல் இருந்துள்ளார் என்ற குற்றச்சாட்டை விசாரணை செய்த கேகாலை நீதிவான் நீதிமன்றம், இவருக்கு ஒரு வருடகால சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஜப்பான் உதவியில் புதிய முனையம்

## 400 மில்லியன் டொலர் செலவில் அமையும்

கொழும்பு,ஏப்.2
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையத்தை அமைப்பதற்கு, 400 மில்லியன் டொலரை கடனாக வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது.

ஆண்டுக்கு 15 மில்லியன் பயணிகள் பயணங்களை மேற்கொள்ளத்தக்க வகையில், இரண்டாவது முனையத்தை அமைப்பதற்கு, கடனுதவி வழங்கவுள்ளதாக ஜிகா எனப்படும் ஜப்பானின் அனைத்துலகக் கூட்டு முகவரகம் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு இந்தப் புதிய முனையம் திறக்கப்படும். சூரிய மின்சக்தி மூலம் செயற்படும் வகையிலும், கழிவுநீர் ஆலையில் இருந்து, மீள்சுழற்சி செய்யப்பட்ட நீரை கழிப்பறைகளுக்குப் பயன்படுத்தும் வகையிலும் இங்கு வசதிகள் செய்யப்படும்.



ஜப்பானின் நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு, சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இந்த அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

40 ஆண்டுகளில் செலுத்தத்தக்க வகையில், 0.1 சதவீத வட்டிக்கு இந்தக் கடனுதவி வழங்கப்படும்.

இது தொடர்பாக இலங்கை அரசுடன் கடந்த வாரம் உடன்பாடு காணப்பட்டுள்ளது. (த-ஐ-5)

ஒளிப் படச் செய்தி





# யார் சொல்லித் திருந்துவர்....

சாவகச்சேரி நகரசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நகரைத் தூய்மைப்படுத்துவோம் திட்டத்தைக் கவனத்தில் கொள்ளாத சிலர்,தற்போதும் வீதியோரங்களில் குப்பைகளைக் கொட்டி வருகின்றனர் என்று பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.

சில இடங்களில் வீதியோரங்களில் குப்பை போடவேண்டாம்.குப்பைகளைச்சேகரித்து காணிகளில் வைத்திருந்து குப்பை சேகரிக்கும் வாகனங்களில் வழங்கவும் என்னும் விளம்பரப் பலகை போடப்பட்டுள்ள இடங்களில்கூட குப்பைகளைக் கொட்டி வருகின்றனர் என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர். (த-ஐ-9)

# விபசார நிலையங்களில் லஞ்சம் பெறும் பொலிஸ்

கொழும்பு,ஏப்.2
கொழும்பு நகரில் மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் நடத்தப்படும் விபசாரத் தொழிலுக்கு ஒத்துழைப்பு வழங்கி, இலஞ்சம் பெற்றுவரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்திருப்பதாக லஞ்ச ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்களிடையே பொலிஸ் உயரதிகாரிகளும் இருப்பதாக ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் கொழும்பின் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இவர்களுள் பெருமளவிலான பொலிஸ் அதிகாரிகள் குறித்த விபசார நிலையங்களைத் தடையின்றி நடத்திச் செல்வதற்காகவே இலஞ்சம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் வர்த்தகரொருவரால் வெள்ளவத்தைக் கடற்கரைப் பிரதேசத்தில், தாய்லாந்து யுவதிகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் விபசார விடுதியொன்றும், பொலிஸ் அதிகாரிகளுக்கு இவ்விதம் இலஞ்சம் வழங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் உரிமையாளர்கள் சுற்றிவளைப்புப் பிரிவொன்றுக்குப் பொறுப்பாகச் செயற்படும் பொலிஸ் அதிகாரி யொருவரின் மகனொருவருக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளொன்றையும் பரிசளித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் அதிகாரிகளின் அனுசரணையுடன் கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள இந்த விபசார விடுதி எந்தவொரு தடையுமின்றி நீண்ட காலமாக நடத்திச் செல்லப்படுவதாகவும், கொழும்பிலுள்ள முன்னணிப் பாடசாலைகளின் மாணவர்களும் இங்கு செல்வதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்விதம் இலஞ்சம் பெறுவது தொடர்பில் உன்னிப்பாக அவதானிப்பதற்காக விசேட குழுவொன்று அமர்த்தப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (த-ஐ-22)


# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee. Teaching Hospital. Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| | Work / Service Details | Non - refundable Deposit (Rs) (Bid fee) | Security Deposit (Rs) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.in million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of NTS Students Hostel First Floor | 500.00 | 215,000.00 | 91 | 10.78 | C 6 |
| 2. | Renovation of NTS Students Hostel Ground Floor | 500.00 | 115,000.00 | 91 | 5.56 | C 7 |
| 3. | Repairing Medical Clinic Complex Roof | 500.00 | 110,000.00 | 91 | 5.50 | C 7 |
| 4. | Renovation of Wards 27& 28 | 500.00 | 65,000.00 | 91 | 3.04 | C 8 |
| 5. | Renovation of Ward 30 | 500.00 | 45,000.00 | 91 | 2.10 | C 8 |
| 6. | Construction of Clinic Book Issuing Place and Record Room at Clinic Complex | 500.00 | 25,000.00 | 91 | 1.11 | C 9 |
| 7 | Renovation of X-Ray Department Toilets & Renovation of Old Police Post Area as Canteen | 500.00 | 25,000.00 | 91 | 1.09 | C 9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 04.04.2016 up to 19.04.2016 during office hours. The payment shall be made to the Shroff's, OfficeTeaching Hospital, Jaffna.

6.Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 20.04.2016, late bids will be rejected. Bids will be open at Director's Office. Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders of their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
**02.04.2016**

(c/22429)(11.17.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டின் நலன் நாடி நவீன கல்விமுறை உயர...!

அனைத்து மாணவர்களுக்கும் பதின்மூன்று ஆண்டுகள் கல்வி புகட்டும் நிலைமை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

மேற்கண்டவாறு உறுதி வழங்கி உள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில், இதனை அவர் அழுத்தம் திருத்தமாக இயம்பி உள்ளார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆறு சத வீதத்தை கல்வித்துறைக்கு ஒதுக்குவதாக மக்களுக்கு உறுதி அளித்துள்ளோம். அதனை நிறைவேற்ற இயலும் என்ற நம்பிக்கை எமது அரசுக்கு உண்டு என்றும் அவர் எடுத்தியம்பி உள்ளார்.

நாட்டின் கல்வி முறையிலேயே நாட்டின் அபிவிருத்தி தங்கி உள்ளது என்பதனையும் பிரதமர் சரியாகக் கூறி உள்ளார்.

தற்போதைய கல்வி முறையில் புதிய மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று பல தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வரும் பின்னணியில், பிரதமரின் இந்தத் தகவல் மேலெழுந்து உள்ளது.

ஒரு நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்குக் கை கொடுப்பது கல்வியே. அதன் வளர்ச்சியும் முன்னேற்றமும், பழுதிலாத் திறனுடன் முன்னெடுக்கப்பட வேண்டியது, அதற்கான பொறுப்பும் உத்வேகமும் நாட்டை ஆளும் அரசுக்கு இருக்க வேண்டியது, இன்றியமையாதது.

கிராமம்,நகரம்,பெருநகரம் என்ற பேதங்களைக் களைந்து, நாட்டின் சகல பிரதேசங்களிலும் கல்வி நிலை உயர்வது அவசியம். அதனை எய்துவதற்கு வகை செய்யும் பொறுப்பு, ஆட்சியாளர்கள்,கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், வளவாளர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் ஆகிய தரப்பினருக்கு அதிக அளவில் உண்டு.

உலகளாவிய மட்டத்தில், நாடுகளின் அரசுகள் மட்டத்தில், அதிகளவு முன்னுரிமைகளும் வலுவூட்டல்களும் நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு, கல்வி வளர்ச்சி நாடிய செயல்திறன்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின் எல்லாத் துறைகளின் வளர்ச்சிக்கும் அத்திபாரமாக - அடிநாதமாக - விளங்குவது கல்வி வளர்ச்சியே. அதனை உற்பவிக்கும் முதலாவது பொறுப்பு அரசுக்கே உள்ளது.

நாட்டின், எதிர்காலப் பிரசைகளான மாணவர்களின் நலனை நாடி, உலகளாவிய ரீதியில், நாளும் பொழுதுமாக உயர்ந்து வரும் நவீன கல்வி முறைகளை எங்கள் நாட்டிலும் சமாந்தரமாக அந்தந்த உரிய வேளைகளில் மேலுயர்த்த வேண்டும்.

ஒருநாட்டின் எல்லாத்துறைகளுக்கும் வழங்கப்படும் உந்து சக்தி ஊடாகவே இன்றைய சந்ததியினரது, வளரும் சந்ததியினரது எதிர்காலத்தை வளம் மிக்கதாக மிளிரச் செய்யலாம்.

இவற்றை உள்ளார்ந்து உணர்ந்து, இப்போதைய அரசு செயற்பட வேண்டும். இன,மத,பிரதேச பேதங்களையும், அரசியல் குத்து வெட்டுக்களையும், எல்லாத் திறமைகளும் எமக்கே உண்டு என்ற மேலோங்கித் தனத்தையும் உதறித் தள்ளியும் செயற்பட வேண்டிய வேளை இது.

# எவருக்கு வேண்டும் அவதானம்?

செ.உமாசுதன்

இலங்கையில் கடந்து சென்ற மூன்று தசாப்தங்கள் தமிழ் மக்கள் இன விடுதலைக்காக உரிமை வேண்டி போராடிய தவக்காலம். உயிர்த் தியாகங்களின் திருக்கோலம் யாகமான ஆத்மார்த்தம்.அதற்கு முந்தைய அகிம்சை வழி நடத்தல் என்பது தந்ததோ இந்தத் தவக்காலங்களின் விடியலுக்கான உத்வேகம். அத்தனையும் தமிழன் வரலாற்றின் வரையறைகள்.ஓர் இனத்துவத்தின் தனித்துவம் என்பது இப்படித்தான் வரையறுக்கப்பட வேண்டும் என்பதனை பல் தேசியங்களுக்கும்,மேற்குலகின் வல்லாதிக்கங்களுக்கும் இடித்துரைத்த இறுமாப்புகள்.வரைவிலக்கணப்படுத்த முடியாத திருவுருவங்கள்.தியாகத்தில் விலைமதிப்பற்ற இறை வடிவங்கள்.

ஓர் அரசின் கட்டமைப்பும் அதனை உருவகம் செய்கின்ற உட்கட்டமைப்புக்களும் எப்படி இயங்க வேண்டும் என்பதனை இராணுவக் கட்டமைப்பு ரீதியிலும்,நீதி நிர்வாக பரிபாலனத்திலும் தமது நிர்வாக பிரதேசத்தில் நன்முறையில் நெறிப்படுத்திக் காட்டினர். தமிழீழ சட்டக் கல்லூரி,தமிழீழ நீதித்துறையின் நீதியாளர், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, கலை பண்பாட்டுக் கழகம்,தமிழீழ படைத் துறைப் பள்ளி,பொருண்மிய மேம்பாட்டுக்கழகம்,தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,மாணவர் அமைப்பு; வானொலிச் சேவை எனப் பல் துறைக் கட்டுமாணங்களை கட்டுப் கோப்பாகப் பத்திரப்படுத்தினர்.

### தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தனர்

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வழிசமைத்தனர்.உரிமைக்கான போராட்டமும் அதற்கான அழிவுகளும் திட்டமிட்டு அரங்கேறிய போதிலும் மக்கள் நிம்மதியாக வாழ முடிந்தது.சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடிந்தது.

தமிழ்மொழி பேசுகின்ற ஓர் இனமாக, அந்த இனத்தின் நியாயமான அரசியல் உரிமைகளையும் அனைத்து அபிலாசைகளையும் பெற வேண்டிய உரித்துடையவர்களாக, ஆயுதம் ஏந்திய போராளிகளாக போராடியவர்கள் தமிழர்கள்.அவர்களின் செயற்பாடுகளும் சிந்தனைகளும் இனத்துவத்தின் மீதான சமத்துவம் கிடைக்க வேண்டும் என்ற அவதானமாக சிறப்படைந்திருந்தது. ஓர் அரசாக தங்களைத் தாங்களே ஆளுகின்ற அனைத்து உரிமைகளோடும், பொருண்மிய வளச்சிறப்புக்களோடும் நிமிர்ந்திருக்கின்ற தன்மைச் சிறப்புக்களை பெற வேண்டும் என்கின்ற அவதானமாக இருந்தது.கல்வி எனும் மூலதனம் எப்போதும் தமிழர்களை முன்னிறுத்த வேண்டும்.அதில் சிறந்து ஓர் இனத்தின் நிலைத்திருப்பை கற்றறிந்த கல்விப் புல சூழமைவுகளால் காத்திரம் செய்ய வேண்டும் என்ற அவதானமாக இருந்தது.இவை அனைத்தையும் விட தமிழ்ப் பெண்கள் சமத்துவம் பெற வேண்டும். அவர்கள் அனைத்து விடயங்களிலும் முன்னிலை பெறவேண்டும்.புரட்சிகரப் பெண்ணியங்களாக,தனித்துவங்களாக விளங்க வேண்டும் என்ற அவதானமாக வியாபித்திருந்தது. இந்தத் தாற்பரியங்களை தமிழினமாக நிரூபித்துக்காட்டியிருக்கிறோம். சமத்துவத்திலும் வீரத்திலும் பெண்கள் ஆண்களுக்கு நிகரானவர்கள்,தியாகத்தில் பெண்மைகளாக ஈர மனம் கொண்ட போதும் இலட்சியத்தில்

> கடந்து சென்ற 2009 ஆம் ஆண்டு, தமிழர்களுக்கு மிகப் பெரிய மனித அழிவையும், சொத்திழப்புக்களையும், சீரழிவுகளையும் இலங்கை அரசு கட்ட விழ்த்து விட்டிருந்தது.

இரும்பு மனிதர்களாக மிளிர்பவர்கள் என்பதனை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.கட்டுமானங்களையும் கட்டுக்கோப்புக்களையும் ஒற்றுமையின் சமத்துவவாதிகளாய் ஏனையோருக்கு செயல் வடிவில் பட்டறிவாய் ஊட்டியிருக்கிறோம்.அந்தப் புரட்சிகரங்கள் ஒருபோதும் தமிழன் வரலாற்றில் இருந்து புறந்தள்ளப்படாதவை. எப்போதும் அடக்குமுறையில் இருந்து கிளர்ந்தெழ புது வியூகங்களைத் தருகின்ற ஊக்கிகள், புத்தாக்கங்கள்.அழிவற்றவை.

### மிகப்பெரிய மனித அழிவு

இந்த நிலையிலே கடந்து சென்ற 2009 ஆம் ஆண்டு, தமிழர்களுக்கு மிகப் பெரிய மனித அழிவையும்,சொத்திழப்புக்களையும், சீரழிவுகளையும் இலங்கை அரசு கட்டவிழ்த்துவிட்டிருந்தது. பயங்கரவாதமாக பயங்கர உருவமாக ஊழிக் கூத்தாடியது.அதன் பின்னணியில் தமிழர் தாயகம் இராணுவமயமாகத் தோற்றம் கொண்டது.இராணுவத்தின் வலிந்த அகோரப்பிடியின் உட்திணிப்பில் பலர் சரணடைந்தனர். பலர் காணாமல் போகச் செய்யப்பட்டனர்.சரணடைந்தவர்களில் பலருக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.சரணடைந்தபோது அவர்களைக் கையகப்படுத்தி கொண்டுசென்றவர்கள் கையை விரிக்கின்றனர். பொறுப்புக்கூற வேண்டியவர்கள் பொறுப்பாற்ற விதத்தில் கருத்துரைக்க ஆரம்பித்துவிட்டனர். காணாமல்போனவர்களை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை என்ற பெயரில் வடக்கு நோக்கி நகர்ந்தது.நகர்ந்து கொண்டிருக்கின்ற இந்த குழுவினர் மக்களிடம் எழுத்துமூலம் விசாரணைப் பதிவுகளை வேண்டுகிறோம் என்ற பெயரில் மக்களை தேவையற்ற விதத்தில் குடைவதுடன் அவர்களை சோகத்திற்குள்ளாக்கி பரிகசிக்கின்றனர்.விசாரணையின் முடிவில் கிடைக்கப்படுகின்ற தகவல் சேகரிப்பின் மூலம் ஆவணப்படுத்தல் மூலம்,சாட்சியப் பதிவுகள் மூலம் தீர்வுகள் முன்வைக்கப்படும் என்ற சொல்லித்திரிந்தவர்கள், தற்போது புது வித வியாதிகளோடும் மொழியாடல்களோடும் எம் பிரதேசத்தில் உலவத் தொடங்கிவிட்டனர்.

குறிப்பாக போதி மரப் புத்தனின் அமைதியையும் அதன் ஸ்நானங்களையும் பேச்சளவில் கூட ஸ்பரிசிக்கத்தகுதியற்ற இந்த சிங்கள பௌத்த தேசியவாதங்களின் வால்பிடிகள், தமிழின அழிவுக்கான,பெண்மைகளின் சிதைவிற்கான அடி வருடிகள், வயதான நோய்கிருமிகளை எம்மினத்திடையே விசாரணை என்ற பெயரில் திணித்துவிட்டுள்ளன. அந்தக் கிருமிகள் தற்போது அவதானம் என்ற விசப்பல்லை, தங்கள் காணாமல் போகச் செய்யப்பட்ட பிள்ளைகளை தேடிய லையும் பெற்றோர்கள் மீது பதித்து விட்டிருக்கின்றன.

காணாமல்போனவர்களை கண்டறியும்ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதிக் கட்ட விசாரணைகள் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற போது தந்தையொருவர் தனது மகள் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் போனமை தொடர்பில் சாட்சியமளித்ததை கரிசனையோடு கேட்கவில்லை. அது தொடர்பில் நல்லாட்சி அரசின் பிரதிநிதியாக பரணகம பொறுப்புக்கூற தகுதியற்றவராய் தோற்றமளித்திருக்கிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# நல்லிணக்கம் ஏற்படாதவரை எதுவுமே நடக்காது



தமிழர்கள் வெள்ளவத்தையில் காணி வாங்கி குட்டித் தமிழகம் அமைத்து வாழும்போது, வடக்கில் சிங்களவர்கள் காணி வாங்கலாம் என்றுவடக்குமாகாணஆளுநர் றெஜினோல்ட் கூரே குறிப்பிட் டுள்ளார். வடக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தமிழில் பிரித் ஓதி வெசாக் கொண்டாட்டங்களை நடத்தவேண்டும் என்பதும், அதற்கென தென்பகுதி மக்களைக் கூட்டிவர வேண்டும் என்பதும் ஆளுநரின் கருத்து. தமிழர்கள் வெள்ளவத்தையில் காணி வாங்கலாமென்றால், சிங்கள மக்கள் வடக்கில் காணி வாங்க முடியாதா என்ற கேள்வியில் நல்லெண்ணம் புலப்படுகிறதா அல்லது இனவாதம் வெளிப்படுகிறதா என்பதை எவராலுமே இலகுவாகத் தெரிந்து கொள்ளமுடியும். நல்லெண்ணம் என்ற வார்த்தை சிங்கள அரசியல்வாதிகளாலும் அதிகாரிகளாலும் தமிழ்ப்பகுதிகளில் கூறப் படும் வார்த்தையாக மட்டுமே இருக் கிறது. எந்த ஒரு சிங்களவராவது தென்பகுதி மக்களிடையே தமிழ் மக்களுடன் நல்லெண்ணம் கொண்டு வாழ முன் வாருங்கள் என்று அறைகூவல் விடுத்ததுண்டா? தெற்கில் தமது இருப்பையும், வடக்கில் தமிழர்களது ஆதரவையும் தேடிக்கொள் வதில் மட்டுமே கவனம் செலுத்தும் இந்த அரசியல்வாதிகள் வடக்கில் மட்டுமே நல்லெண்ணம் பற்றிப் பேசுகிறார்கள். இதனை வடபகுதி மக்களும் உணராமலில்லை. நல்லெண்ணம் சிங்களத் தலைமைகள் மற்றும் சிங்கள மக்கள் மத்தியிலேயே முதலில் தோன்ற வேண்டும் என்பதை வடக்கு மாகாண ஆளு நரும் சரி, சிறி விமலதேரரும் சரி முதலில் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கில் தமிழில் பிரித் ஓதி வெசாக் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு முன்னதாக, தெற்கில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களின் பண்டிகைகளை நடத்தி, அங்குள்ள மக்கள் இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தயாராக உள்ளனரா என்பதை முதலில் கண்டறியுங்கள்.

**நயினாதீவில் புத்தர் சிலை**

நயினாதீவில் 12 கோடி ரூபா செலவில் 65 அடி உயரமான புத்தர் சிலையை அமைப்பது குறித்து அங்குள்ள மக்கள் தமது ஆதரவு அல்லது எதிர்ப்புக் குரலை வெளியிடாது மௌனமாகி விட்டனர் என்பதால், மௌனம் சம்மதத்தின் அறிகுறி என அர்த்தம் கொள்வது தவறாகும். வடக்கில் 12க்கும் மேற்பட்ட புத்த கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடபகுதி மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இவற்றை அமைத்து, இந்தப் பிரதேசங்களில் பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே இவை. இதுநல்லெண்ணத்தைக் கட்டி யெழுப்புவதற்கான ஒன்று என எப்படிக் கூறமுடியும்? இதன் மூலம் மத நல்லி ணக்கம் ஏற்படும் என்பது வெறும் கானல் நீராக மட்டுமே அமையும்.

தென்னிலங்கையில் உள்ள பௌத்த துறவிகள் எனப்படுவோரில் எத்தனைபேர் இனங்களிடையே ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்துகிறார்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர ஏனைய அனைத்துப் பௌத்த துறவிகளுமே ஏதோ ஒரு வகையில் இனவாதத்துடன் ஐக்கியப்பட்டு அதை வளர்த்தெடுப்பதையே தமது கோட்பாடாகக் கொண்டுள்ளனர். கலகொட அத்தே ஞானசார தேரர் 'சிங்கலே அமைப்பின்' சந்திர ரட்ண தேரர் போன்றவர்கள் வடக்குக்கு வந்து இங்குள்ள சிங்கள மக்களைச் சந்தித்துச் செல்கிறார்களே. எதற்காக? அவர்களின் இந்த வரவுகளெல்லாம் நல்லெண்ணத்துக்கானதா? இல்லையே! வகுப்புவாதத்தை வலுப்படுத்துவதற்கானதாகவே அமைகின்றன. இவர்கள் மூலம் எப்படி மத நல்லிணக்கம் உருவாகும்? நயினாதீவு நாக விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி தேரர் மீது நயி னாதீவு மக்கள் நல்லெண்ணம் கொண்ட வர்களாகவே இருந்து வருகின்றனர். அவரும் இந்த மக்களுடன் நல்லெண்ணம் கொண்டவராகவே நடந்து கொள்கிறார். வடக்கில் அவர் நல்லெண்ணத்தையும் ஐக்கியத்தையும் விரும்பும் துறவியாகத் தன்னைக் காட்டிக்கொண்டு தெற்கில் என்ன கூறுகிறார்? வடக்கில் உள்ள மக்கள் தென்பகுதியில் இருந்து வரும் சிங்கள மக்களைத் துன்புறுத்துவதாகக் கூறிப் பரப்புரை செய்ததாக செய்திகள் கூட வெளிவந்திருந்தன. இனவாதமும் வன்முறைகளும் பௌத்த மதத்தலைமைகளிடம் பெரிய அளவில் மேலோங்கியுள்ளன என்பது இவர்கள் இனவாதத்தின் அடையாளம் என்பதையே உறுதிப்படுத்து கிறது. விகாரைகளிலும் பௌத்த ஆல யங்களிலும் இனத்துவேசப் பரப்புரைகள் தீபமாக ஏற்றப்படுகின்றன. ஆக இனவாதத்தைத் தெற்கில் வளர்த்துக் கொண்டு வடக்கில் வந்து நல்லிணக்கம் என்று மக்களை ஏமாற்ற முயற்சிப்பது எந்த வகையில் நியாயமாகும்? பாடசாலை மட்டத்திலும் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறமை கவலைக்குரியதொன்றே.

> " வடக்கில் 12க்கும் மேற்பட் ட புத்தகோயில்கள் அமைக்கப்பட்டுள் ளன. வடபகுதிமக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இவற்றை அமைத்து இந்தப் பிரதேசங்களில் பௌத்த மேலாதிக்கத்தை நிலை நாட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே இவை. "

## ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும் என்றார் தந்தை செல்வா

மேற்போந்த தீர்க்க தரிசனமிக்க வார்த்தைக்கு வலுச்சேர்க்கும் வகையில் எம்மவர்களின் செயற்பாடுகள் அமைந்த வண்ணமே உள்ளன. ஒரு சமூகத்துக்கு இன்றி அமையாததாக விளங்குவது கல்வி, சுகாதாரம், மருத்துவம் என்று வரிசையில் தொடர்கின்றன. அந்த வகையில் கல்வித் துறையில் ஏகப்பட்ட குறைபாடுகளும் குழப்பங்களும் நீடிக்கின்றன. குறிப்பாக வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்களை சென்ற வருடம் டிசெம்பர் மாதத்தில் உள்ளீர்ப்புச் செய்யப்படும் என்று மாகா ணக் கல்வி அமைச்சினால் கூறப்பட்டது. ஆனால் பிரச்சினை இன்றுவரை தொடர்கின்றது. இவ்வாறே ஆசிரி யர் இடமாற்றமும் மற்றும் ஏனையவையும் கூட. இவ்வாறான நிலையில் கடந்த 26.03.2016 இல் பூநகரிக் கோட்டக் கல்வி அபிவிருத்திக் கூட்டத்துக்கு இடம் பெற்றவையை நோக்கின்.

**ஆசிரியர் பற்றாக்குறை**

யாழ்ப்பாண ஆசிரியர்களது கற்பித்தல் செயற்பாடுகள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டதற்கு, ஒரு குறிப்பிட்ட பாடசாலையில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருப்பதாகக் சுட்டிக்காட்டப்பட்டதற்கு, அதற்கு ஒன்றும் செய்யமுடியாது. ஏனெனில் அவர்களை இடமாற்றினால் பாடசாலையின் கல்வி பாதிக்கப்படும் என்று கூறப்பட்டது. அப்படியாயின் இவ்வாசிரியர்களின் வருடாந்தச் சம்பள ஏற்றம் எவ்வாறு இடம் பெறுகின்றது? இதற்குத் துணைபோபவர்கள் யார்? இவ்வாறே யாழ்ப்பாண ஆசிரியர்கள் பற்றியும் கூறப்பட்டது. நேரத்துக்கு வருவதில்லை. மேலதிக வகுப்புகள் எடுப்பதில்லை என்று கூறப்பட்டது. இதற்கு யார் பொறுப்பு? பாடசாலையின் அதிபரே. ஏனெனில் ஆடுகின்ற மாட்டை ஆடிக்... இதில் முக்கியமான அம்சம் என்னவெனில், முன்னர் கல்வியுடன் தொடர்பானவர்களும் இருந்துள்ளார்கள். சில வேளைகளில் அவர்களினாலும் இந்தக் கருத்துக்கள் கூறப்பட்டதோ தெரியாது. அவர்களே நிறைவேற்றி வைக்கின்றனர். இந்த வகையில் பூநகரிக் கோட்டப் பாடசாலை ஒன்றுக்கு இராணுவத்தினரே தொடர்ச்சியாக பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்கின்றார்கள். அப்படியாயின் பிரதேச சபை, கல்வி அதிகாரிகள் என்ன செய்கின்றார்கள்? நாம் இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என்று தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நிலையில், இந்த மாணவர்களின் குடி தண்ணீர்த் தேவையை ஆண்டவன் தான்... இவ்வாறேதான் சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடக்கம் குரங்குகளைக் கட்டுப்படுத்தும் திட்டம் வரை. எனவே ஆண்டவன் தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதே நிதர்சனம்.

எஸ். மதி

## பக்தி தேவை, மூடநம்பிக்கை வேண்டாம்

பங்குனித்திங்கள் என்பது இந்துக்களால் அம்மனுக்கு எடுக்கும் விழா. ஆனால் இதை மூடநம்பிக்கையுடன் தொடர்புபடுத்தக்கூடாது. உங்கள் உதயன் பத்திரிகைச் செய்தியின் பிரகாரம் திடீரென்று தோன்றிய நாகபாம்பை வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலுக்கு வந்தவர்கள் கும்பிட்டதாகத் தெரிகின்றது.

இந்தக் கோயிலுக்குச் சிலமைல் தூரத்தில் பற்றைகளும் காடுகளும் உள்ளன, அங்கிருந்து வந்ததுதான் இந்தப் பாம்பு. இதை நாம், நாக பாம்பு தன்னாலே தோன்றியது என்று எப்படிக் கூறமுடியும். மூடநம்பிக்கைக்கு ஓர் அளவே இல்லையா? தீங்கு செய்யும் பாம்பைக் கொல்லாமல் விட்டால் மற்றவர்களைத் தீண்டிவிடும் அல்லவா? அதனால் உயிர்ச் சேதம் ஏற்படும் என்பது உண்மை. கோயிலின் பெருமையைக் கூற வேண்டும் என்பதற்காக பொய்ப் பரப்புரைகளுக்கு நாம் இடம் அளிக்கக் கூடாது. எமது சந்ததியினர் இதைப் புரிந்துகொண்டு மூடநம்பிக்கையைக் கைவிட வேண்டும். கடவுளை நம்புங்கள்; மூடநம்பிக்கையைக் கைவிடுங்கள்.

**அன்பரசன்,**
**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெல்ஜியத்துக்கு பூரண ஆதரவு

## அந்த நாட்டுப் பிரதமரிடம் நேரில் கூறினார் மோடி

பிரஸ்சல்ஸ், ஏப்.2
இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி முதல் முறையாக பெல்ஜியத்துக்கு அரசியல் ரீதியிலான சுற்றப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். பெல்ஜியத்துக்கான முழு ஆதரவை இந்தியா வழங்கும் என அங்கு ஆற்றிய உரையில் நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கடினமான சூழ்நிலை இடம்பெற்ற போதிலும் தமக்கு வழங்கப்பட்ட வரவேற்புக்கு அவர் மனதார நன்றியைத் தெரிவித்தார்.

குண்டுவெடிப்பு இடம்பெற்றமால்பீக்மெற்றோ ரயில் நிலையத்தை நேற்று முன்தினம் மோடி பார்வையிட்டார். அங்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தார்.

இதன் பின்னர் அவர் ஆற்றிய உரையில், கடந்த வாரம் பெல்ஜித்துக்கு மிகவும் துக்கமான வாரம். குண்டு வெடிப்பில் இறந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். பிரஸ்சல்ஸ் தாக்குதலில் உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன். சுற்றுலாப் பயணிகளாக வந்த எமது நாட்டவர்களும் இந்த வன்முறையில் உயிரிழந்தமை எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. உங்கள் துக்கத்தில் நாமம் பங்கெடுக்கின்றோம் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-
இந்த நெருக்கடி நிலையில், இந்தியா தனது முழு ஆதரவையும் பெலிஜியத்துக்கு வழங்கும். இந்த விடயத்தில் பெல்ஜியத்துடன் இந்தியா உறுதியான நிலையைப் பேணும். உங்களது வரவேற்புக்கு மிக்க நன்றி. இது உங்கள் மீதான அக்கறையை எனது மனதில் தூண்டியுள்ளது. பொதுவான சவால்களுக்கு முகம் கொடுப்பதன் ஒரு பகுதியாக, பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

உலக அளவில் சிறப்பான பொருளாதாரக் களங்களைக் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். பொருளாதார ரீதியில் துரிதமான வளர்ச்சியுடன் இந்தியா காணப்படுகிறது. இந்தியாவினதும் பெல்ஜியத்தினதும் இணைவு சிறப்பான பொருளாதாரத்தை இரு தரப்பிலும் உருவாக்கக் கூடியது. இவை தொடர்பில் பெல்ஜிய வர்த்தகப் பிரமுகர்களை நான் சந்தித்தேன். பெல்ஜிய அரசு நிறுவனங்களை எம்முடன் இணைய அழைக்கிறேன். இந்திய உற்பத்திகள் பெல்ஜிய வர்த்தகத்தை ஊக்குவிக்கும். இந்தியா தனது கட்டுமானங்களைப் புதுப்பிக்கத் திட்டமிட்டுள்ளது. பெல்ஜியப் பிரதமரை நான் இந்தியாவுக்கு அழைக்கிறேன். அரசியல் - பொருளாதார உறுதிப்பாட்டை நிலை நிறுத்தவும், யதார்த்தத்தை அறியவும் அவரது பயணம் உதவும். கால நிலை மாற்றங்கள் சவாலான தொன்றுதான், ஆனால் பெல்ஜியத்துடன் மீள்சுழற்சி முயற்சியில் பங்கெடுக்கத் தயாராகவுள்ளோம்-என்றார். (த-ரி4)


மரண அறிவித்தல்

திருமதி வள்ளிநாச்சி கந்தவனம்

பிறப்பு
1930
.
08
.
28



இறப்பு
2016
.
03
.
30

வடமராட்சி நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிநாச்சி கந்தவனம் 30.03.2016 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தவனத்தின் (சைவப்பா, இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் விக்கினேஸ்வரி(இந்தியா), கலாநிதி சுப்பிரமணியம் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), உலகநாயகி(லண்டன்), பொன்னம்பலர்(கணக்காளர் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாலன்(கணக்காளர் - கொழும்பு), சந்திரகுமார் (பிரான்ஸ்), மந்தாகினி (கணக்காளர் - ஆஸ்திரேலியா), பானுமதி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சியாமளன், சிறிவக்சன், துவாரகன், ஹரிபிரசாந், சிறிஸ்சிகேசன், சிரானி, சிறிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னத்தங்க நாச்சன், நடராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00மணியளவில் அன்னாரின் மாவடி வளவு நவிண்டிலிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ம.புலேந்திரன்**
**மாவடி வளவு, நவிண்டில்,**
**கரணவாய் வடக்கு, கரவெட்டி.**


(N 01)
(14,12,18)

தகவல்:
குடும்பத்தினர்

**தொடர்பு : 021 226 3098 / 077 474 4666**


# இடிந்து விழுந்தது ... கொல்கத்தாவில் ...

## 150க்கும் மேற்பட்டே...



கொல்கத்தா. ஏப்.2
இந்திய நகரம் கொல்கத்தாவில் புதிதாக நிர்மாணிக்கப்படும் பாலம் இடிந்து விழுந்ததில் 21 பேர் உயிரிழந்ததுடன், 150 பேர் காயமடைந்துள்ளனர்.

கொங்கிறீட் பாலத்துக்கு அடியில் இறந்தவர்களது உடல்கள் சிதைந்த நிலையில் சிக்குண்டுள்ளன. வாகனப் போக்குவரத்து நெரிசல் காரணமாக அம்புலன்சுகள் சம்பவ இடத்துக்கு விரையத் தாமதித்தன. கொல்கத்தாவில்ரி20 உலகக் கிண்ணப் போட்டி இடம்பெறவுள்ள சில தினங்களுக்கு முன்னர் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாலம் இடிந்து வீழ்வதற்கு 12 மணித்
யாலங்களுக்கு முன்னரும் கட்...
நடைபெற்றிருந்தன. சிறப்பு மீட்புப் ...
நாய்கள், கொங்கிரீட் உடைப்பான் ...
இயந்திரங்கள் என்ப வற்றுடன் ...
விரைந்து மீட்புப் பணிகள் துரிதமா...
பாலம் விழும்போது குண்டுவெடி...
தது என சம்பவத்தை நேரில் பார்த்...
விபத்துக்குறித்து பிரதமர்நரேந்திரமே...
எதிர்பாராத அதிர்ச்சிகரமான சம்...
களை விரைவு படுத்துங்கள் எனத் ...
மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜ...

# கார்க் குண்டுவெடிப்பில் துருக்கியில் ...


அங்காரா, ஏப்.2
துருக்கியில் நேற்று முன்தினம் கார்க்குண்டுத் தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 7 பேர் கொல்லப்பட்டதுடன், 27 பேர் காயமடைந்தனர் என பாது காப்புப் படையினர் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் டியாபகீர் பகுதியை, அந்த நாட்டுப் பிரதமர் பார்வையிடச் செல்லத் திட்டமிட்டிருந்த நாளுக்கு முன்னர் இடம்பெற்றது.

வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்று, பொலிஸ்உத்தியோகத்தர்களை ஏற்றி வந்த வாகனம் சாலையில் செல்லும் நேரத்தில் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் பொது மக்கள் பலரும் காயப்பட்டனர்.

வொசிங்டன் அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி ரையிப் ஏர்டொகன்
தாக்குதலுக்குக் கண்டனம் தெரி...
க்ள் தமது கேவலமான முகத்...
ளனர் என அவர் விமர்சித்துள்...
மேலும் எமது பாதுகாப்புப் ப...
அவர்களுக்கான முற்றுப்புள்...
தத் தாக்குதலில் 27 பேர் காய...
தெரிவித்தார்.
தாக்குதல் நடத்தப்பட்ட பிரதே...
புராதனப் பகுதியாகப் பிரகடன...
கும்.
டியர்பாக்மீர் பகுதியை மீள் கட்...
அஹ்மத் டவட்டோ பார்வையி...
அந்த நகரை அழகுற மீளக் க...
மிரட்டல்களுக்கு அஞ்ச மாட்...
னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...து பெரும் பாலம்
# ...ல் 21 பேர் சாவு
## ...டார் காயம்




...டுமானப் பணிகள் ...படையினர், மோப்ப ...ன்கள், துளையிடும் ... சம்பவ இடத்துக்கு ...க்கப்பட்டுள்ளன.

...்பைப் போல இருந் ...த்தவர் தெரிவித்தார்.

...மாடிதெரிவிக்கையில், ...பவம். மீட்புப் பணி ...த் தெரிவித்துள்ளார். ...ஜி, விபத்துக்குக் கார ணமானவர்கள் தண்டிக்கப்படுவர் எனத் தெரிவித்தார்.

விபத்துக் குறித்த காரணங்கள் அவருக்கும் தெரிய வரவில்லை. குறித்த பாலம் 5 வருடகாலமாகக் கட்டுமா ணப் பணிகள் முடிவடையாமல் இருந்து வந்த நிலை யில், சமீபத்தில் இதன் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. இடிபாடுகளுக்கிடையில் இன்னும் பலர் சிக்கியிருப் பதாக நேரில் பார்த்தவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பாலத்தைக் கட்டிய கட்டுமான நிறுவன அதி காரி தெரிவிக்கையில், எமது கட்டுமாணப் பொருள்கள் தரமானவை, விசாரணைக்கு நாம் தயாராக உள் ளோம் எனத் தெரிவித்தார். (த-ரி4)



சிரியாவின் பால்மைரா நகரை ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து இராணுவத்தினர் கைப்பற்றியதன் பின்னர் அப்பகுதியின் புராதன தோற்றமும் தற்போதைய தோற்றமும் ஒப்பிடப்பட்டுப் படம் வெளியிடப்பட்டுள்ளது. இந் தப் படத்தின் மூலம் அக்காலப்பகுதியில் ஐ.எஸ். அமைப்பின் காட்டுமிராண்டித்தனமான செயல்களை ஒப் பீட்டு அளவில் அறியக் கூடியதாக உள்ளது எனத் தொல்பொருளியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-ரி4)

# எலியைப் பிடித்தால் சன்மானம்

இஸ்லாமாபாத், ஏப்.2
பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதி அதிகாரிகள் வினோத அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளனர். எலிகளால் தினமும் சேதங்களும், நோய்த் தொற் றும் அதிகரிப்பதாக நூற்றுக்கணக்கான முறைப்பாடு கள் பதியப்பட்டதன் பேரில் கொல்லப்படும் ஒவ்வொரு எலிக்கும் சன்மானம் என அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். போவர் பகுதியில் 30 சென்ரி மீற்றர் நீளமான எலிகளால் வாழ்வாதாரப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அங்கு வசிக்கும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-
அளவில் பெரியவையாக இருக்கும் இவைகளைக் கண்டு பூனைகள் கூட அச்சப்படுகின்றன. உணவு, உடை, வீட்டின் கட்டுமானம் அனைத்தையும் இவை சிதைப் பதாக அங்கு வசிக்கும் மக்கள் கவலை தெரிவித் துள்ளனர். இரவில் நடமாடும் இவைகளைக் கட்டுப்படுத்துவது மிகுந்த சிரமமாக உள்ளது. இத னால் மாவட்ட ஆளுநர் அர்பாப் முகமத் சன்மானத் தொகையை அறிவித்துள்ளார். இதற்கான சன்மா னம் நகரின் பல இடங்களில் 25 பாகிஸ்தானிய ரூபா எனவும், சில பகுதிகளில் 300 பாகிஸ்தானிய ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரி வித்தனர். இந்த அறிவிப்பின் மூலம் பெரிய எலிக ளின் தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என நம்புவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (த-ரி4)

# ஐ.எஸ்ஸின் தலைவர் சாதாரணமான ஆள்
## முன்னாள் மனைவி தெரிவிப்பு

பிரஸ்சல்ஸ், ஏப்.2
ஐ.எஸ். அமைப்பின் தலைவரான அபு-பக்கர்- அல்- பக்தாதி சராசரி யான சாதாரண குடும்பத் தலை வர் என அவரது முன்னாள் மனைவி செவ்வி ஒன்றில் தெரிவித்தார்.

சகா-அல் டள்மாமி என்ற 28 வய தான பெண், பக்தாதியின் முன் னாள் மனைவி என்பதுடன், இவர் களுக்கு ஒரு பெண் பிள்ளையும் உள்ளது. 2008 ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்த தாகவும், பல்கலைக்கழகத்தில் ரியா சட்டம், சமய பாடங்களைத் தாம் கற்பித்ததாகவும் அவர் தெரி வித்தார்.

போராளிக்குழுக்களுடன் பக்தாதி க்கு தொடர்பிருப்பதை தாமதமாக நான் அறிந்து கொண்டேன் என வும் அவர் தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் டள்மாமி மேலும் தெரிவித்தாவது:-
நாம் திருமணம் செய்கையில் அவரும் பல்கலைக்கழக பேராசிரி யராகவே இருந்தார். அப்போ தைய அவரது பெயர் ஹிஸ்ஹாம் முகமத் ஆகும். சராசரியான குடும்ப தலைவராகவே நடந்து கொண்டார். எந்த எதிர்ப்பு இயக் கங் களிலும் அவர் இணையவில்லை. அவர் எவ்வாறு உலகின் மிக ஆபத்தான தீவிரவாதக் குழுவின் தலைவராக மாறினார் என்பது எனக்கு மர்மமாக உள்ளது.

அத்துடன், பிள்ளைகளை அவர் நேசித்தார். அவர்களின் கதாநாய கனாகவும் அவர் திகழ்ந்தார். ஆனால் அவரை நான் ஆழமாக நேசிக்கவில்லை. அவருடன் கதைக்கவோ கருத்துகளைப் பகி ரவோ முடியாது. இதனால் அவ ரிடம் இருந்து விலகி பாலஸ்தீனர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டேன். எனது மகளைக் கடத்துவார் என்ற அச்சத்தில் ஐரோப்பாவில் குடி புகுந்துள்ளோம் எனத் தெரிவித்தார். முன்னதாக புரூசல்ஸ், பாரிஸில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிராகக் கண்ட னத்தை வெளியிட்டிருந்தார். ஆயுதத்தால் ஒருவரைக் கொல் வதா தீவிரவாதம்? அது கொலை அல்லவா தீவிரவாதச் செயலில் ஈடு படுவதாகத் தெரிவித்துக் கொண்டு அப்பாவிகள் மீது தாக்குதல் நடத்து கிறார்கள் என டல்மாமி தனது கண் டனத்தில் தெரிவித்திருந்தார். (த-ரி4)

## ...7 பேர் சாவு

...தெரிவித்துள்ளார். போராளி ...தை மறுபடியும் காட்டியுள் ...ளார்.

...டைகளின் மூலம் கடவுள் ...ளியை வழங்குவார். இந் ...ப்பட்டனர் எனவும் அவர்

...தசம் யுனஸ்கோவினால் ...ப்படுத்தப்பட்ட பிரதேசமா

...டுமானம் செய்ய பிரதமர் ...த் திட்மிட்டிருந்தார். நாம் ...கட்டுவோம். இவ்வா றான ...டோம் என அவர் கூறி (த-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டிஸக் குழந்தைகளைப் பேணுவோம்

## இன்று உலக ஆட்டிஸ தினம்



த.சிவகுமார்
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

இன்றைய நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், ஆராய்ச்சிகள் என்பவை உலக மயமாதலுக்கு வித்திட்டதால் மனிதன் பல நன்மைகளை அடைந்துள்ளான். அத்தோடு அரிய சாதனைகளையும் படைத்து வருகின்றான். இத்தகைய சூழமையில் விசேட தேவையுடையோரின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு புரியாத புதிராகவே உள்ளது. இவர்களது தோற்றம் அதிகரித்துச் செல்கின்றது. அத்தகைய மாற்று ஆற்றலுடையவர்களின் ஒரு வகையினராக ஆட்டிஸக் குழந்தைகள் காணப்படுகின்றனர்.

ஆட்டிஸம் (Autism) என்பதைத் தமிழில் தற்புனைவு ஆழ்வு என்று குறிப்பிடுவர். அதாவது தனக்குள்ளேயே ஓர் உலகத்தை உருவாக்கி அதில் ஆழ்ந்து விடுவது எனப் பொருள்படும். ஆட்டிஸம் என்பதைத் தற்சிந்தனை என்றும் குறிப்பிடுவர். அதாவது ஒரு நபர் பார்ப்பதையோ கேட்பதையோ மற்றும் வேறு உணர்வுகள் பற்றி யதார்த்த பூர்வமாக விளங்கிக் கொள்ள முடியாத வகையில் வாழ்நாள் முழுவதும் நிலவும் ஒரு குறைபாடாகும்.

ஆட்டிஸத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பெரும்பாலும் சராசரிக் குழந்தைகள் போலவே தோற்றத்தில் இருப்பார்கள். அவர்களைப் பார்த்தவுடன் கண்டுபிடித்துவிட முடியாது. இவர்களின் நடத்தையின் மூலமே இனங்கண்டு கொள்ளலாம். 15 தொடக்கம் 18 மாதங்கள்வரை சாதாரண குழந்தைகள்போலவே இருப்பார்கள். அதன் பின்புதான் வளர்ச்சி தாமதமடையத் தொடங்கும். இவர்களை 36 மாதங்களில் இனங்கண்டு கொள்ளலாம்.

பொதுவாக ஆண் குழந்தைகளே ஆட்டிஸத்தால் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். நான்கு ஆண் குழந்தைகளுக்கு ஒரு பெண் குழந்தை என்ற விகிதத்தில் ஆட்டிஸம் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஆட்டிஸ ஊனமுடைய பிள்ளைகள் சாதாரண பிள்ளைகளை விடவும் பல மடங்கு அழகானவர்களாகவும், அவர்களது தலைமயிர் மயிர்க்கூச்சு எறிந்தது போன்றும் காணப்படும். இத்தகைய பிள்ளைகளின் பிறப்புத் தொடர்பான ஆய்வு முடிவுகள் இவர்கள் ஏழை மக்களுக்குப் பிறப்பது குறைவு எனவும் பொருளாதாரத்தில் முன்னேறிய நிலையிலுள்ள வசதி படைத்த குடும்பங்களில் உள்ளவர்களுக்குப் பிறப்பதாக அதிகம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ஆட்டிஸத்தாரின் பண்புகள்

ஆட்டிஸத்தால் பாதிக்கப்பட்டவரது நடத்தை மற்றவர்களைக் காட்டிலும் சற்று விநோதமாகக் காணப்படும். இத்தகைய நடத்தைகளை அவர்கள் கற்றுக் கொள்கிறார்களா அல்லது உள்தூண்டல் மூலம் வெளிப்படுத்துகிறார்களா என்பது புரியாத புதிராக உள்ளது.

### பார்வை தவிர்த்தல்

ஓட்டிஸக் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் கண் கண் தொடர்பு காணப்பட மாட்டாது. அதாவது பார்வையில் நிலைத்ததன்மை இருக்காது. ஒரு பொருளைக் காட்டி இதைப் பார்க்குமாறு கூறினாலும் பார்க்கமாட்டார்கள். இதனால் இவர்கள் பார்வைக் குறைபாடுடையவர்களெனவும் நினைக்கத் தோன்றும்.

### ஒதுங்கி இருத்தல்

பிற உலகில் இருந்துகொண்டு தனக்குள்ளே ஓர் உலகத்தை உருவாக்கி அதிலே வாழ்ந்து வருவர். தங்களுக்குள்ளே ஏற்படுத்திக் கொண்ட அல்லது புனைந்து கொண்ட உலகில் ஆழ்ந்துவிடுவர். அதில் ஒரு சில பொருள்களைத் தவிர எவருக்கும் இடமில்லை.

### ஜடப்பொருள் நேசம்

உயிருள்ளவற்றைவிட உயிரற்ற பொருள்களின் மீதே அதீத நாட்டம் கொள்வர். இவற்றையே அதிகம் நேசிப்பர். உயிருள்ளவற்றையும் ஜடப்பொருளாகவே நினைத்துப் பழகுவர்.

### சமூகக் கலப்பின்மை

அன்பு, பாசம், நேசம் இவை யாவும் ஆட்டிஸத்தாரைப் பொறுத்து அர்த்தமற்றவை. தமது குடும்ப உறுப்பினர்களையே அவர்களால் வேறு பிரித்து அறியமுடியாதுள்ளது. ஆண், பெண் வித்தியாசத்தை இனங்கண்டு கொள்ள முடியாமல். தாயின் தொடர்பையும் தவிர்த்துக் கொள்வர். பிறருடன் கலந்து விளையாடாது தனிமையில் இருப்பதையே அதிகம் விரும்புவர்.

### குறுகிய தெளிவுப் பார்வை

ஆட்டிஸத்தார் ஒரு பொருளை முழுமையாகப் பார்த்து அங்கீகரிப்பதில்லை. அந்தப் பொருளின் ஒரு பகுதியை மட்டும் பார்த்து அந்தப் பகுதியையே அந்தப் பொருளாகக் கொள்வர். தனது தாயை இந்தக் குழந்தை பார்க்கின்றது என்றால், அம்மாவின் முழு உருவத்தையும் பார்ப்பதில்லை. அம்மாவின் வளையல்அணிந்த கை ஒன்றை மட்டும் பார்த்து அது அம்மாதான் என கண்டு கொள்கின்றது.

### கேள்வி தவிர்த்தல்

எவ்வளவு பெரிய ஒலியானாலும் உயர்ந்த பேச்சானாலும் ஆட்டிஸத்தார் சற்றும் பார்ப்பதில்லை. இவர்களுக்குப் பேச்சுத்திறன் நன்கு அமையப் பெற்றிருந்தால்கூட அவர்கள் ஒலிக்கோ பேச்சுக்கோ எந்தவித எதிர்ச்செயலும் காட்டமாட்டார்கள். எது தமக்கு அவசியமோ அவற்றை மட்டுமே செவிமடுப்பர். மற்றவற்றைத் தவிர்த்து விடுவர்.

### பேச்சுத் தவிர்த்தல்

மற்றைய திறன்களை விட மொழிமற்றும் பேச்சுத் திறன் வளர்ச்சி மிகவும் தாமதமாகவே ஏற்படும். இவர்களது பேச்சு பெரும்பாலும் ஒற்றைச் சொல்லைக்கொண்டதாக இருக்கும். அதுவும் தமக்கு எப்போது பேசவேண்டும் போல் உள்ளதோ அப்பொழுது மட்டும் பேசுவர். இவர்களது பேச்சைக் கிளிப்பிள்ளைப் பேச்சு என்பர். அதாவது எதிரில் இருப்பவர் என்ன பேசுகிறாரோ அதை அப்படியே எதிரொலியாகப் பேசுவர்.

### தொடு உணர்ச்சி தவிர்த்தல்

இவர்கள் உடனடியாக தொடுகையைக் கவர்ந்து கொள்ளமாட்டார்கள். அத்தோடு வலியுணர்ச்சியையும் கூடத் தவிர்த்து விடுவர். நெருப்பைத் தொட்டால் சுடும் என அறியாது கையால் பிடிப்பர். வலியை உணர்ந்து கொள்ள மாட்டார்கள்.

### மாற்றத்தை விரும்பாமை

இவர்கள் தாம் பயன்படுத்தும் பொருள்கள், கற்கும் வகுப்பறையில் உள்ள பொருள்கள் அனைத்தும் அவற்றிற்குரிய இடங்களில் மட்டும் இருக்க வேண்டும் என எண்ணுவர். எந்தவித சிறு மாற்றத்தையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. தினசரி செயல்களில் கூட மாற்றம் ஏற்படுவதை விரும்பமாட்டார்கள்.

### இயக்கப்புலன்

ஆட்டிஸத்தாரில் ஒரு சிலருக்கு அதிகப்படியான ஆச்சரியப்படத்தக்க வகையில் இயக்கப்புலன் அமைந்திருக்கும். அடிக்கடி கால்விரல்களைத் தரையில் ஊன்றி நடப்பர், மாடிச்சுவர் மதில், மேசை நுனி போன்றவற்றில் கவனம் தவறாது மிகவும் இலாவகமாகப் பயமின்றி நடந்து செல்வர்.

### ஆட்டிஸ ஊனமுற்றோருக்கான நடத்தைச் சீராக்கம்

ஒருவருக்கு ஆட்டிஸ இயல்புகள் காணப்படுகின்றதா என்பதை வைத்துக் கொண்டு அவர் ஆட்டிஸ பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று முடிவுக்கு வர முடியும்.

முரண்டு பிடித்தல், காலை உதறுதல், சுவரில் தலையை மோதுதல், கூறியதைத் திரும்பத்திரும்பக் கூறுதல், செய்ததைத் திரும்பத்திரும்பச் செய்தல், என்ற வகையில் ஆட்டிஸத்தாரின் நடத்தைகளை விரும்பத்தக்க நடத்தைகள் விரும்பத்தகாத நடத்தைகள், என வகுக்க முடியும்.

### விரும்பத்தகாத நடத்தைகள்

ஒருவரின் நடத்தையைச் சமூகம் முழுமையுடன் ஏற்றுக்கொள்கின்றதென்றால் அந்த நடத்தையை விரும்பத்தக்க நடத்தை எனலாம். இவர்களிடம் விரும்பத்தகாத நடத்தைகளே அதிகமாகக் காணப்படும்.

### விரும்பத்தக்க நடத்தைகள்

நடத்தல், ஓடுதல், தாண்டுதல், பூட்டைத்திறத்தல், கத்தரிக்கோல் உபயோகித்தல், சாப்பிடுதல், குடித்தல், ஆடையணிதல், காலணி அணிதல், பல்துலக்குதல், குளித்தல் ,கழிவறை செல்லுதல், பேசுதல், படித்தல், எழுதுதல், கணக்கிடுதல், வீட்டுவேலை செய்தல், கடைக்கு, மற்றும் பாடசாலைக்குச் செல்லுதல், கூடிவிளையாடுதல், தொழில் கற்றுக் கொள்ளுதல் என்ப வற்றை இந்த வகைக்குள் அடக்கலாம்.

தொகுத்து நோக்குமிடத்து ஆட்டிஸக் குழந்தைகளும் எமது சொத்துக்களே. அவர்களிடம் உள்பொதிந்துள்ள ஆற்றல்களை இனங்கண்டு வெளிக் கொணரும் சந்தர்ப்பத்தில் அவர்களும் எமது நாட்டின் வளம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்வர். அவர்களுக் குரிய சந்தர்ப்பங்களும் கிடைக்கப்பெறும். எனவே நாம் அனை வரும் அவர்களுக்காக ஒரு நிமிடம் சிந்தித்துப் பணியாற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகைபிடிப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள்

அ.அஜித்

புகை பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஆண்டு தோறும் உலக சுகாதார நிறுவனத்தால் மே 31 ஆம் திகதி சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினமாக கடைப் பிடிக்கப்படுகிறது. உலகளவில் சுமார் 120 கோடிக்கும் அதிகமான மக்கள் புகைப் பழக்கத்துக்கு உட்பட்டுள்ளனர். தினமும் 11,000 பேர் புகைப் பழக்கத்தால் சாவடைகின்றனர்.

இவர்களில் 2,200 பேர் (ஐந்தில் ஒருவர்) இந்தியர். புகைப்பழக்கத்தால் வரும் பாதிப்புக்கள் ஒன்றோ! இரண்டோ அல்ல. புகையிலையில் சுமார் 4,000 க்கும் மேலான இரசாயனப் பொருள்கள் உள்ளன. இவற்றில் கார்பனோர் ஒட்சைட்டு, ஹெட்ரஜன் சயனைட், நிக்கோடின், தார் போன்றவை பயங்கரக் கெடுதி நிறைந்தவை.

ஹெட்ரகன் சயனைட் இரத்த நாளங்களை தடிப்பாக்குவதுடன் கார்பனோர் ஒட்சைட்டு,தார் போன்றவை நுரையீரல் உட்பகுதி வரை ஊடுருவி புற்று நோயை உருவாக்குகின்றன. மேலும் மார்புச்சளி, ஒவ்வாமை, இருமல், உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, இருதய நோய்கள், குடல்புண்கள், சீரண நோய்கள், என எண்ணற்ற உடல்நலக்கேடுகள் ஏற்படுகின்றன.

புகைப்பவர்கள் வெளிவிடும் புகையால் மனைவிமார், குழந்தைகள், உறவினர்கள், பணியாளர்கள், இதர மனிதர்கள் போன்றவர்களையும் இந்த நோய்கள் தாக்குகின்றன. புகைப் பழக்கத்தை வெறும் கெட்ட பழக்கம் என்ற அளவில் இலேசாக எடுத்துக் கொள்ள முடியாது.

இது மீள முடியாத போதைப் பழக்கம். இதனை நிகோடின் போதை அடிமை நோய் என்று மருத்துவ உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

புகைப்பழக்கத்தை நிறுத்த,முதலில் புகைப்பதால் வரும் உடல் நலப் பாதிப்புக்களையும் வீண் செலவுகளையும் எண்ணிப்பாருங்கள். மீதி வாழ்க்கையை ஆரோக்கியமாக வாழ உறுதியான முடிவு எடுங்கள்.

## புகையிலை பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகள்

வாய், தொண்டை, நுரையீரல், வயிறு, சிறுநீரகம், சிறுநீர்ப்பை போன்ற உடற் பாகங்களில் புற்றுநோய் ஏற் பட புகையிலை காரணமாகிறது.

90 வீதத்துக்கும் அதிகமான நுரையீரல் புற்றுநோய் மற்றும் பிற நுரையீரல் நோய்கள் புகைப்பிடித்தலாலயே



ஏற்படுகின்றன. இதயம் மற்றும் இரத்தக்குழாய் நோய்கள் மாரடைப்பு, மார்புவலி, இதயக்கோளாறினால் ஏற்படும் திடீர் மரணம் ஸ்ட்ரோக் (மூளைப் பாதிப்பு), கால்களில் ஏற்படும் காங்கரின் எனப்பட்ட புற இரத்தக்குழாய் நோய்கள்,போன்றவை ஏற்பட புகையிலைப்பாவனை காரணமாகிறது.

இந்தியாவில் 80வீதம் நாட்பட்ட நுரையீரல் சுவாசக் குழாய் அடைப்பு நோய் ஏற்பட புகைப்பிடித்தல் காரணமாய் அமைகின்றது. புகையிலை மற்றமுகமாக நுரையீரல் டியூபர் குளோஸினை (ரி.பி) ஏற்படுத்துகிறது. எப்போதும் புகை பிடிப்பவர்களுக்கு ரிபி ஏற்படும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம் ஆகும். சிகரெட் அல்லது பீடிகளை பயன்படுத்தி புகை பிடிப்பவர்களுக்கு ரிபி ஏற்படும் வாய்ப்பு மிகவும் அதிகமாகும். புகைத்தல் மற்றும் புகையிலை திடீரென இரத்த அழுத்தத்தை அதிகரிப்பதோடு இதயத்துக்குச்செல்லும் இரத்த அளவையும் குறைக்கின்றது. புகையிலை கால்களுக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தையும் குறைக்கின்றது. கால்களில், கரங்களில் காங்கரின் எனப்படும் கால் மாமிசத்தை அரித்துவிடும் புண்களை இது ஏற்படுத்தலாம். புகையிலை உடல் முழுவதிலும் உள்ள தமினி எனப்படும் இரத்தத்தை ஏந்திச் செல்லும் இரத்தக்குழாய்ச் சுவர்களை சேதப்படுத்துகிறது. புகைத்தல், சிறுபிள்ளைகள் மற்றும் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கு உடல் நலக் கேட்டை ஏற்படுத்துகிறது.

புகைப்பழக்கம் இல்லாத ஒருவர் புகைப் பழக்கம் உள்ளவரோடு சேர்ந்து வாழும் போது புகைப்பிடிக்காத நபர் அவரை அறியா மலேயே சிகரெட்டைப் புகைக்க முயல்கிறார்.

இது அவரின் சிறு நீரில் உள்ள நிகோடின் அளவு கொண்டே கணிக்கப் படுகின்றது. புகைத்தல் மற்றும் புகையிலை பயன்பாடு நீரிழிவு ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கின்ற காரணியாக அமைகிறது எனக் கண்டறியப் பட்டுள்ளது. புகையிலை இரத்தத்திலுள்ள நன்மை பயக்கக்கூடிய கொழுப்பின் அளவைக் குறைக்கின்றது. புகைப்பிடிப்பவர்களுக்கு இருதய நோய் மற்றும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பு 2 முதல் 3 மடங்கு அதிகமாக உள்ளது.

ஒவ்வொரு 8 விநாடிகளில் ஒரு புகையிலை சம்பந்தமான சாவு நிகழ்கின்றது. புகையிலையைத்தவிர்ப்பதால் விடலைப்பருவத்தினரின் வாழ்நாள்கள் 20 ஆண்டுகளால் கூடுகின் றது. புகையிலை பயன்படுத்தும் விடலைப் பருவத்தினரில் பாதிப்பேர் புகையிலை பயன்பாட்டினால் கொல்லப்படுகின்றனர். ஆண்கள் மற்றும் பெண்களில் புகைத்தல் கெடுதலான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

ஆண்களில் மலட்டுத்தன்மை ஏற்பட புகைப்பழக்கம் ஒரு காரணமாக அமைகிறது. புகைத்தல் பெண்களில் ஈஸ்ரோகன் எனும் ஹார்மோன் சுரப்பதைக் குறைக்கிறது. மாதவிடாய் நின்று போவது குறித்த காலத்துக்கு முன்பே ஏற்படுகிறது. புகைக்கும் பெண்கள் கர்ப்பத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்தும்போது ஸ்ரோக் (மூளைப் பாதிப்பு) ஏற்படும் வாய்ப்பு விகிதம் அதிகரிக்கின்றது. புகைப்பழக்கம் உள்ள கர்ப்பிணிகளில் குழந்தையை இழக்க அதிக வாய்ப்பு உள்ளது. குறைந்த எடையுடன் கூடிய பிள்ளை பிறக்கும் வாய்ப்புள்ளது. வளர்ச்சியில் கோளாறுகள் கொண்ட குழந்தை பிறக்க வாய்ப்புள்ளது. பிறந்த குழந்தை திடீரென இறக்க வாய்ப்புள்ளது.

## புகையிலையைத் தவிர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்

உங்களுக்குப்புற்றுநோய் மற்றும் இதய நோய் ஏற்படும் ஆபத்து குறைகிறது. உங்கள் இதயத்தில் ஏற்படும் அழுத்தம் குறைகின்றது. நீங்கள் நேசிக்கும் நபர் புகையிலையினால் பாதிக்கப்படமாட்டார். உங்கள் புகைப் பழக்கத்தினால் ஏற்படும் இருமல் மற்றும் சளி மறையலாம். உங்கள் பற்கள் வெண்மையாகவும் சுத்தமாகவும் மாறும்.

புகையிலைப் பழக்கத்தை ஆரம்ப வயதிலேயே நிறுத்துவதன் பயன் மிகவும் அதிகம். புகை பிடிக்கும் பழக்கத்தை நீங்கள் விட்டுவிட்டால் இருதய நோய் வரும் அபாயம், புகைப்பிடிக்காதவர்களைப் போலவே 3 வருடங்களில் குறைந்து இயல்பான நிலைக்கு வருகின்றது.

## புகையிலையைத் தவிர்ப்பதால் ஏற்படும் சமூதாய நன்மைகள்

நீங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஒரு நபராக இருப்பின் சிகரெட் உங்களைக் கட்டுப்படுத்தாது, உங்கள் சுய தோற்றம் மற்றும் சுயநம்பிக்கை வளரும். இப்போதும் மற்றும் எதிர்காலத்திலும் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல பெற்றோராய் இருப்பீர்கள. புகையிலைப் பாவனையைத் தவிர்ப்பதால் மிஞ்சும் பணத்தை, வேறுகாரியங்களுக்கு பயன்படுத்தமுடியும். புகையிலைப் பயன்பாட்டை விட்டுவிட எந்த நேரமும் நல்ல நேரம்தான். புற்றுநோய் மற்றும் பிற மோசமான நோய்கள் ஏற்படு முன்னர் நடுத்தர வயதில் புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவது பிற்காலத்தில் புகையிலைப் பழக்கத்தால் ஏற்படும் மரணம் மற்றும் பிற ஆபத்துக்களை தவிர்க்கிறது.

புகையிலைப் பழக்கத்தை ஆரம்ப வயதிலேயே நிறுத்துவதன் பயன் மிகவும் அதிகம். புகைப்பிடிக்கும் பழக்கத்தை நீங்கள் விட்டுவிட்டால் இருதய நோய் வரும் அபாயம், புகைப்பிடிக்காதவர்களைப் போலவே 3 வருடங்களில் குறைந்து இயல்பான நிலைக்கு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லமுத்துவும் நத்தையும்

நல்லூர் பள்ளியில் நல்லமுத்து படித்து வந்தான். அவன்பெயர் தான் நல்லமுத்துவேயொழிய பெயருக்கும் அவனுக்கும் கொஞ்சமும் சம்பந்தம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்

வகுப்பிலேயே அவன் வடிகட்டிய முதல்தரமான முட்டாளாக இருந்தான். இதற்குக் காரணம் வீட்டில் அவன் பாடப் புத்தகத்தைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. நல்லமுத்துவுக்கு ஆண்டவன் நல்ல அறிவை அளித்திருந்தும் ஓரளவும் உழைக்காமல் உருப்படாதவன் ஆனான்.



அவனுடைய சோம்பலே அவனுக்கு முட்டாள் பட்டத்தை வாங் கிக் கொடுத்தது. அதனால் மற்ற மாணவ - மாணவிகள் அவனைச் சிறிதும் மதிப்பதில்லை. ஆசிரியர்க்ள பல வழிகளில் எத்தனையோ முறை புத்திமதி சொல்லியும் நல்லமுத்து திருந்தியபாடில்லை.

தவணைப் பரீட்சை நெருங்கிக்கொண்டிருந் தது. பாடசாலைப் பிள்ளைகள் எல்லோரும் இரவும் பகலும் இடையறாது கண் விழித்துப் படித்துக் கொண்டிருந்தனர். ஆனால்நல்லமுத்துவோ படிக்காமல் "செல்ல முத்து" வாகக் காலத்தைக் கடத்தினான்.

ஒருநாள் காலை...

நல்லமுத்து படுக்கையை விட்டு எழுந்து வந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றான். அவனது தாயார் நல்லமுத்துவைப் பார்த்து... "ஏனடாமுத்து, பரீட்சை வருகிறது... இப்பவாவது புத்தகத்தை எடுத்துப் பார்க்கக் கூடாதா? காலைப் படிப்பு, ஒரு மாதப் படிப்பு என்று பெரியவர்கள் சொல்வார்களே. அதெல்லாம் உனக்கு எங்கே தெரியப் போகுது.." என்று மகனைக் கோபித்துக் கொண்டாள்.

நல்லமுத்து தன் தாய் சொன்னதை ஒரு காதில் வாங்கி மறு காதாலே விட்டுவிட்டு பல்துலக்க வீட்டுத் தோட்டத்தைநோக்கிச் சென்றான். கிணற்றடியில் நின்று பல் தேய்த்துக்கொண்டிருந்த அவன் தோட்டத்தின் ஒரு பக்கத்து மூலையின் ஒரு நத்தை ஊர்ந்து வருவதைக் கண்டான். அடுத்த கணமே அவன் பார்வை வேறு பக்கங்களில் சென்றது. இவ்வாறு தோட்டத்தைப் பல பக்கங்களிலும் நோட்டம்விட்டவன் தற்செயலாகச் சற்று முன் நத்தை ஊர்ந்த அந்த மூலையைப் பார்த்தான். அங்கே நத்தை காணப்படவில்லை. வியப் படைந்த அவன் சுற்று முற்றும் பார்த்த போது அந்த நத்தை அவன் காலடிக்கு அருகில் ஊர்ந்து வந்த வண்ணம் இருந்தது. அது அவ னுக்கு மிகவும் ஆச்சரியமாகப் பட்டது. மீண்டும் மீண்டும் அவன் சிந்தித்துப் பார்த்தபோது அவனுக்கு அது ஒரு நல்ல படிப்பினையைத் தந் தது. "இவ்வளவு சிறிய நத்தை மெதுவாக ஊர்ந்த போதிலும், அதனால் இவ்வளவு தூரத்தைக் கடக்க முடியும் போது, புத்தி யுள்ள நான் ஏன் தினம் கொஞ்சம் கொஞ்சமாகப் படித்துக் கல்வியில் முன் னேறக் கூடாது?" என்று எண் ணினான்.

அப்போது அவனுள்ளே ஞான ஒளி பிரகாசிக்கத் தொடங்கியது. அந்தச் சுடரில் அவனது ஆசிரியர் தோன்றி "தினமும் படித்தால் பரீட்சையில் வெல்லுவாய்"என்று சொல்லுவது காதில் ஒலிப்பதுபோல் இருந்தது

நத்தையை உதாரணமாகக்கொண்டு நல்ல முடிவெடுத்த நல்லமுத்து, அன்றுமுதல் உற்சாகமாகக் கற்று பரீட்சையில் நிறையப் புள்ளிகளைப் பெற்று கல்வியில் சிறந்து விளங்கினான்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1513 - தற்போது புளோரிடா என அறியப்பட்ட பகுதியை ஸ்பானிஷ் கண்டுபிடிப்பாளர் யூவான் பொன்ஸ் டிலியோன்தான் முதலில் கண்ணுற்றார்.

1800 - லுட்விக் வன் பீத்தோவன் வியன்னாவில் தமது முதல் சுரங்களின் ஐக்கியத்தை (சிம்பொனி) நிகழ்த்தினார்.

1851 - நாலாம் ராமா தாய்லாந்து அரசராக முடிசூடினார்.

1900 - ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் பரோக்கர் சட்டத்தை நிறைவேற்றி புவோற்றோறிகோவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை வழங்கியது.

1902 - "மின்சார அரங்கு" என அழைக்கப்பட்ட அமெரிக்கா லொஞ் ஏஞ்சலில் முழுநேர திரைப்பட அரங்கு திறந்து வைக்கப்பட்டது.

1911 - ஆஸ்திரேலிய புள்ளி விவரவியல் சபையால் அந்த நாட்டினுடைய தேசிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

1912 - டைட்டானிக் கப்பல் பரீட்சார்த்த ஓட்டத்தைத் தொடங்கியது.

1917 - முதலாம் உலக மகாயுத்தம். அமெரிக்க ஜனாதிபதி வுட்றோவ் வில்சன், ஜேர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்ய அமெரிக்க காங்கிரஸின் அனுமதியைக் கோரினார்.

1921 - கொறோசன் சுயாட்சி அரசு இராணுவ மயப்படுத்தப்பட்ட அரசால் நவீன ஈரான்நாடு ஸ்தாபிக்கப்பட்டது.

1945 - பிரேஸிலுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் ராஜதந்திர உறவு ஏற்படுத்தப்பட்டது.

1972 - 1950 களில் கம்யூனிஸ்ட் என முத்திரை குத்தப்பட்ட நிலையில், நடிகர் சார்ளிசப்ளின் முதற்தடவையாக அமெரிக்காவுக்கு திரும்ப வருகை தந்தார்.

1975 - சீ.என்.கோபுரம் கனடா ரொறன்ரோவில் பூர்த்தி செய்யப்பட்டது. அது 553.33 மீற்றர் உயரம் கொண்டது.

1982 - போக்லாந்து தீவுகளுக்குள் அயர்லாந்து படைகள் புகுந்தன.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....







## பூச்செடியாம் பூச்செடி

பூச்செடியாம் பூச்செடி இது
அப்பா வாங்கித்தந்த பூச்செடி

புத்தம் புதுப் பூச்செடி
பூவைச் சுமக்கும் பூச்செடி

நட்டு வைத்தேன் நானுமே
நன்றாய் வளர வேண்டுமே

காலையிலே எழுந்த உடன்
நானதற்கு நீர் கொடுப்பேன்

நன்றியோடு முகமலர்ந்து அது
நல்வாசமுள்ள பூக் கொடுக்குமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப்பார் இளம் சமூகமே...

உடுவிலூர் கலா



மனிதவாழ்க்கை சாவை நோக்கிப் பயணிக்கிறது மனிதனோ பணத்தைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறான். பணமே வாழ்வில் முக்கியமானது எனக்கூறிக் கொண்டு பல வழிகளிலும் திசைமாறி ஓடுகிறான். தான் செல்லும் பாதை சரியா தவறா என்பதைச் சிந்திக்கக்கூட முடியாத அளவுக்கு பணத்தின் கட்டாயத்தை உணர்ந்து விட்டான். வளர்ந்து விட்ட அறிவியல், ஆடம்பரமோகம், மனிதர்களுக் கிடையேயான கௌரவம் என்பவை பணத்தின் தேவையை உணர்த்தி நிற்கின்றன.

நாளுக்கு நாள் மாற்றமடையும் இன்றைய நாகரிகம், மனிதனைப் பொருளாதார நெருக்கடிக்குள் இட்டுச் செல்கிறது. பணத்தைத் தேடுவதிலேயே குறிக்கோளாக செயற்படும் மனிதன், நேரிய வழியில் தேடவேண்டும் என்பதை மறந்தே விட்டான்.

பணத்தைத் தேட மனிதன் களவு, கொலை, ஆட்கடத்தல், போதைப் பொருள்கடத்தல் என்பவற்றைத் தெரிவு செய்து தாராளமாக பணம் புரள வாழ்கின்றான். இதனால் சமுதாயத்தில் அமைதியின்மையும், வேதனையும் கண்ணீருமே நிரந்தரமாகி விட்டன. இன்று சமூகத்தில் நடக்கின்ற தீய செயல்கள் யாவுக்கும் போதைப்பொருள் பாவனையே காரணம். அப்படியாயின், போதைப்பொருள் கடத்தல்காரர் சமூகத்தின், இனத்துரோகிகள் அல்லவா...? மனச்சாட்சிக்குப் பயந்த மனிதன் தன் அறிவால் சிந்தித்து சரீர உழைப்பால் பணத்தைத் தேடுகிறான். மனச்சாட்சி இல்லாத, மனிதம் மரித்தவர்கள் தமது சுகபோக வாழ்க்கைக்காக ஏனையவர்களின் உதிரத்தை உறிஞ்சி, குடும்பங்களில் விரிசல்களை உண்டுபண்ணி பணத்தைத் தேடுகிறார்கள்.

பணம் என்பது மனிதனது உயிர் உள்ளவரை தான். சாவு என்பது எல்லோருக்கும் பொதுவானது, கட்டாயமானது, உறுதியானது, எவராலும் சாவை மறுதலிக்க முடியாது. சிலரது மனம் நினைத்த மாத்திரமே நடந்து விடுகிறது. எதிர்பாராத விதமாக விபத்துகளில் சாவு சிலருக்கு ஏற்படுகிறது. இன்னும் சிலர் பெரும் அவஸ்தைப்பட்டு உயிரை விடுகின்றனர். ஆனால், சமூகத்துரோகிகளான சிலர் சாவோ அவஸ்தையோ தமக்கு ஏற்படப்போவதில்லை என இறுமாப்படைந்தவர்களாக அருவருக்கத்தக்க பல செயல்களைச் செய்கின்றனர்.

பால்மணம் மாறாத பச்சைக் குழந்தைகளும், பருவப் பெண்களும் போதைக் காமுகர்களுக்கு பலியாகி, மரணித்துள்ளனர். எவரோ கட்டிய வீடுகளை உடைத்து, எவரோ தேடிய பணம், பொருள்களை எல்லாம் கொள்ளை அடித்துள்ளனர். இன்னும், எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களின் கரங்களில் போதைப் பொருள்களை இனிப்பாக, பாக்காக, குளிர்பானமாகக் கொடுத்து சிறைக்கம்பிக்குள் அடைத்துள்ளனர். ஒருநாட்டின் பொருளாதாரத்தின் தூண்களான இளைஞர் சமுதாயத்தை போதைப் பாவனைக் குட்படுத்தி சந்திக்குச்சந்தி நின்று அரட்டை அடிக்கவும், பெண்பிள்ளைகளைக் கிண்டல் பண்ணவும், நிலைதடுமாறி ஆட்டம் போடவும் செய்துள்ளனர். இன்னும் எத்தனை எத்தனை கொடூரங்கள்? வாள்வெட்டுக்கள்? கொலைகள்?

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதனினும் அரிது குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என்ற ஔவையின் வாக்கை மறந்தவர்களாக வாழும் மனித இனம், தீய செயல்களால் மாண்டு மடிகிறது. புலிகளின் ஆட்சிக் காலத்தில் நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என நீதி முரசறைந்தது. அன்றைய சமூகத்தின் அமைதி நேர்மை இனி எப்போ வரும்? பெண்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது அன்று. இன்று பெண்கள் சுவாசிக்கவே முடியாத நிலை. போதைப் பொருள், களவு, வன்புணர்வு என்ற சொல்லுக்கே அன்று இடமிருந்ததில்லை. இன்று அவையே எமது இனத்தை ஆட்சி செய்கின்றன. இளம் பருவத்தினர் அன்று மண்மீட்க மொழிமீட்க, பெண்களை மீட்க ஆயுதமேந்தினர். இன்று மொழியைச் சிதைக்க, இனத்தை அழிக்கப் பெண்ணினத்தை வன்புணர்வு செய்து படுகொலை செய்ய இளைஞர் சமூகம் போதைப் பொருள்களோடு அராஜகம் செய்கின்றது.

இளையோரே, ஒருதடவை கடந்த காலத்தைத் திரும்பிப் பாருங்கள். உங்களைப் போன்ற வகை தொகையில்லா இளைஞர், யுவதிகள் எதற்காக கொலைக்களத்தில் கொலையுண்டனர்? அவர்கள் செய்த தியாகங்கள்தான் எத்தகையது? அன்று பலமாக சாவுமணி அடிக்கப்பட்ட நாசகாரச் செயல்கள் எல்லாம் இன்று உயிர்பெற்று உருவங்களாகின்றன என்பதை ஒரு தடவை எண்ணிப் பார்ப்பீர்களா? உங்கள் இனத்தை, உங்கள் மொழியை, உங்கள் பெண்களை பாதுகாக்க வேண்டியது உங்கள் தலையாய கடமையல்லவா? தமிழன்னையின் தவப்புதல்வர்கள் நீங்கள். நீங்களா இவ்வாறு மாற்றம் பெற்றீர்கள்? உங்களை மாற்றியவர்கள், பகடைக்காய்களாகப் பயன்படுத்தியவர்கள் தலைகுனியும் வகையில் உங்கள் செயற்பாடுகளை, மனங்களை மாற்றியமையுங்கள். மாற்றம் ஒன்றே மாறாதவை. படுகுழிக்குள் விழுந்து விடாமல் தவறான பாதையைவிட்டு விடுங்கள். வீரத்தோடு போராடியவர்களின் வழித்தோன்றல்களாகிய நீங்கள் உங்கள் வீரத்தை மூடைகட்டி வைத்துவிட்டு உங்கள் இனத்தை அழிக்கத் துணிந்தது ஏன்? அநியாயம் என்பதை உணர்ந்து மாறி விடுங்கள். அமைதியாக வாழ்வோம். வாளோடு தோன்றிய மூத்த தமிழ் குடி மரபினர் நாங்கள். பண்பாடு காத்து வாழ பணத்துக்காக அநியாய வழியில் வாழ்வோரின் சகவாசத்தில் நின்று விலகுவோம் [illegible] இளையோரே...

# மீண்டும் வடக்கில் இராணுவ வலயங்களுக்கான வளையமா?

புதிய அரசு பதவியேற்று ஓராண்டு பூர்த்தி நிறைவடைந்து விட்டது. மன்மத வருடத்தின் பயணம் முடிவடைந்து புதிய வருடத்தின் வருகையை எதிர்பார்த்திருக்கும் தருணங்கள் எம்முன் நகர்கின்றன.வருகின்ற ஆண்டு துர்முகி ஆண்டாக அமைய இருக்கிறது.தன் வருகைக்கு முன்பாக தமிழர்கள் மத்தியில் தன் முக பாவனையை ஆக்ரோசத்திற்கான ஆரம்ப புள்ளியாக, திருக்கோலமாக காட்டியிருக்கிறது.இந்த காட்சிகள் பல விடயங்களை எம்முன் யதார்த்தமாக சிந்திக்க தூண்டுவதுடன் பழமை நினைவுகளை எம்முன் நிழலாடச் செய்கின்றன.

கடந்து சென்ற 30 ஆண்டுகால தமிழர் உரிமைக்கான தியாகப் போர் திட்டமிடப்பட்ட முறையிலே மிகப் பெரிய மனித அவலத்தின் பின்னணியில் அரங்கேற்றப்பட்டதன் பிற்பாடு, ஆறு ஆண்டுகள் நிறைவில் எந்தவித மீள் எழுச்சியும் இல்லாத, பரிகாரங்களும் பெறாத தமிழ் இனக் குழுமத்தின் மத்தியில் புதிய அரசு மைத்திரியோடு தோற்றம் கொண்டது.தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நல்லாட்சி என்ற நாமம் அசலா..? நகலா..? என்ற நிலைமாறும் நகர்வுகளாக நகர்கின்றன. நல்லிணக்கம் என்ற பெயரில் வடக்கே பம்பரமாய் சுழற்றி விடப்படுகின்றது.

குறிப்பாக புதிய அரசின் தோற்றம், நல்லாட்சி, நல்லிணக்கம் வார்த்தைகளின் தென்றல், வடக்கே தமிழர்பிரதேசங்களில் மலிவாக்கப்பட்டிருக்கிறது. நிகழ்வுகள் பெருமெடுப்பில் இடம்பெறுகின்றன.

இதற்கிடையே தற்போது மக்கள் மத்தியிலும் தெற்கின் அரசியல் புலங்களிலும் அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளின் பின்னணியிலான ஒருவித பதற்றத்தையும் ஏற்படுத்திவிட்டிருக்கின்ற செயல்நிலைகள் இடம்பெற்றிருக்கின்றன. வடக்கே தொடராமல் முடுக்கிவிடப்பட்டுள்ளன. உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமாக இருந்து விடுவிக்கப்பட்ட மறவன்புலோ பிரதேசத்தில் வீடு ஒன்றிலிருந்து தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அதன் பின்னணியில் இருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலே முன்னாள் போராளிகள் என்ற பெயரிடலில் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக வடக்கின் சில பிரதேசங்களிலும் வெடி பொருள்கள் மீட்கப்பட்டன. இந்த சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.இதற்கிடையே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இவை தென்பகுதிக்கு கொண்டுவரப்பட தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தவை என்று கலகலத்திருக்கிறார். அப்படித் தெரிந்திருந்தால் பொலிஸாரிடம் முறையிட்டிருக்கலாம் என்று பிரதமரும் அதற்கு பதில் கதை அடித்திருக்கிறார்.இதற்கு சமாந்தரமாக கடந்த அரசின் பதவிக் கதிரைகளில் குந்தியிருந்த பிரதான பிரகிருதிகள் விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்கப் போகின்றனர் என்ற ரீதியிலே கருத்துக்களைப் பரப்பிவிட்டிருக்கின்றனர்.

புதிய அரசின் தோற்றத்தின் பின்னர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளை ஏற்பதான அதற்கு கீழ்படிவ்தான செயற்பாடுகளை எத்தனிப்பதாக காட்டிக் கொள்ளகின்றது. மேற்குலகத்தின் பார்வைகளில் அந்த விடயங்களை ஒளிமயமாக்குவதற்காக பிரதானமாக இன சமத்துவம்,மீள் குடியமர்வு, மீள் நிர்மாணம், நல்லிணக்கம் என்பவற்றை மந்த கதியில் செயல்முனைப்பின்றி நகர்த்தி வருகின்றது.

போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்த நிலையில் வடக்கே இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படவில்லை, இராணுவ முகாம்கள் முற்று முழுதாக அகற்றப்படவில்லை, உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களின் வளம் நிறைந்த பகுதிகள் பல இன்னமும் விடுவிக்கப்படவில்லை, கடல் வளமும் நில வளமும் முற்றாக இராணுவத்தால் சூறையாடப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் சொந்த நிலங்களை விட வேண்டும், அங்கு மீள்குடியமர அனுமதிக்க வேண்டும், நில அபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற ஆதங்கங்களோடு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.




இந்த நிலையில் தற்போதைய அரசு தமக்கான செயல்வலு நிலைகளை, தாங்கள் வடக்கே நிலை கொண்டிருப்பதற்கான நியாயங்களைச் சத்தமின்றி திட்டமிட்ட செயற்பாடுகள் ஊடாக சர்வதேச வெளியில் நிலைநிறுத்த திட்டமிடுவது போலத் தோன்றுகிறது.

உண்மையில் இன நல்லுறவை குழப்பும் முயற்சிதான் வெடி பொருள்களின் மீட்பு என்று தெரிவித்துக்கொண்டு மறைமுகமாக வழக்கமான அரசின் இராஜதந்திர செயல்வடிவங்களை நல்லாட்சி என்ற சொற்களின் பின் ஒளிந்திருக்கின்ற மந்திரவாதிகளாக செயற்படுத்தி வருகின்றனர்.

ஆக,மக்கள் அனுபவப் பட்டறிவு உடையவர்கள்.இந்த செயல் நிலைகள் சரியான முறையிலே அரசால் அணுகப்பட வேண்டும் என்கின்ற நிலைமைகளை எதிர்பார்த்து நகர்கின்றனர் என்பதனை உளமாரப் புரிந்து செயலாற்ற வேண்டும். மக்கள் இந்த செயற்பாடுகளை மீண்டும் இராணுவ வலயங்களுக்கான வளையமா...? அடித்தளமா...? என்ற தர்க்க ரீதியான சிந்தனைகளோடு பார்ப்பதனையும் எச்சரிக்கையோடு தங்களின் நிலைகளை தக்க வைக்க நேர் சிந்தனையோடு நகர்வதனையும் புரிந்து [illegible] வேண்டும். நல் அரசாய் தீர்வுகளை விரைந்து பெற்றுத் தர [illegible] நோக்கி நகர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




★ PalaniKing ★ VJ ★ @palanikannan04

கடவுளை வேண்டி அங்கப்பிரதட்சணம் செய்வதைவிட, கடமையை நினைத்து அவ்வப் போது வேலையைச் செய்தாலே எம்முடைய வாழ்க்கை நல்லா இருக்கும்.

## தாயும் தாரமும்!

தாய் – கருவில் சுமப்பவள்! தாரம் – கழுத்தில் சுமப்பவள்!!

தாய் – வத்தெடுப்பவள்! தாரம் – தத்தெடுப்பவள்!!

தாய்– இதயத் துடிப்பு தந்தவள்!! தாரம் – இயக்கத்தில் துடிப்பு தருபவள்!!

தாய்– அனைவருக்கும் முதல் தொட்டில்! தாரம் – இரண்டாவது தொட்டில்!!

தாய்– உலகில் முதல் தெய்வம்! தாரம் – தாய்க்கு நிகரான தெய்வம்!!

தாய் – உயிர்! தாரம் – உடலும் உயிரும்!!

தாய்– பந்தயக் களம் வரை அழைத்து வருபவள்! தாரம் – பந்தயத்தில் பங்கு வெறுபவள்!!

தாய்– நேற்று இன்று! தாரம் – இன்று நாளை!!

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 5 | 1 | 8 | 9 | | | 4 |
| 3 | 2 | | | | | | | |
| | | | | | | | | |
| 9 | | | | 2 | | 4 | | |
| | | 1 | | | | 8 | | |
| | | 7 | | 5 | | | | 3 |
| | | | | | | | | |
| | | | | | | | 5 | 7 |
| 8 | | | 6 | 7 | 4 | 1 | 9 | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 4 | 2 | 7 | 1 | 3 | 8 | 9 |
| 8 | 2 | 7 | 9 | 3 | 5 | 6 | 1 | 4 |
| 9 | 3 | 1 | 6 | 8 | 4 | 5 | 2 | 7 |
| 3 | 5 | 6 | 7 | 4 | 2 | 8 | 9 | 1 |
| 2 | 4 | 9 | 1 | 6 | 8 | 7 | 5 | 3 |
| 1 | 7 | 8 | 5 | 9 | 3 | 4 | 6 | 2 |
| 6 | 1 | 2 | 3 | 5 | 7 | 9 | 4 | 8 |
| 4 | 9 | 3 | 8 | 2 | 6 | 1 | 7 | 5 |
| 7 | 8 | 5 | 4 | 1 | 9 | 2 | 3 | 6 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## போட்டி போடும் நடிகைகள்

முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி போட்ட சீனியர் நடிகைகள் அனுஷ்கா, திரிஷா, நயன்தாரா தற்போது ஹீரோயின் முக்கியத்துவம் உள்ள படங்களில் கவனம் செலுத்துகின்றனர். "பாகுபலி", "ருத்ரம்மாதேவி", "அருந்ததி", "இஞ்சி இடுப்பழகி" படங்களில் நடித்த அனுஷ்கா தற்போது "பாகுபலி 2" இல் நடிக்கிறார். "மாயா", "நீ எங்கே என் அன்பே" ஹீரோயின் கதை அம்ச படங்களில் நடித்த் நயன்தாரா தற்போதும் அதுபோன்ற கதைகளையே தெரிவு செய்கிறார். இந்தப் பட்டியலில் தன்னை இணைத்துக்கொண்டிருக்கிறார் திரிஷா.
ஹீரோவுக்கு முக்கியத்துவம் இல்லாமல் ஹீரோயினை மையமாக வைத்து உருவாகும் "நாயகி". படத்தில் தற்போது நடித்து வரு கிறார். அடுத்தும் இதுபோல் ஒருகதையைத்தேடிக்கொண்டிருக்கிறார். இந்தியில் அனுஷ்கா சர்மா நடித்து வெற்றி பெற்ற "என்எச்10" படம் ஹீரோ யினை மைய்மாகக் கொண்ட கதை. அந்தப் படம் தமிழில் ரீமேக் செய்யப்பட்டால் அதில் நடிக்க குறி வைத்திருக்கிறாராம். அந்தப் படம் மீது அனுஷ்காவும், நயன்தாராவும் தங்களது பார்வையைத் திருப்பி இருக்கிறார்கள்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கவனத்தோடு பேசுவதால் சிரமம் வராமல் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான, புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் அடைவதில் தாமதம் உண்டாகும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**இடபம்:** நண்பரின் கருத்தைக் குறை கூற வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது போதுமானது. செலவுக்குக் கடன் வாங்க நேரிடலாம். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்கக் கூடாது.

**மிதுனம்:** எதிரிகள் இடம் மாறிச் செல்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி இனிதே நிறைவேறும். பண வருமானம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**கடகம்:** செயல்களில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான சூழ்நிலை உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும். கலை அம்சம் மிக்க பொருள்களை வாங்குவீர்கள்.

**சிங்கம்:** சிலரது பேச்சு, உங்களைச் சங்கடப் படுத்தலாம். தொழில், வியாபாரம் செழிக்கக் கூடுதல் உழைப்பு உதவும். பணவரவைவிட செலவு அதிகரிக்கும். புத்திரரின் நற்செயலை ஊக்கப்படுத்துவீர்கள்.

**கன்னி:** குடும்ப விடயம் பற்றிப் பிறரிடம் பேச வேண்டாம். நம்பிக்கையுடன் செயற்படுவதால் தொழில், வியாபாரம் செழிக்கும். அளவான பணவரவு கிடைக்கும். அதிக நிபந்தனையுடன் பணக்கடன் பெற வேண்டாம்.

**துலாம்:** தாயின் அன்பும், ஆசியும் பலமாகக் கிடைக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். வருமானம் அதிகரிக்கும். இயன்ற அளவில் தர்மச் செலவு செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** எதையும் புதிய கண்ணோட்டத்துடன் அணுகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவு சுமாராக இருக்கும். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.

**தனுசு:** சமூகப் பணிபுரிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். இலாபம் படிப்படியாக உயரும். குடும்பத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** தன்மானத்துக்கு இடையூறு வரலாம். தொழிலில் போட்டி குறுக்கிட்டாலும் திறம்படச் சமாளிப்பீர்கள். மிதமான பணவரவு கிடைக்கும். உறவினர் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயல்வீர்கள்.

**கும்பம்:** மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவர். நண்பரால் உதவி உண்டு.

**மீனம்:** தகுதி திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி நிறைவேறும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித்தருவீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையலறைக் குறிப்புகள்

- பலவித சாதங்கள் செய்யும்போது அரிசியைக் கழுவி அதனுடன் சிறிது எண்ணெய் விட்டு ஊற விடுங்கள்.
- காய்கறிகளை ஒன்றும் பாதியுமாக வேக வைத்து உண்ணுவதும் நல்லது.
- காய்கறிகளைப் போட்டு வதக்கிச் செய்யும் உணவுப் பொருள்களில், வெங்காயம் மற்றும் காய்கறிகளைப் போட்டு வதக்கிய பின்னரே இறுதியாகத் தக்காளியைப் போட்டு வதக்கவும்.
- மீன் மற்றும் கறியைச் சுத்தம் செய்யக் கழுவும் போது சிறிது மஞ்சள் தூள் போட்டு உரசிக் கழுவவும்.
- பருப்பைக் கடைந்து வைக்கும் குழம்பில், ஒரு நாளை அதிகமான தக்காளி, மற்றொரு நாளுக்கு மாங்காய் என விதம்விதமாகச் சேர்த்து அசத்தலாம்.
- தேங்காய்ச் சாதம் செய்கிறீர்களா? அத்துடன் வேர்க்கடலையை ஒன்றிரண்டாகப் பொடித்துப் போட்டு, காய்கறிகளையும் வதக்கிப் போட்டுச் செய்யலாம்.
- மோர்க்குழம்பு வைக்கும்போது, அரை நெல்லிக்காய்களை அரைத்துப் போட்டால் சுவை மிகுதியாக இருக்கும்.
- காய்கறிகளைச் சமைக்கும்போது அவற்றில் பச்சை நிறம் போகாமலிருக்க, அவற்றை நறுக்கியதும் உப்புக் கலந்த வெந்நீரில் சிறிது நேரம் போட்டு வைத்து விட்டுப், பிறகு ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு வேக விட்டு எடுக்கவும்.





## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 700 | – |
| நண்டு | 200 | 400 | 300 | 400 | 300 | 150 | – |
| கணவாய் | 500 | 600 | 500 | 450 | 500 | 650 | – |
| பாரை | 400 | 500 | 500 | 600 | 600 | – | 420 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | – | 600 |
| சீலா | 250 | 450 | 400 | 450 | 400 | 400 | 350 |
| விளை | 500 | 500 | 400 | 600 | 400 | 400 | 400 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 350 | 300 | 350 |
| கும்பிளா | 300 | 350 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 600 | 800 | – | – | 400 | 600 | – |
| ஒரா | 400 | 400 | – | – | 300 | – | – |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 250 | 300 | 300 |
| நகரை | 150 | 250 | – | 250 | 300 | – | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 200 | 200 | 300 | – |
| ஒட்டி | 250 | 250 | 150 | 200 | – | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | – | 300 | 130 |
| மதனம் | 150 | 200 | 180 | 200 | 250 | – | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 130 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 300 | 300 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 350 | 250 | 400 | – |

## நாளை

**பங்குனி -21**

ஞாயிற்றுக்கிழமை
03.04.2016
திதி: ஏகாதசி
பி.இ.01.46 வரை
நட்சத்திரம்: திருவோணம்
மு.ப.09.52 வரை
ராகுகாலம்:
04.40-06.10 வரை
சுபநேரம்:
09.10-10.40 வரை
ஏகாதசி விரதம்

## மசாலா அப்பளம்

**தேவையானவை**

அப்பளம் – 3
கரட் துருவல் – 1 தேக்கரண்டி
உப்பு – சிறிதளவு
நறுக்கிய வெங்காயம் – 1
நறுக்கிய தக்காளி – 1
நறுக்கிய பச்சை மிளகாய் – 1
மசாலா – சிறிதளவு



**செய்யும் முறை**

அப்பளத்தைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் போட்டு நன்கு கலக்கிக் கொள்ளவும். அப்பளத்தை எண்ணெயிலோ அல்லது மைக்ரோ வேவனிலோ வைத்துப் பொரித்துக் கொள்ளவும். அப்பளத்தைப் பொரித்து எடுத்து அதனை லேசாக வளைத்துக் கொண்டு, அதில் வெங்காயம், தக்காளி கலவையைத் தூவி உடனே சாப்பிடவும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 40 | 30 | 40 | 25 | 30 |
| கத்தரி | 60 | 40 | 70 | 60 | 50 | 60 | 35 | 40 |
| கரட் | 80 | 80 | 80–160 | 100 | 100 | 120 | 70 | 130 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 50 | 60 | 35 | 40 |
| பயிற்றை | 60 | 80 | 80 | 40 | 60 | 40 | 30 | 70 |
| பாகல் | 120 | 100 | 100 | 100 | 100 | 160 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 70 | 80 | – | 60–70 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 70 | 90 | 80 | 90 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 80 | 80 | 60 | 90 | 70 | 60 |
| பூசணி | 50 | 30 | 40 | 40 | 20–25 | 40 | 20 | 35 |
| தக்காளி | 40 | 40 | 30 | 20 | 40 | 60 | 25 | 30 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 | 40 | 40 | 40 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 30 | 20 | 20–30 | 30 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 80 | 100 | 100 | 80 | 100 | 80 | 90 |
| புடோல் | 50 | 50 | 50 | 40 | 50 | 30 | 30 | 40 |
| கோவா | 50 | 20 | 50 | 60 | 50 | 100 | 65 | 60 |
| வெண்டி | 80 | 60 | 50 | 60 | 50 | 60 | 40 | 60 |
| போஞ்சி | 160 | 120 | 120 | 140 | 100 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 | 120 | 160 | 100 | 80 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 35–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 80 | 90 | 65 | 100 |
| தேசிக்காய் | 100 | 180 | 120 | 140 | 160 | 400 | 180 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 80 | 100 | 100 | 100 | 100 | 120 | 50 | 80 |
| இராசவள்ளி | 160 | 140 | 130 | 140 | 140 | – | 110 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 500 | 350 | 300 | 400 | 475 | 300 |
| பனங்கிழங்கு | – | 05 | – | – | 07 | – | – | – |





## சிறிய கைப்பை

சிறிய அளவிலான கைப்பைகள் அறிமுகமாகியுள்ளன. தோல் பொருள்களில் உருவாக்கப்பட்ட இந்தப் பைகள் கார்ட்டூன் உருவங்களின் வடிவமைப்பில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இவை தோளில் அணிவதற்கான நீண்ட நாடாவையும் கொண்டுள்ளன. இவற்றின் விலை 450ரூபா தொடக்கம் 600 ரூபா வரை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



## சமிக்ஞையில் இயங்கும் உயிருள்ள வண்டுகள்

விஞ்ஞானிகள் உயிருள்ள இலத்திரனியல் இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளனர். பூச்சிகளில் உள்ள உணர் திறன் அரும்பைக் கருத்திற்கொண்டு இந்தக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளது. வண்டு ஒன்றில் இலத்திரனியல் சாதனங்கள் அதன் உணர் அரும்புடன் இணைக்கப்பட்டு வண்டின் செயற்பாடுகள், வேகம், திசை, தசை அசைவு என்பவற்றைச் சமிக்ஞை மூலம் கட்டுப்படுத்தும் கண்டுபிடிப்புச் செயற்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்பக் கல்லூரிக் குழுவினர் இந்த உத்தியைக் கண்டுபிடித்துள்ளனர். மனிதக் கட்டுப்பாட்டினுள் பூச்சிகளைக் கொண்டு வருவது தொடர்பான ஆராய்ச்சியில் இவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இவ்வாறான ஆராய்ச்சிக்கு வண்டுகள் பயன்படுத்தப்படுவதற்கு மன்னிப்புக் கோரப்பட்டதுடன் மனித குல நன்மைக்கு இது நிச்சயம் பயன் அளிக்கும் எனக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இடிந்த கட்டடம் ஒன்றில் சிக்கி இருப்பவர்களை அறிய இவ்வாறான வண்டுகளின் மூலம் தகவல் அறிய முடியும். மனிதர் செல்லமுடியாத பாதைகளில் வண்டுகளை அனுப்பி நிலைமையைக் கண்காணிக்க முடியும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

வண்டுகளைப் பயன்படுத்துவது மிகவும் பயனுள்ளது என்பதுடன் இலாபகரமானதும் ஆகும். இயந்திரங்களைப் பேணுவது போன்று சிரமமானது அல்ல. இவற்றில் மின்சாரம் ஏற்றவேண்டிய தேவை இல்லை. பல மில்லியன் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் இவற்றால், விஞ்ஞானிகளுக்கு நன்மைகள் அதிகம் கிட்டும். இயந்திரத்தை இயக்க வேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால், வண்டுகள் தம்மைத் தாமே இயக்கக்கூடியவை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பில் இருந்து அடுத்த கட்டத்திற்கு மேம்படும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். (த-ரி4)

## ஸ்மார்ட் கைபேசி மூலம் இனி மின் விளக்குகளை கட்டுப்படுத்தவும் வழி

மனிதனின் அனைத்து விதமான அன்றாட செயற்பாடுகளையும் ஸ்மார்ட்கைபேசியின் உதவியுடன் கட்டுப்படுத்தும் அளவுக்கு இன்று தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துவிட்டது.

இதற்கிணங்க மின் விளக்குகளை முற்றுமுழுதாக ஸ்மார்ட் கைபேசியைக் கொண்டு கட்டுப்படுத்தக்கூடிய சாதனத்தை எனிவெயார் சொலூசன்ஸ் நிறுவனம் வடிவமைத்துள்ளது. மிகவும் சிறிய அளவிலான இந்தச் சாதனம் தொழிற்படும் விதத்தை வீட்டில் இருந்தோ அல்லது தொலைவில் இருந்தோ கண்காணிக்கக்கூடிய வகையிலான ஸ்மார்ட் கைபேசி அப்பிளிக்கேசனும் உருவாக்கப்பட்டுள்ளது.



விரைவில் சந்தைக்கு வரவுள்ள இந்தச் சாதனத்தின் செயற்பாட்டை விளக்கும் வீடியோ ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (த)

# ஏ.ஐ.ஏ. முன்னிலையில்



காப்புறுதித் துறையில் உலகிலேயே மிகவும் முதற்தரமானதும் கௌரவமானதுமான மில்லியன் டொலர் வட்ட மேசை சம்மேளனத்துக்கு இலங்கை சார்பில் அதிக எண்ணிக்கையான 63 பேரைத் தகுதி பெறச் செய்ததன் ஊடாக கௌரவத்துக்குரிய எம்.டி.ஆர்.ரி பட்டியலில் முன்னணி நிறுவனங்களின் ஒன்றாக ஏ.ஐ.ஏ தன்னை நிலை நிறுத்தியுள்ளது. 48 வெல்த் பிளேனர்கள் மற்றும் 15 பேங்க்அஷ்வரன்ஸ் (காப்புறுதி விற்பனை) அதிகாரிகள் இதில் அடங்குவதுடன், மீண்டும் ஒருமுறை தேசத்தின் சிறந்த ஆலோசகர்களை ஏ.ஐ.ஏ கொண்டுள்ளதை இது உறுதிப்படுத்தியுள்ளது.

**வணிகம்**

ஆயுள் காப்புறுதித் துறை மற்றும் நிதிச் சேவைகள் வியாபாரத்தில் உலகிலேயே மிகவும் முதற்தரமான, கௌரவமான மில்லியன் டொலர் வட்ட மேசைச் சம்மேளனம் கருதப் படுகின்றது. அதன் அங்கத்தவர்கள் குறிப்பிடத்தக்க அளவு கட்டுப்பணம், தரகு, மற்றும் வருமானத்தை ஈட்ட வேண்டும் என்பதுடன், சிறப்பான நிபுணத்துவ அறிவு, கண்டிப்பான ஒழுக்க நடத்தை மற்றும் சிறப்பான வாடிக்கையாளர் சேவையையும் வெளிப்படுத்த வேண்டும். இந்தச் சாதனையாளர்கள் அனைவரையும் AIA குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியும், தலைவருமான மார்க் டக்கர் இலங்கைக்குப் பயணம் செய்து விருந்துபசாரத்திலும் பங்குபற்றி தனிப்பட்ட முறையில் பாராட்டினார். இந்தப் பயணமானது, இலங்கையில் முதற்தர எம்.டி.ஆர்.ரி நிறுவனமாக ஏ.ஐ.ஏ.யைத் திகழச் செய்த இந்தச் சாதனையாளர்களின் கடுமையான உழைப்பு மற்றும் உயர் ஆற்றல் கொண்ட நிபுணத்துவத்துக்கு, வழங்கிய கௌரவமாகும். (த)

## 'ஏஷியன் பாங்கர்' சஞ்சிகையின் தெரிவில் 8ஆவது தடவை எச்.என்.பி மிகச் சிறந்த நுகர்வுச் சேவை வங்கி

வாடிக்கையாளர் நிதிச் சேவைகள் துறையில் மிகச் சிறந்த வங்கியைத் தெரிவு செய்து பாராட்டுவதற்காக ஏஷியன் பாங்கரினால் அண்மையில் ஹொங்கொங்கில் நடத்தப்பட்ட சர்வதேச தரச் சிறப்பு விருதுகள் -2016 நிகழ்வில் மிகச் சிறந்த நுகர்வுச் சேவை வங்கி என்ற விருதை எச்என்பி மீண்டும் வென்றது. ஏஷியன் பாங்கர் வருடாவருடம் வழங்கும் இந்த மதிப்பார்ந்த விருதை ஹற்றன் நஷனல் வங்கி 8ஆவது தடவையாகப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏஷியன் பாங்கர் என்பது உலகளாவிய நிதிச் சமூகத்தில் மிகுந்த நன்மதிப்பு வாய்ந்த ஓர் அமைப்பாகும். 2016 ஆம் ஆண்டின் விருதுகள் நிகழ்வில் 42 நாடுகளைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட வங்கிகள் மிகச் சிறந்த



நுகர்வுச் சேவை வங்கி என்ற விருதுக்காகப் போட்டியிட்டன. வங்கிச் சேவைகள் துறையில் வலுவான தரிசனம், இலாபகரமான செயற்பாடு மற்றும் சந்தையில் வகிக்கும் முன்னணி நிலை என்பவற்றை இந்த விருது பிரதிபலிப்பதால், சகல பிரதான வங்கிகளும் இந்த மதிப்பார்ந்த விருதைப் பெறுவதில் ஆர்வம் காட்டுகின்றன.

எச்என்பிக்கு விருது வழங்கப்பட்டமைக்கான பிரதான காரணங்களை ஏஷியன் பாங்கர் தனது செய்தி வெளியீடு ஒன்றில் பின்வருமாறு எடுத்துக்கூறியுள்ளது:

இணையற்ற வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கு முக்கியமான நிறுவன மூலோபாயங்களும் முன்முயற்சிகளும் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துவதற்குத் தகவல் தொழில்நுட்பத்தில் கணிசமான முதலீடுகள் மும்முரமான விற்பனை முயற்சிகள் மற்றும் மதிநுட்ப மான விற்பனை அணுகுமுறைகள் மூலம் வாடிக்கையாளர் வியாபாரத்தில் அதிசிறந்த வளாச்சி எஸ்எம்ஜி மற்றும் நுகர்வு வங்கிச் சேவைப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் திமால் பெரேரா, எச்என்பியின் சார்பில் விருதைப் பெற்றுக்கொண்ட பின் பேசுகையில்; நாட்டின் நெருக்கடியான பொருளாதாரச் சூழலின் மத்தியிலும் நாம் ஈட்டிய சிறந்த நிதிப் பெறுபேறுகள், அனைத்து விடயங்களிலும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட எமது அணுகுமுறை, அதிநவீன டிஜிற்றல் தொழில் நுட்பத்தில் நாம் வகிக்கும் முன்னணி நிலை, பல்வேறு சமூக பொருளாதாரப் பிரிவினருக்கும் வங்கியியல் தீர்வுகளை வழங்கியமை என்பனவே எமது வெற்றிக்கு வழிகோலிய காரணங்களாகும் என்று கூறினார்.

ஏஷியன் பாங்கர் [illegible] தெரிவு செய்வதற்கு முன்னர் மிகவும் கண்டிப்பான அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீட்டை மேற்கொள்கிறது.

ஆகவே, இந்த விருது எமது மூலோபாயங்கள் மற்றும் முன்முயற்சிகளுக்குக் கிடைத்த உண்மையான மற்றும் சுயாதீனமான அங்கீகாரமாகும். இதன் மூலம் இலங்கையில் மாத்திரமன்றி ஆசிய-பசிபிக் மற்றும் மத்திய கிழக்குப் பிராந்தியங்களிலும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எச்என்பியின் முகாமைப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனதன் அலஸ் கருத்து வெளியிடுகையில்; ஏஷியன் பாங்கரினால் வழங்கப்பட்டுள்ள இந்த விருது, வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற சேவைகளையும் அனுபவத்தையும் வழங்குவதுடன் புதுமையான வழிகள் மூலம் சேவைத் தராதரங்களை தொடர்ச்சியாக உயர்த்துவதில் HATNA குடும்பம் கொண்டுள்ள ஆற்றல் மற்றும் ஆர்வத்துக்குச் சான்றாகும் என்று குறிப்பிட்டார். இந்த விருதை 8ஆவது தடவையாக வென்றதன் மூலம், வழமையான கொடுக்கல் வாங்கல் வங்கிச் சேவைக்கு அப்பால் சென்று வாடிக்கையாளர்களுடன் நெருக்கமான மற்றும் பயனுள்ள உறவுகளை வளர்த் துக்கொள்ளும் வங்கி என்ற நிலையை எச்என்பி உறுதிப்படுத்தியுள்ளது. இதன் பயனாக, இலங்கையிலுள்ள ஒவ்வொருவரின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்துக்கு உதவுவதுடன், தேசிய அபிவிருத்திக்கான பங்காளியாகவும் எச்என்பி விளங்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள பிரதான தனியார் வர்த்தக வங்கிகளுள் ஒன்றான ஹற்றன் நஷனல் வங்கி, நாடெங்கிலும் பரந்த விரிவான கிளை வலையமைப்பைக் கொண்டுள்ளது. சமூகத்திலுள்ள சகல பிரிவினருக்கும் உகந்த வங்கிவசதிகளையும்சேவைகளையும்அதுவழங்குகின்றது. குழுமத்தில் இடம்பெறும் நிறுவனங்களின் ஊடாக காப்புறுதி மற்றும் மூலதனச் சந்தைச் செயற்பாடுகளிலும் வங்கி ஈடுபடுகின்றது. 2015ஆம் ஆண்டின் இறுதியில் எச்என்பி குழுமச் சொத்துக்களின் பெறுமதி ரூ.750 பில்லியனாக இருந்தது. குழுமம் வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.11 பில்லியனைப் பெற்றது. இலங்கையில் சர்வதேச கடன் தர மதிப்பீட்டைப் பெற்ற முதலாவது வங்கி என்ற பெருமை 2012ஆம் ஆண்டில் எச்என்பிக்கு கிடைத்தது. Moody's Investors Service இன் Soverign தரப்படுத்தலுக்குச் சமமான B1 என்ற வெளிநாட்டு நாணய வழங்குநர் தரப்படுத்தல் ஃபிச் ரேட்டிங் (லங்கா) லிமிட்டட்டின் AA- (lka) என்ற தேசிய நீண்டகால தரப்படுத்தலையும் எச்என்பி பெற்றுள்ளது.

எச்என்பி எஸ்எம்ஜி மற்றும் நுகர்வு வங்கிச் சேவைப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளா திமால் பெரேரா விருதுடன் காணப்படுகின்றார். இடமிருந்து வலமாக சமன் பெரேரா (எச்என்பி), காஞ்சனா கருணாகம (எச்என்பி), ஏஷியன் பாங்கர் நுகர்வு நிதிச் சேவைகள் விருதுத் திட்டத்தின் ஆலோசனைச் சபை அங்கத்தவர்களான வில்சன் சியாஈ பிலிப்பே பைலாட், கை மக்ராத், ஃபூ பூன் பிங், வருன் சப்லோக், குலதுங்க (எச்என்பி), ஷிர்லால் பெரேரா (எச்என்பி), டேமியன் ரஞ்ஜித (எச்என்பி) ஆகியோரையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீரென

தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், போர்க்கால மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் தொடர்பாகவே முக்கியமாக ஆராயப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஒரு அங்கமானபூகோளகுற்றவியல்அலுவலகம்,போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் குறித்த விவகாரங்கள் குறித்து, அமெரிக்க இராஜாங்கச் செயலர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம், மனித உரிமைகள் விவகாரங்களுக்கான அடிநிலைச் செயலர் ஆகியோருக்கு ஆலோசனை வழங்குவதாகும்.

பெரியளவிலான கொடூரங்களுக்குப் பொறுப்புக்கூறுவதை அடிப்படையாகக் கொண்ட, அமெரிக்காவின் கொள்கைகளை வகுப்பதற்கு பூகோளக் குற்றவியல் நீதிக்கான அலுவலகமே உதவி வருகிறது.

குறித்த அலுவலகம் முன்னர், தூதுவர் ஸ்டீபன் ராப் தலைமையில் செயற்பட்டது. தூதுவர் ஸ்டீபன் ராப் இலங்கைக்குப்பயணம்மேற்கொண்டு, போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கான அவசியத்தை வலியுறுத்தியவராவார்.

அவர் அந்தப் பணியில் இருந்து விலகிய பின்னர், பூகோளக் குற்றவியல் நீதிக்கான அலுவலகம், சிறப்பு இணைப்பாளர் என்று புதிய பதவியின் கீழ், ஜனாதிபதி ஒபாமாவினால் கொண்டு வரப்பட்டது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம், பூகோளக் குற்றவியல் நீதிக்கான அலுவலகத்தின் சிறப்பு இணைப்பாளராக, ரொட் எவ். புஜ்வால்ட் நியமிக்கப்பட்டிருந்தார். இவர், அமெரிக்காவின் சட்ட அலுவலகத்தின் சட்டத்தரணியாகப் பணியாற்றியவராவார். இவரே தற்போது இலங்கைக்கு திடீர்ப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். இவரது பயணம் தொடர்பாக முன்கூட்டியே அறிவிப்புகள் எதுவும் விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## அனல்

கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஆர்ப்பாட்டப் பேரணி முடிவில், பிரதேச செயலாளரைச் சந்தித்து உத்தேச சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தைக் கைவிடுமாறு ஜனாதிபதியைக் கோரும் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. மூதூர் பிரதேசத்திலுள்ள சம்பூர் பகுதியில் இந்தியா மற் றும் ஜப்பான் உதவியுடன் இரு அனல் மின் நிலையங்களை அமைப்பதற்கு முந்தைய அரசினால் தீர்மானிக்கப்பட்டு, அதற்கான காணிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தற்போது குறித்த அனல் மின் நிலையத்துக்கான ஆரம்ப கட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்ற நிலையில், இதற்கான எதிர்ப்புகளும் வலுப்பெற்று வருகின்றன. அந்தப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்திருந்த கால கட்டத்தில் இந்த மின் நிலையத்துக்கான இடம் தேர்வாகியிருந்தது. தற்போது அந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியேறி வருகின்ற நிலையில், அவர்களுக்கும் சூழலுக்கும் இந்த மின் நிலையம் பாதிப்பாக அமையும் என சுற்றச்சூழல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாக இலங்கை - இந்தியா இரு நாடுகளுக்குமிடையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பதவிக் காலத்தில் 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. 512 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 500 மெகா வாட்ஸ் மின் உற்பத்தியை இலக்காகக் கொண்டு அனல் மின் நிலையத்திற்கு 540 ஏக்கர் காணி அடையாளமிடப்பட்டது.

மக்கள் குடியிருப்பு இல்லாத காலப்பகுதியில் அனல் மின் நிலையம் தொடர்பான சுற்றுச் சூழல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றும், மீள் குடியேற்றத்திற்குப் பிந்தைய காலத்துக்கு அது பொருந்தாது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (த-வ-5)

## மீட்கப்பட்ட

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மீட்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்டவை எனத் தெரிய வந்துள்ளது. இருப்பினும், இந்த வெடிபொருள்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு தற்பொழுது விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினராவார். இவரைக் கொழும்பு தலைமையகத்தில் தடுத்து வைத்து விசாரணைகளைப் பயங்கரவாத தடுப்புப் பிரிவு முன்னெடுத்து வருகின்றது. குறிப்பிட்ட நபரின் கையடக்கத் தொலைபேசியிலிருந்து பெறப்பட்ட சந்தேகத்துக்கிடமான இலக்கங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார் (த-வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி ராணிமேரி திரேஸ் மனுவேற்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியை - இளவாலை)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராணிமேரி திரேஸ் மனுவேற்பிள்ளை 30.03.2016 இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளவாலை சித்த ஆயுள்வேத வைத்தியர் காலஞ்சென்ற சத்தியாப்பிள்ளை அருளப்பு - விக்ரோறியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி செசிலியா - அந்தேனிப்பிள்ளை, திருமதி அல்பீனம்மா - மனுவேற்பிள்ளை(ஓய்வுபெற்ற ஆசிரியை), ஜோசப் அல்போன்சஸ் - மேரிதிரேசா(ஓய்வு பெற்ற அதிபர்), அருட்சகோதரி. செசன் ஜெறோம்(திருக்குடும்ப கன்னியர்மடம் ) திருமதி பொலின்றோசா - சுவாம்பிள்ளை, திருமதி மேரி றோஸ்விந்தா - ஜேசுதாசன்(ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (02.04.2016) சனிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து புனித அன்னம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல 03, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**


(A/c 08) (14.17.18)

தகவல்:
**A.N.J.சொர்ணராஜா**
**(பேறாமகன்)**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் அரசகுமார்

**தோற்றம்**
**19 . 11 . 1951**



**மறைவு**
**25 . 03 . 2016**

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Winterthur ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அரசகுமார் 25.03.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலினியின் அன்புக் கணவரும் அஜந்தா (சுவிஸ்), ஜெயந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மகுமார்(சிறி முத்துமாரி அம்மன் ரேடர்ஸ் - யாழ்ப்பாணம்), நந்தகுமார்(Paris), சிவகுமார்(முன்னாள் பிரதம சிறாப்பர் யாழ் மாநகரசபை), சாந்தினி(கனடா), விஜயகுமார் (டென்மார்க்), சந்திரகுமார்(நீர்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கமலாம்பிகை ராஜினி(Paris), சோதிமலர்(நீர்வேலி), பரமேஸ்வரன்(கனடா), சாமினி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் உதயகுமார் (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமனாரும் ஜெயந்தன், கரேதன், உமாஜெனி, சிரஞ்சீவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.04.2016) திங்கட்கிழமை சுவிஸ் Winterthur இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சு.சிவகுமார்(சகோதரன்)**

**044 300 3390**
**078 731 1338**

**077 803 4061**
**021 205 4829**

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி நடராசா



வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடராசா 31.03.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரவேலு - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் கந்தசாமி, மனோகரமாலா, வரதலட்சுமி, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் வரதராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி காலஞ்சென்றவர்களான தனஞ்செயன், தருமபாலு மற்றும் சாந்தா, சுமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் மங்கையற்கரசி காலஞ்சென்றவர்களான சவுந்தரநாயகி, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், கணேசபிள்ளை, நாகராசா மற்றும் யோகலீலாவதி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் துஷ்யந்தி, ரசியந்தி, அனவரதன், கிருஷாந்தி, ஜெஜேந்திரா, விஜிதா, கமலேஸ்வரன், கௌதமன், ஜனகன் (பிரான்ஸ்), கார்த்திகா (ஆசிரியை - வவுனியா), கௌசல்யா, சர்வானந்தன், சர்வேஸ்வரன், சர்வாம்பிகை, சதீஸ்வரன், வசிதீபன் காலஞ்சென்ற ஜெயதீபன் மற்றும் வர்சிகா, வருதினி, வதுசன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4ஆம் வட்டாரம்,**
**வேலணை கிழக்கு,**
**வேலணை.**

(A/c 09) (14.17.18)

தகவல்:
**ந.கந்தசாமி (மகன்)**

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை தங்கராசா

### (ஊழியர் - யாழ்.போதனா வைத்தியசாலை)



சாவகச்சேரி, முதலாம் கட்டை, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும், இல.109, திருமகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை தங்கராசா 30.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேதவாணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வடிவேலு மற்றும் கணேசமணி தம்பதியரின் பெறாமகனும், யாழ்.மத்தியகல்லூரியின் பழைய மாணவர்களான தர்சன் (ஆசிரியர் - நவீல்ட் பாடசாலை-கைதடி),கோகுலன் (நியூ கமல் செரமிக்ஸ் - யாழ்ப் பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்தவராசா, சிவராசா, கமலாம்பிகை,பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஊழியர் - யாழ்.போதனா வைத்திய சாலை), நளாயினி (ஆசிரியர் - யா/மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்), நடனசபேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் இராசநட்சத்திரம், சிவனேசன் (பிரதேசசபை ஊழியர் - கொடிகாமம்), சத்தியபாமா (லண்டன்), காலஞ்சென்றவர்களான இரவீந்திரன் - லலிதாதேவி மற்றும் பத்மாவதி, காலஞ்சென்ற மோகனாம்பிகை மற்றும் இரகுநாதன் (ஊழியர் - இலங்கை மின்சாரசபை), சுவர்ணராணி, இரஞ்சினிதேவி மகாலிங்கம் ( ஜேர்மனி), இராஜ்குமார் ரஜி (லண்டன்), நந்தகுமார் வக்சலா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**109, திருமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

(அ/சீ 04) (11,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

## ஜெயராஜா மகிதன்

(இலங்கை வயம்ப பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன்)



மலர்வு 1989 . 04 . 21

உதிர்வு 2016 . 03 . 30

பல்கலைத் தோழனே!
பேதமில்லாஉபசரிப்பால் நற்
தோழமைகொண்டதம்பா!
வளாகவாழ்க்கையில் சந்தித்த உன் நட்பு
வாழ்நாள் முழுவதும் தொடருமென்றிருந்தோம்
சிரிக்கச் சிரிக்கப் பேசிசிந்திக்கவைக்கும் உன்
சிநேகிதம் கண்டுமகிழ்ந்திருந்தோம்
வயம்பவாழ்க்கைநிறைவடைகையிலே
மலரும் தோழமைநினைவுகளுடன் சிதறினோம்
வளரும் நம் தோழமைஎன்று....
பல்கலைத் தேவைக்காய் வந்த உன் உயிரைப்
பாதையில் காலன் கவர்ந்தசெய்தி
காற்றாய்ப் பறக்கையில் கதிகலங்கிப் போனோம்
காற்றிலேவந்தசேதிபொய்யாகிப் போகாதோ...?

உயிராகமிளிர்ந்தஉறவே! -தோளோடு
துணைநின்றதோழா!
நிழலாகிப் போனஉந்தன்
நீங்காதநினைவுகளோடுவாழும்,

-வயம்ப நண்பர்கள்-
கால்நடைமீன்பிடிமற்றும் போசாக்குபீடம்,
இலங்கைவயம்பபல்கலைக்கழகம்.

# சாவகச்சேரி சம்பவம் குறித்து விரிவான விசாரணை தேவை

## கூறுகின்றார் கோத்தபாய

சாவகச்சேரியில் வெடிபொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டமை தொடர்பாக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் , போரின் முடிவில் இராணுவத்தினரிடம் சரணடை யாதவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவில்லை. அவர்கள், மோசமான அச்சுறுத்தலாக உருவாகக்கூடும் என்றும் கோத்தபாய ராஜபக்ச எச்சரிக்கை விடுத்துள்ளார். (த-ஐ-5)

# கண்ணீர் அஞ்சலி



வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் (J/417) திருமதி ரஜனி தவச்செல்வம் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சிவக்கொழுந்து வேலாயுதம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் அனைத்து
உத்தியோகத்தர்களும்,ஊழியர் நலன்புரிசங்கம்
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

# 2 ஆம் ஆண்டு நினைவுகள்



மலர்வு 09.11.1943
உதிர்வு 25.03.2014

திதி: பங்குனி மாதத்து
வளர்பிறை தசமி

## அமரர் முருகேசு கந்தையா

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்திரே
பாசத்தை ஊட்டி எம்மை சுவாசிக்க வைத்திரே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்– உம்மைப் போல்
ஓர் உறவு இவ் ஜென்மத்தில் ஏது?
இரு ஆண்டுகள் அல்ல இருநூறு ஆண்டுகள்
சென்றாலும் எம்முடன் இருப்பீர் உயிராக.

உசன்
மிருசுவில்.

குடும்பத்தினர்.

# வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் சின்னக் கடைப் பகுதியில் கடை வாடகைக்குண்டு.

தொடர்பு : 077 433 4522

# விற்பனைக்குண்டு

தரமான சிமெந்துக் கற்கள், தூண்கள் மலிவு விலையில்!

யாழ்ப்பாணத்திற்கும், ஒப்பந்தகாரருக்கும் விசேட சலுகை.

தொடர்புக்கு: 075 0391980

# கடைகள் வாடகைக்கு உண்டு

A9 வீதி, கொடிகாமத்தில் NSB வங்கியுடன் இணைந்த மூன்று கடைகள் சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 394 4912

# தவறிவிட்டது

அம்பலவாணர் வீதி அத்தியடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தெய்வ சந்நிதானத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட கறுப்பு பாசிமணிகோர்த்த தங்கமாலை காணாமற் போய்விட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 1337894

# விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேர்மன் செப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், பொம்மேரியன் ஆண், பெண் நாயும் 45 நாள் பூர்த்தியான குட்டிகளும் பொக்கட்ஸ் பனியர் ஆண், பெண் நாயும்.வான் கோழிக்குஞ்சு, சிலக்கி, மணிதாரா, வெள்ளடியன், ஒரு வயது நிரம்பிய யமுனாபறி கிடாய், 8 மாத கிடாய்க் குட்டிகளும்.

தொடர்பு : மயூரன் பாம் சென்ரர்.
நீர்வேலி கந்தசாமி கோவிலடி. 077 015 8690

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
07.06.1977

இறப்பு
19.02.2016

## அமரர் நந்தகுமார் மலர்விழி

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய்
வாழ்ந்து வழிகாட்டிய
எமது அன்பு குல விளக்கே
அவனிதனில் எம்மை விட்டுப் பிரிந்து
நாள்கள் 45 ஆகிவிட்டது
ஆனால் நீர் எம் மனதைவிட்டு
என்றும் நீங்கவில்லை.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் (03.04.2016) ஞாயிற்றுக்கிழமை பொது அழைப்பாக ஏற்று பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கே.கே.எஸ்.வீதி,
பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்.

க. நந்தகுமார்(கணவர்),
ப. போன்பகாவதை(தந்தை),
மற்றும் குடும்பத்தினர்.

ESOFT
Shaping Lives, Creating Futures

புத்தாண்டு வாசி

50% வரை கழிவு

Diploma in Computerized Accounting
Diploma in English

25% வரை கழிவு

Diploma in Information Technology
Diploma in Business Management
Diploma in Web Engineering
Diploma in Software Engineering
Diploma in Hardware & Networking
Diploma in Academic English
Diploma in Multimedia
Diploma in Internet Marketing

Assured by PEARSON

UK+ESOFT

இக்கொடுப்பனவு ஏப்ரல் 01 முதல் 30 திகதிக்குள் பதிவு செய்பவர்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும்

ESOFT METRO CAMPUS
No: 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தின நிகழ்வுகளை நடத்தத் தயாராகிறது பொது எதிரணி

## தடுப்பதற்கு சு.க.மத்திய குழு திட்டம்

கொழும்பு, ஏப்.2

மே தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் குறித்து பிரதான கட்சிகள் தீவிரமாக ஆலோசனை செய்து வரும் நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 38 பேர், மகிந்த ஆதரவுப் பொது எதிரணியினர் ஏற்பாடு செய்யவுள்ள மே தின நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும், இதனைத் தடுத்துக் கட்சியை ஒற்று மைப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த முறை நடைபெற்ற மே தின நிகழ்வுகளின் போதும்,மகிந்த ஆதரவு அணியினர் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பவை தனித்தனியே பேரணி மற்றும் கூட்டங்களை கொழும்பில் நடத்தியிருந்தனர். அதனால், இரண்டு தரப்பினரதும் நிகழ்வுகள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை. இந்த நிலையில், மீண்டும் மகிந்த ஆதரவுப் பொது எதிரணியினர் கொழும்பில் பேரணி மற் றும் கூட்டத்தை நடத்தவுள்ளனர். அதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதனைத் தடுப்பதற்காக சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறி சேன தலைமையில் விசேட பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், பிளவைத் தடுப்பதற்கான முயற்சிகள் மிகவும் வெற்றிகரமாக முன் னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார். கட்சியைப் பிளவுபடுத்த வேண்டும் என்ற நோக்கம் பசில் ராஜபக்ச உள்ளிட்ட சிலருக்கே உள்ளது.

ஆனால்,பொது எதிரணியில் உள்ள மகிந்தானந்த அளுத்க மகே, குமார் வெல்கம, டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பெருமளவிலானவர்களுக்குகட்சியைப் பிளவுபடுத்துவதற் கான எவ்வித நோக்கமும் இல்லை. இதனை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர். சுதந்திரக் கட்சிக்கு எதிராகப் பொது எதிரணியினர் மே தின ஊர்வலம் மற்றும் பேரணியை நடத்தவுள்ளனர் என்று அறி கின்றோம். இதில் சுதந்திரக் கட்சியினர் எவரும் பங்கேற்கமாட்டார்கள். அதற்கான சமரசப் பேச்சுக்கள் தற் போது நிறைவுக்கு வருகின்றன என வும் அவர் தெரிவித்துள்ளார்.

(த-ற-ஐ-5)

## முல்லைத்தீவு மீனவருக்குப் படகு; இந்தியா – இலங்கை உடன்படிக்கை



முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு 150 படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கும் உடன்படிக்கையில் இந்தியாவும் இலங்கையும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கையொப்பமிட்டுள்ளன.


மீன்பிடி நீரியல் வள அபிவிருத்தி அமைச்சில் இடம் பெற்ற புரிந்துணர்வு உடன்படிக்கை கையொப்பமிடல் நிகழ்வில் இந்திய அரசின் சார்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே .சின் ஹாவும், இலங்கையின் சார்பில் மீன்பிடி நீரியல்வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளரும் கையொப்பமிட்டனர்.

150 மீன்பிடி படகுகளும், மீன் பிடி உபகரணங்களும் முல்லைத் தீவிலுள்ள 300 பயனாளிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-ஐ-5)

## மரண அறிவித்தல்கள்

### சூசைப்பிள்ளை நீற்றப்பா



4ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை நீற்றப்பா 30.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (02.04.2016) சனிக் கிழமை பி.ப 2.00 மணிக்கு புனித இராஜப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித இராஜப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**4 ஆம் வட்டாரம்,**
**மண்டைதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### கந்தையா நாகராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



வட்டு தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகராசா 01.04.2016 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-விசாலாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-தெய்வானை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கண்மணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான திருமதி நாகரட்ணம், நாகசெல்வம் ஆகியோரின் சகோதரனும் தையலம்மா, காலஞ்சென்றவர்களான சொர்ணலிங்கம், சீதாலட்சுமி, வைத்திலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சாந்தினி, பரமகாந்தன், காலஞ்சென்ற சிவகாந்தன், வசந்தினி, பிரேமினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ரமணி, யசோதா, அனசுயா ஆகியோரின் அன்பு மாமனாரும் ராஜகாந்தன், செல்வ காந்தன்.கல்யாணி ஆகியோரின் பெரிய தந்தையுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.04.2016 திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**லீலா கடையடி,**
**மூளாய் றோட், வட்டு தெற்கு ,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### நாகமுத்து அருளையா



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து அருளையா 01.04.2016 நேற்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அருளையாவின் அன்பு மனைவியும் கிருஸ்ணானந்ததேவி (பாப்பா-ஜேர்மன்), அழகானந்த தேவி (வவா), யோகானந்ததேவி (தேவி), இந்திராதேவி (இந்திரா-லண்டன்), கந்தசாமி (பெரியராசு-பிரான்ஸ்), கிருஸ்ணசாமி (சின்னராசு) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராசா (ஜேர்மன்) மற்றும் இராசகிளி, கந்தசாமி தயாபரன் (லண்டன்), கோகிலா (ஜேர்மன்), கவிதா (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிறிசசிகரன் (ஜேர்மன்),கார்த்திகா (ஜேர் மன்), தபோதரன் (ஜேர்மன்), விந்துசன், தனுசா, சுவ னிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அப்பையா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தைய ா இராசம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று(01.04. 2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் **சின்னராசா சதீஸ்வரன்** அவர்களின் அன்புத் தந்தை

**சின்னத்தம்பி சின்னராசா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர்**
**நலன்புரி கூட்டுறவு சங்கம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை

(தென்னை பயிர்ச்செய்கை சபை ஓய்வுநிலை அலுவலர்)



மாசார், பளையைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தாமோதரம்பிள்ளை 31.03.2016 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சரஸ் வதிப்பிள்ளையின் அருமைக் கணவரும், அனுராதா, காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் வடிவேலு (துயா), காலஞ்சென்ற உதயணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முருகானந்தம், சசிகலா ஆகியோரின் மாமனும், தினேகா, பவநிதன், கீர்த்திகா, தேனிலவன் ஆகியோரின் பேரனும், சிவேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர் களான திருநாவுக்கரசு, பாலசுந்தரம் ஆகியோரின் சகோதரரும், அச்சுதம்பிள்ளையின் (கனடா) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.04.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முடங்குதீவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**மாசார், பளை.**
T.P: 0773364561

(51) (10.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்**



## பிலோமினா ஆசீர்வாதம்

**மலர்வு 14.11.1949 உதிர்வு 01.04.2016**

முள்ளியவளை 4ஆம் வட்டாரத்ததைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் மரக்காரம் பளை வீதி, தாஸ்கோட்டம், வவுனியாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பிலோ மினா ஆசீர்வாதம் 01.04.2016 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வா தத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற டக்ளசின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04. 2016) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் தாஸ்கோட்டம் குழந்தையேசு ஆலயத்தில் ஆத்மசாந்தி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நெளுக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**இ.பேரின்பராணி (அதிபர் -**
**மு/ கைவேலி கணேச வித்தியாலயம்)**
**புதுக்குடியிருப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 2

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**உடுவில் பிரதேச விளையாட்டு**

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கால்பந்தாட்ட இறுதியாட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் அணி மோதவுள்ளது.

**அரியாலை கரப்பந்தாட்டம்**

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில், இரவு 7 மணிக்கு இடம்பெறும் பி பிரிவு ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாகம் நியூவொரியஸ் அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணி மோதவுள்ளது. ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரவு 8.30 மணிக்கு இளவாலை மத்திய அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டம்**

கே.ஸி.ஸி.ஸி. வி.கழகம் நடத்தும் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சென்றல் அணியும் பிற்பகல் 1.30 மணிக்கு சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து காமாட்சி அணியும் மோதவுள்ளன.

(ம-23-422)

# மகாத்மா, ஐயனார் வி.கழகங்கள் வென்றன நாமகளின் கால்பந்தில்

யாழ்ப்பாணம், ஏப். 2

நாமகள் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் மகாத்மா, ஐயனார் அணிகள் வெற்றிபெற்றன.

தொடர் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் புத்தூர் விக்கி னேஸ்வரா அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா அணி மோதிக் கொண்டது. இதில் சாவற்கட்டு மகாத்மா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை கலையொளி அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதிக் கொண்டது. இதில் துறையூர் ஐயனார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

# யாழ். தாச்சித் தொடரின் காலிறுதியாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 2

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் காலிறுதி ஆட்டங்களின் முடிவுகள்:

முதலில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து 'ஏ' அணியை எதிர்த்து வசந்தசிறி அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடி சிந்து 'ஏ' அணி 9:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி அணி மோதிக்கொண்டது. இதில் புதுமடம் வைகறை அணி 8:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. மூன்றாவது காலிறுதியாட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து 'பி' அணியை எதிர்த்து கோண் டாவில் மறுமலர்ச்சி அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா 4 புள்ளிகளைப் பெற்றதினால் வெற்றியைத் தீர்மானிக்க மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன. இதில் உடுவில் ஆலடிசிந்து 'பி' அணி 4:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

(ம-23)

## கருத்தரங்கு

இலங்கை கபடிச் சம்மேளனத்தினால் தேசிய நடுவர்களை இணைப்பதற்காக நடத்தவுள்ள பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் வதிரி தேவரை யாளி இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது. குறித்த பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-108)

# மத்தியின் வர்ண இரவு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படவுள்ள வர்ண இரவு விருதிற்கான விண்ணப்பங்கள் கல்லூரியின் பழைய மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளதாகக் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

மத்திய கல்லூரியில் கல்வி கற்று விளையாட்டுத்துறை அமைச்சு, கல்வியமைச்சு, இளைஞர் விவகார அமைச்சு, ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட தேசிய மட்ட சங்கங்கள் போன்றன நடத்திய தொடர்களில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய, தேசிய அணியில் இடம் பெற்ற, சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்ட, சர்வதேச போட்டிகளில் வெற்றியீட்டிய பழைய மாணவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பப் படிவங்களையும் சான்றிதழ்களையும் இந்த மாதம் 28ஆம் திகதிக்கு முன்னதாக அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதன் மூலம் தமது பதிவை மேற்கொள்ள முடியும்.

(ம)

## தமிழ்

2015 ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் இந்த நாட்டில் மூவின மக்களும் சுதந்திரமாக வாழும் நிலை இருக்கவில்லை. தொலைபேசியில்கூட மக்கள் தமது உறவுகளுடன் சுதந்திரமாக உரையாடக் கூடிய நிலை கூடக் கிடைக்கவில்லை. ஆனால், இதனை நாம் இன்று முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம்.

முப்பது வருட காலப் போரினால் முப்படையினரும், பொதுமக்களும் கொல்லப்பட்டனர். மீண்டும் இந்த நிலைவர நாம் இடமளியோம். வடக்கு, கிழக்கு, தெற்குக்கு அனைத்து விடயங்களிலும் பகிர்வுகள் சரியாக இல்லை. இதனை நாம் சரி செய்வோம்.

இந்த அரசு நாட்டைப் பிரிக்கப் போகின்றது என்றும், சர்வதேசத் திடம் நாட்டை அடிபணிய வைக்கப்போகின்றது என்றும் இனவாதிகள் சிலர் கூக்குரல் இடுகின்றனர். நாம் நாட்டை ஒரு போதும் பிரிக்கமாட்டோம். அதே வேளை, சர்வதேசத்திடம் நாட்டை அடிபணியவைக்கவும் மாட்டோம்.

இந்த இனவாதிகள் சில கனவுகளுடன்தான் இவ்வாறு பொய்ப் பரப்புரைகளைச் செய்கின்றனர். ஆனால், அவர்களின் கனவுகள் நிறைவேறமாட்டாது. இந்த அரசை எவராலும் அசைக்க முடியாது.

எம்முடன் ஒன்றிணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்புமாறு வெளியில் இருந்து ஊளையிடும் இந்த இனவாதிகளை நாம் வேண்டிக்கொள்கின்றோம் - என்றார்.

**இந்நிகழ்வில், அதிதியாகக்** கலந்துகொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உரையாற்றும்போது,

இந்த நாட்டை மீட்டெடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்த அர்ப்பணிப்பை மக்கள் எவரும் மறக்கமாட்டார்கள். இந்த அர்ப்பணிப்பை நாம் மதிக்கின்றோம்.

ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் மக்களின் வேண்டுகோளுக் கிணங்க வடக்கு, கிழக்கில் சிவில் ஆளுநர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கும் காணிகளும் படிப்படியாக விடுவிக்கப்படுகின்றன.

வலிகாமம் வடக்கு மற்றும் சம்பூரில் காணிகள் விடுவிக்கப்படுவது போல் மட்டக்களப்பிலும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கும் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில், அதிதியாகக் கலந்துகொள்ள எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர் இந்நிகழ்வில் பங்கேற்கவில்லை. ஆனால், தனது வாழ்த்துச் செய்தியை அவர் அனுப்பியிருந்தார். அதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபை அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் நிகழ்வு மேடையில் வாசித்தார்.

அதில்,

**அதிகாரப் பகிர்வைப் பெறு**வதற்காக முப்பது வருடங்களாக தமிழ் மக்கள் நடத்திய போராட்டங்கள் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புகள் மதிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். அதிகாரப் பகிர்வு ஊடாக மூவின மக்களும் ஒன்றிணைந்து வாழும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும் என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

(த-வ-சி)

## பால் விலை

59 ரூபாவில் இருந்து 62 ரூபாவாக அதிகரிக்கப்பட்டபோது, வாடிக்கையாளர்களின் நலன் கருதி விற்பனை விலை அதிகரிக்கப்படவில்லை.

எனினும் பின்பு சர்வதேச பால் நிறுவனங்களின் போட்டித் தன்மையாலும், உள்ளூர் பால் உற்பத்தியாளர்களின் நன்மை கருதியும் தற்போது கொள்விலை 67 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், விற்பனை விலையையும் 70 ரூபாவில் இருந்து 80 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது - என்றார்.

(த-வ-ரி)

## வற்வரி

என்று அவர் கூறியுள்ளார். அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க பெறுமதி சேர் வரியை 15 வீதமாக அதிகரிப்பதாக கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ)

## நிரந்தர

[illegible] தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு மாகாணத்தின் 4 கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர்கள், மாவட்டத்தின் கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரையும் கடந்த மாதம் அழைத்த வடக்கு மாகாண ஆளுநர், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

குறித்த சந்திப்பின் பின்னர் நேற்றுமுன்தினம் கொழும்பில் மாவட்ட நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பிலும் மீனவர்கள் சார்பில் எந்த விதமான தீர்மானங்களும் எட்டப்படாமல் சட்டத்துக்குப் புறம்பாக அத்துமீறித் தொழில் புரிபவர்களை நிரந்தரமாக மாவட்டத்துக்குள் புகுத்த முனைவது எமக்குப் பலமான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

மாகாண ஆளுநரை நம்பியே சந்திப்பில் எமது பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். எமது பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே இன்று அமைச்சர் மூல்லைத்தீவுக்கு வருகை தரும் போது, மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினை முன்வைப்பார் என நம்புகின்றோம். அவ்வாறு முன் வைக்கத் தவறும் பட்சத்தில், விரைவில் மாவட்டத்தில் உள்ள 26 சங்கங்களும் ஒன்றுகூடி, ஒரு தீர்மானத்தை எட்டுவோம். அந்தத் தீர்மானமானது நிச்சயமாக அரசுக்கு எதிரான தொடர் சாத்வீகப் போராட்டங்களாகவே அமையும் - என்றார்.

(த-வ-101)

## ஜனாதிபதியின்

பதி பங்கேற்கும் நிகழ்வுப் பிரதேசங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள் என்பனவும் துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

நாளை ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாணத்துக்குப் பயணமாகும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வவுனியாவுக்கும் வருகை தர உள்ளார். வவுனியாவில் இராணுவத்தினருக்காக அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டதைத் திறந்து வைத்து, அவர்களிடம் கையளிக்க உள்ளார்.

இந்த நிகழ்வை முன்னிட்டு பாதுகாப்பைப் பலப்படுத்தும் முகமாக வவுனியா பொலிஸார், இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஏ-9 வீதியில் வவுனியா-நொச்சி மோட்டைப் பாலத்தடி உட்பட பல்வேறு இடங்களில் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான வாகனங்களை மறித்துச் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதே வேளை கடந்த சில நாள்களாக வவுனியாவில் வர்த்தக நிலையங்களின் அனைத்து விவரங்களும் பொலிஸாரால் திரட்டப்பட்டிருந்தன.

மேலும் ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு காலதாமதமாக இதுவரை திருத்தப்படாதிருந்த வீதிகளான பசார்வீதி உட்பட 4 வீதிகள் துரிதகதியில் திருத்தப்பட்டு வருகின்றன.

(த-வ-21-402)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வென்றது அமரகவி

யாழ்ப்பாணம், ஏப். 2
அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இணுவில் அமரகவி அணியை எதிர்த்து மட்டுவில் ஞானதீபம் அணி மோதிக் கொண்டது. இதில் இணுவில் அமரகவி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# பெரிய திரையில் ரி-20

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நாளை நடைபெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இறுதி ஆட்டத்தை கார்கில்ஸ் வங்கி சுன்னாகம் கார்கில்ஸ் பூட் சிற்றிக்கு முன்பாகப் பெரிய திரையில் காட்சிப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. பிற்பகல் 5.30 மணி தொடக்கம் ஒளி பரப்பப்படும் என்று ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம)

# சோமர்செட்டுக்காக மகேல ஒப்பந்தம்

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மகேல ஜெயவர்தன, இங்கிலாந்தின் உள்ளூர் ரி-20 தொடரில், சோமர்செட் அணியின் சார்பாக விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம், கிறிஸ் கெயிலுடன் இணைந்து அவர் விளையாடவுள்ளார்.
மகேலவின் ஒப்பந்தம் தொடர்பாக சோமர்செட் அணியின் பணிப்பாளர் மற்மேநார்ட் தெரிவிக்கையில் - மகேல, சந்தேகப்படமுடியாத திறனைக் கொண்ட துடுப்பாட்ட வீரரொருவராவார். மைதானத்தில் அனைத்து முனைகளிலும் ஓட்டங்களைப் பெறக்கூடியவர். அவ்வாறான அனுபவமும் திறனும் கொண்டவர் கிடைக்கப்பெறும்போது, அவரைப் பிடித்துக் கொள்ள வேண்டும்- என்றார். (ம)






# எனது ஓய்வை நீங்களே தீர்மானியுங்கள்; டோனியின் வித்தியாசமான அணுகுமுறை

தனது ஓய்வு குறித்த கேள்வியை எழுப்பிய ஊடகவியலாளரை தனது வித்தியாசமான அணுகுமுறையால், குறித்த கேள்விக்கே பதில் வழங்க வைத்துள்ளார் இந்திய அணித்தலைவர் டோனி.
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தது. குறித்த ஆட்டத்துக்குப் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே குறித்த சம்பவம் நடைபெற்றுள்ளது. ஒரு ஊடகவியலாளர் டோனியிடம் நீங்கள் எப்போது ஓய்வுபெறப் போகிறீர்கள். உங்களால் தொடர்ந்து சிறப் பாக விளையாட முடியுமா? என்று கேட்டார். இந்தக் கேள்வியைக் கேட்ட அந்தச் செய்தியாளரைத் தன் அருகே அழைத்து அமர வைத்த டோனி, நான் ஓய்வு பெற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? என்று சிரித்துக்கொண்டே கேட்டார். அதற்கு, இல்லை... இல்லை... நான் ஒரு அறிதலுக்காக இவ்வாறு கேட்டேன் என்றார் செய்தியாளர். அதற்கு, நான் உடல்தகுதியுடன் இல்லை என்று நினைக்கிறீர்களா? என்று டோனி கேட்டார். இல்லை என்று பதில் வந்ததும் 'என்னுடைய ஓட்டத்தைப் பார்த்தீர்கள் தானே?' என்றார். 'ஆம்... ரொம்ப வேகம் தான்' என்றார் செய்தியாளர். அதன் பிறகும் விடாத டோனி, 2019 ஆம் ஆண்டின் உலகக்கிண்ணம் வரை என்னால் தாக்குப் பிடிக்க முடியும் என்று நினைக்கிறீர்களா? என்று கேட்க, 'நிச்சயமாக, ஆம் நிச்சயமாக' என்று அந்தச் செய்தியாளர் சொல்ல, 'அப்புறம் என்ன... நீங்களே கேள்விக்குப் பதில் சொல்லிட்டீர்கள்' என்று முடித்தார் டோனி.
மேலும் அவர் விளையாட்டாக விவரித்தபோது, இந்தக் கேள்வியை இந்தியச் செய்தியாளர் யாராவது ஒருவர் கேட்டிருக்க வேண்டும் என விரும்புகிறேன். ஏனென்றால் அவருக்குக் கிரிக்கெட் விளையாடும் மகன் இருக்கிறாரா எனக் கேட்டிருப்பேன், அந்த மகனுக்கு இலக்குக்காப்பு தெரிந்தால் அவர் எனக்கான மாற்றுவீரராக வரலாம் எனச் சொல்லியிருப்பேன். அவர் இல்லை என்று சொல்லியிருந்தால், ஒருவேளை உங்கள் சகோதரனால் விளையாட முடிந்து, அவர் ஒரு இலக்குக் காப்பாளராக இருந்தால் எனக்கு மாற்றுவீரராக வரலாம் எனச் சொல்லியிருப்பேன். நீங்கள் தவறான கேள்வியை தவறான நேரத்தில் கேட்டுவிட்டீர்கள்.. என்று சிரித்துக் கொண்டே ஜாலியாகச் சொன்னார் டோனி. டோனியின் இந்த வித்தியாசமான அணுகு முறை செய்தியாளர்களையும் பார்வையாளர்களையும் வெகுவாக ஈர்த்தது. (ம)

# மியாமி அரையிறுதிக்கு கெர்பர் தகுதிபெற்றார்

நடைபெற்றுவரும் மியாமி ரென்னிஸ் தொடரில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார் உலகின் மூன்றாம் நிலை வீராங்கனையான கெர்பர். கெர்பர், தனது காலிறுதி ஆட்டத்தில் மடிஸன் கீஸை எதிர்கொண்டார். ஆட்டத்தின் முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கெர்பர், தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாவது செற்றையும் கைப்பற்றினார். இதனால் அவர் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)





# இரகசியங்கள் வெளிவருவது எவ்வாறு? கட்டுப்பாட்டுச்சபையுடன் பாய்கிறார் யுனிஸ்

பாகிஸ்தான் அணியின் அண்மைக்காலப் பெறுபேறுகள் தொடர்பாகவும் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும், அவ்வணியின் பயிற்றுநர் வக்கார் யுனிஸால் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு அனுப்பப்பட்ட இரகசியமானதும் தனிப்பட்டதுமான அறிக்கை, ஊடகங்களுக்கு எவ்வாறு கிடைத்தது என, வக்கார் யுனிஸ் கேள்வியெழுப்பியுள்ளார்.
குறித்த அறிக்கை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவரிடமும் நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அது எவ்வாறு ஊடகங்களுக்குச் சென்றது எனவும் இது குறித்து பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் செரீப், கவனமெடுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேலும், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை விட அதிகமாக அரசியல், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குள்ளேயே காணப்படுகிறது எனவும் அவர் சாடியுள்ளார்.
வக்கார் யுனிஸின் அறிக்கையில் அணியின் தலைவரான அப்ரிடி, இளம் வீரர் உமர் அக்மல் ஆகியோர் மீது அதிக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ம)

# ஆஸ்திரேலிய அணித் தெரிவின் மீது விமர்சனத்தை முன்வைத்தார் வோர்ண்



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலிய அணி அரையிறுதிக்குத் தகுதி பெறாதமைக்கு அணித் தெரிவின் மீது தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளார் சேன் வோர்ண்.
அணித்தெரிவுகள் குறித்து, வோர்ண் வெளிப்படுத்துகையில் - இந்தத் தொடரில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்ணர், மத்திய வரிசையில் களமிறக்கப்பட, உலகத் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த ஆரொன் பின்ஞ், முதல் இரு ஆட்டங்களுக்கும் அணியில் சேர்க்கப்படவில்லை. முன்பு, சேன் வற்சனும் உஸ்மான் கவாயாவும் பின்னர் ஆரொன் பின்ஞ்சும் கவாயாவுமே ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இந்த முறைமை தவறு. வோர்ணர், ஆரொன் பின்ஞ் இணையே ஆரம்ப இணையாகக் களமிறங்கியிருக்க வேண்டும். கவாயா, மூன்றாவது வீரராகக் களமிறங்கியிருக்க வேண்டும். சகலதுறை வீரரான ஜோன் கஸ்டிங்ஸ் அணியில் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இறுதி நேரத்தில் பந்துவீசுவதற்கு அவரே சிறந்தவர். அணியில் மாற்றங்கள் அடிக்கடி ஏற்படுத்தப்பட்டன. இது பிற்போக்கான சிந்தனை. தெரிவு செய்த அணியொன்றை, தொடர்ந்தும் தெரிவுசெய்திருக்க வேண்டுமே தவிர, அதிக மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கக் கூடாது. என்றார். (ம)

# நாதன் மக்கலம் ஓய்வு

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடை பெறுவதாக அறிவித்துள்ளார் நியூசிலாந்து அணியின் சுழல் பந்து வீரரான நாதன் மக்கலம்.
நடைபெற்றுவரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில், இங்கிலாந்துக்கு எதிரான அரையிறுதியில் நியூசிலாந்து அணி தோல்வியடைந்தது. இந்த ஆட்டத்துடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக நியூசிலாந்து சுழற்பந்து வீச்சாளர் நாதன் மக்கல்லம் அறிவித்துள்ளார். 35 வயதான அவர், தனது ஓய்வு அறிவிப்பை டுவிட்டரில் வெளியிட்டுள்ளார். இவரது சகோதரரான பிரெண்டன் மக்கலம் அண்மையில் ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியன் ரெறாசோ சிப்ஸ்
விற்பனை ரூபா 1200/=
ரெறாசோ வேலைகள் செய்து தரப்படும்
"மாபிள்ஸ்"
சுழிபுரம் பத்திரகாளி கோயில் சந்தி, கண்டாலை, தொல்புரம்.
077 9541877, 077 355 3372

அறியத்தருகின்றோம்
SALE-(மலிவு விற்பனை) போடப்பட்டுள்ளது.
சகல விதமான புத்தகங்களும், பொது அறிவு.
O/L,A/L. புலமைப்பரிசில் பாஸ்பேப்பர்கள்.
இந்திய பல்துறையும் சார்ந்த புத்தகங்கள் (50% கழிவு) தரம் 1 முதல் 11 வரையான தவணைப் பரீட்சைப் பேப்பர்கள், அகராதிகள் இன்னும் பல 15.04.2016 வரை மட்டுமே)
(C/22427)(10.17.18)
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். 021 222 9881

Sky Computer System
சகலவிதமான Desktop pc, Laptop,
உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்
P:021-222-1417
89,கண்டி றோட், யாழ்ப்பாணம், (கச்சேரிக்கு அருகாமையில்)

COMPUTER SALE
மடிக்கணினி / மேசைக்கணினி / உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும் பகுதியாகவும் மிகவும் மலிவு விலையில்
Toshiba Laptop 28,500/= மட்டுமே.
4GB Ram 3250/= மற்றும் உதிரிப்பாகங்கள் நம்பமுடியாத விலையில்
முழு உத்தரவாதம்
ST.ANTONY'S
187, K.K.S Road, Jaffna Town.
021 222 4865 / 075 069 8608

யாழ் நகரின் No - 1 கல்வி நிறுவனம்
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
O/L DAY CLASS
பிரிவு - II - ஆரம்பம் 04.04.2016
திங்கள் காலை 8.00 மணி
- திங்கள் முதல் வெள்ளி வரை - வாரத்தில் 5 நாள்கள்
- காலை 8.00 - 2.00 மணிவரை
- அலகுப் பரீட்சைகளும், மாதாந்தப்பரீட்சைகளும்
- அனுமதிகள் இன்று முதல்
தொடர்புக்கு: 077 4598 440

CHEMISTRY COURT
(80, ARASADY ROAD, JAFFNA)
(தமிழ்/ஆங்கில மொழிமூல இரசாயனவியல் வகுப்புக்கள்)
2017 - A/L
சேதன இரசாயனம்
ஆரம்பம்: 03.04.2016 (5.30 p.m)
SAT,SUN,TUE,THR (5.30 - 7.00 p.m)
2018 - A/L
பொது இரசாயனம்
ஆரம்பம்: 04.04.2016 (6.30 a.m)
MON,WED,FRI (6.30 - 7.30 a.m)
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
BY: RAJAH

Bitsmans
கல்வி நிறுவனம் மானிப்பாய்
O/L DAY CLASS
"SUPERGRADE"
ஆசிரிய குழு
ஆரம்பம்
04.04.2016
திங்கள்
8.00 a.m
A/L 2018
- கலை
- வர்த்தகம்
- கணித
- உயிரியல்
- தொழில்நுட்ப
பிரிவுகள்
(வழமையான ஆசிரியர் குழு)
ஆரம்பம்
04.04.2016
திங்கள் 4.00 p.m

# இன்றைய பலப்பரீட்சை

கரணவாய், ஏப். 2

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர்,குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை அன்பாலயம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# வெய்ன் ரூனி இங்கிலாந்துக்குத் தேவை பயிற்சியாளர் ஹொட்க்ஸன் தெரிவிப்பு



தற்போதைய உலக சம்பியன்களான ஜேர்மனியை, வெய்ன் ரூனி இல்லாமலேயே இளம் இங்கிலாந்து அணி வென்றிருந்தாலும்,எதிர்வரும் ஆட்டங்களில் இங்கிலாந்தின் வெற்றிகளுக்கு ரூனிக்கு பெரிய பங்கு இருப்பதாக இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் பயிற்சியாளர் றோய் ஹொட்க்ஸன் தெரிவித்துள்ளார்.

பேர்லினில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சிநேகபூர்வ ஆட்டத்தில் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இங்கிலாந்து அணியின் தலைவரும் மன்செஸ்டர் யுனைற்ரெட் கால்பந்தாட்டக் கழகத்தின் முன்கள வீரருமான வெய்ன் ரூனி பங்கேற்றிருக்காத நிலையில், இரண்டு கோல்கள் பின்தங்கியிருந்த இங்கிலாந்து, பின்னர், 3-2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றிருந்தது. இந்த வெற்றிக்குப் பின்னர் இங்கிலாந்துக்கு ரூனி தேவை இல்லை என்ற கருத்து வெளிப்பட்டு வந்த நிலையிலேயே றோய் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ரூனி இங்கிலாந்து அணியில் இருந்து ஓரங்கட்டப்படுகிறார் போன்றதான செய்திகளை நான் அறிகிறேன். ரூனியை நீக்கும் எந்தத்திட்டமும் எம்மிடத்தில் இல்லை. அவர் இங்கிலாந்து கால்பந்தாட்ட தேசிய அணியின் தலைவர். அவர் இங்கிலாந்தின் வெற்றிகளுக்குத் தேவைப்படுகிறார் என்றார். (ம)



## பெல்ஜியத்தை வீழ்த்தியது போர்த்துக்கல்

போர்த்துக்கல், பெல்ஜியம் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற நட்பு ரீதியிலான கால்பந்தாட்டத்தில் 2:1 என்ற கோல்கணக்கில் போர்த்துக்கல் அணி வெற்றி பெற்றது. போர்த்துக்கல் சார்பாக, ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் நானியும் 40ஆவது நிமிடத்தில் கிறிஸ்டியானோ றொனால்டோவும் கோல்களைப் பெற்றனர். (ம)

## அரையிறுதியில் அசரெங்கா



மியாமி ரென்னிஸ் தொடரின் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார் உலகின் எட்டாம் நிலை வீராங்கனையான விக்டோரியா அசரெங்கா.

அசரெங்கா தனது காலிறுதி ஆட்டத்தில் பிரித்தானியாவின் ஜொகன்னாவை எதிர்த்து மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6:4 என்ற அடிப்படையில் கைப்பற்றிய அவர், தொடர்ந்து தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி இரண்டாவது செற்றையும் 6:2 என்ற கணக்கில் கைப்பற்றி அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Batch 1 : 04.04.2016
Batch 2 : 06.04.2016
Batch 3 : 09.04.2016
Batch 4 : 11.04.2016
No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
0770 365 728
Hotlines
0777585913, 0777222422, 071429935
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் [illegible] முந்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.